சைவ சமயக் கையேடு

தொகுப்பு :
ஆ. இராசரத்தின முதலியார்

சைவ சித்தாந்தப் பெருமன்றம்
சென்னை-600 004.

5-1

உ

திருச்சிற்றம்பலம்

சைவ சமயக் கையேடு

தொகுப்பு :

சிவநேயச் செல்வர்

ஆ. இராசரத்தின முதலியார்

வெளியீடு :

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

4, (முதல் மாடி) வேங்கடேச அக்கிரகாரம் சாலை

மயிலாப்பூர், சென்னை-600 004.

முதல் பதிப்பு : மே 1986
இரண்டாம் பதிப்பு : ஜூன் 1991

விலை ரூ. 15 (பதினைந்து)

அச்சிட்டோர் : கவின்கலை அச்சகம்,
கந்தசாமி நகர், பாலவாக்கம், சென்னை-600 041.
தொலைபேசி ; 41 71 41

உ

திருச்சிற்றம்பலம்



தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

(படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்)

5-1

உ

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

நம் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் 80-ஆம் ஆண்டு நிறைவு முத்து விழா தில்லையில் 1986-ம் ஆண்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது. பொன்விழா, மணி விழாக்களும் அத்திருத்தலத்திலேயே நிகழ்ந்தன.

முத்து விழாவின்போது நம் பெருமன்றப் புரவலர் சிவநேயச் செல்வர் திரு. ஆ. இராசத்தின முதலியார் அவர்கள் "சைவ சமயக் கையேடு" என்னும் பயன்மிக்க இந்நூலைத் தமது பொருட் செலவில் வெளியிட்டார்கள் இந்நூலைத் தொகுப்பதற்கு திரு. முதலியார் அவர்களுக்கு உதவியவர்கள் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. பி. எச். டி, வித்துவான் திரு. அம்பை சங்கரனார், திருப்பதி சாரம் திரு. கு. வைத்தியநாதன் மற்றும் பெருமன்ற முன்னாள் செயலாளர் திரு.ம. அண்ணாமலை ஆகியோராவர்.

சிவ நெறியாளர்கள் அனைவருக்கும் தெரிய வேண்டிய அரும் பொருட்குறிப்புகள் பலவற்றைத் தொகுத்து தோத்திரப் பகுதி சாத்திரப் பகுதி, பொதுப் பகுதி என மூன்று பிரிவுகளில் தொண்ணூறு தலைப்புகளில் இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் அருமைபெருமைகளை அறிஞர் பலர்தம் அணிந்துரை, பாராட்டுரைகளில் விளக்கியுள்ளனர்.

இந்நூலின் முதற்பதிப்பு மிக விரைவில் விற்பனையாகி விட்டது கொண்டே இதன் சிறப்பினையும், பயனையும் தெரிந்து கொள்ளலாம். அன்பர் பலர் ஆர்வமுடன் இந்நூலைக் கேட்பதால் முதற்பதிப்பில் விற்று வந்த தொகையைக் கொண்டும், திருமுறைக் காவலர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் நிறுவியுள்ள பெருமன்றக்கட்டடவாரிய நிதியிலிருந்தும் இவ்விரண்டாம் பதிப்பு அச்சிடப்பட்டு நம் பெருமன்றத்தின் 85 ஆம் ஆண்டு விழாவில் வெளிடப்படுகிறது.

முதற்பதிப்பிலிருந்த சில அச்சுப்பழைகள் நீக்கப்பட்டும், புதிதாகச் சில பயனுள்ள கருத்துக்களைச் சேர்த்தும் இவ்விரண்டாம் பதிப்பு வெளி வருகிறது.

முதற்பதிப்பைப் போலவே இப்பதிப்பையும் அன்பர்கள் பெற்று விரைவில் விற்பனைக்கு உதவினால் இந்நூலை மேலும் சில தகவல்களைச் சேர்த்தும், விரிவுபடுத்தியும் மற்றொரு வெளியீட்டைக் கொண்டு வர ஏதுவாகும். அன்பர்கள் தாம் வாங்குவதோடு, 50-100 என வாங்கிப் பலர்க்கும் வழங்குவது ஓர் பேரறமாகும்.

சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், கருத்துக்களையும், செய்திகளையும் புதிதாகத் தெரிந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் அனைவரின் இல்லத்திலும் இருக்கத் தக்கது இக்கையேடு எனில் மிகையன்று.

இந்நூல் வெளி வருவதற்கு மூலகாரணராக இருந்த சிவநேயச் செல்வர் திரு. ஆ. இராசரத்தின முதலியார், இந்நூற் தொகுப்புக்கு உதவியவர்கள், இவ்விரண்டாம் பதிப்புக்கு ஆகும் அதிகப்படியான தொகையை ஏற்கும் பெருமன்றக் கட்டட வாரியத்தின் செயலாளரும் பொருளாளருமான திரு. முருகு. இராமலிங்கம், இந்நூலின் வெளியீட்டுக்கு ஒப்புதலளித்த பெருமன்றத் தலைவர் திரு. கி. இல. பழநிசுவாமி உள்ளிட்ட பெருமன்றச் செயற் குழுவினர் மற்றும் இப்பதிப்பை அழகுற அச்சிட்ட பாலவாக்கம் கவின்கலை அச்சகத்தார், கவிஞர் திரு. நாரா நாச்சியப்பன் ஆகிய அனைவர்க்கும் எனது பாராட்டையும், உளம் கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை
15—6—91

ந. ஒளியரசு
செயலாளர்,
சைவ சித்தாந்தப் பெருமன்றம்,
4, வேங்கடேச அக்கிரகாரம் சாலை,
மயிலை, சென்னை-600 004.



முதற் பதிப்பின்

அணிந்துரை

மும்மொழிக்கொண்டல்

திரு. பெ. திருஞானசம்பந்தன், எம்.ஏ,எல்டி.,

தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம்;

சமஸ்கிருதப் பேராசிரியர்;

பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம் (ஓய்வு)

சென்னை
நாள்: 19—4—86

சைவசமயிகள் அவரவர்கள் ஆன்மீகப் பக்குவ நிலைக்கேற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படி நிலைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும் என்று நமது ஆசாரியர்கள் அருளியிருக்கிறார்கள். பெரும்பாலான மக்கள் திருக்கோவிலுக்குச் சென்று வழிபாடாற்றி வருவதைப் பார்க்கிறோம். ஆனால் அனைவருமே கோயில் வழிபாடு செய்யும் முறை யாது, அங்கு நடைபெறுகின்ற பூசை முறைகள் எவற்றைக் குறிக்கின்றன என்பதை எல்லாம் அறிந்திருக்க மாட்டார்கள். உலகியலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான மக்கள் ஆணவமாகிற இருளில் உழன்று உண்டும் உடுத்தியும் வறிதே காலத்தைக் கழிக்கின்றனர். இவ்விருளைப் போக்கி உள்ஒளி பெருக்க வல்லவை பன்னிரு ஆதித்தியர்களைப் போன்ற பன்னிரு திருமுறைகள் என்பதை உணரார்.

மெய்கண்ட சாத்திரங்கள் பதினாலும் சைவ சமயம் பற்றி நிகழும் ஐயந்திரிபுகளை அகற்றித் தெளிந்த மெய்யறிவைப் புகட்டும் திறத்தன என்பதையும் அறியார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றை முறையாகச் சேவித்தால் நம் உள்ளத்தில் படிந்துள்ள மாசுகள் நீங்கும். மாசற்ற ஒருவரின் உள்ளக் கோயிலில்தான் இறைவன் குடிகொள்வான். திருநீறு உருத்திராக்கம் முதலாய சிவச் சின்னங்களை அணிந்து கொண்டு திருவைந்தெழுத்தை ஓதுவாரை நன்னெறியில் செலுத்தி உய்விக்கிறான் உமையொரு பங்கன். மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமல் குன்றாத உணர்வுடைய தொண்டர்தம் சரித்திரத்தைப் படித்தால் நாமும் ஓரளவேனும் அவர்களைப் பின்பற்றி ஒல்லும் வகை ஒழுகவேண்டும் என்ற எண்ணம் எழலாமல்லவா?

திருமுறைகளை, குறிப்பாக தேவார திருவாசகப் பாடல் களைப் பண் அமைதியுடன் பாடக் கற்றுக்கொண்டால் நம் உள்ளத்தில் நல்லுணர்வும் அமைதியும் பிறக்கும்; மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை.

இவ்வளவையும் ஒருவர் அறிந்துகொள்வதற்கு ஒரு கருவி நூல் இருந்தால் நலமாக இருக்குமே என்று ஓரன்பர் எண்ணுகிறார். சாத்திர தோத்திரங்கள், அடியார் பெருமை, திருமுறை விளக்கம், அருட்பாடல்களை ஓதும் முறை, சைவ சமயம் பற்றிய அடிப்படை உண்மைகள் ஆகியவற்றையெல்லாம் அறிந்துகொள்வதற்கு நுழைவாயிலாக சைவ சமயக் கையேட்டை உருவாக்குகிறார். அவர்தான் நமது சைவ சித்தாந்தப் பெருமன்றப் புரவலர், சிவநேயச் செல்வர் உயர்திருவாளர் ஆ. இராசரத்தின முதலியார் அவர்கள். முதலியாரவர்கள் பெரிய அளவில் நம் பெரு மன்றத்தில் ஓர் அறக்கட்டளையை நிறுவி, சைவர்களாகிய நாம் அதிகம் பயிலாத திருவிளையாடற் புராணத்தையும், சைவ நூல் என்று கொள்ளத்தக்க திருக்குறளையும் ஆண்டு தோறும் கூட்டாக ஒருமுறையேனும் பயிலவேண்டும் என்ற பெருநோக் கோடு செயலாற்றி வருவதை நாம் அறிவோம். பூசலார் நாயனார் மனத்தால் முயன்று கோயில் கட்டி இறைவனை அதில் எழுந் தருளச்செய்து மகிழ்ந்ததுபோல, நம்மையெல்லாம் திங்கள்தோறும் ஒவ்வொரு திருத்தலத்திற்கும் மானசிகமாகச் சென்று அங்கு வீற்றிருந்தருளும் இறைவனையும் அவனை வழிபாடாற்றியும் பாடியும் போற்றிய அருளாளர்களையும் நாம் அகக்கண்ணால் காணுமாறு ஒரு அமைப்பை ஏற்படுத்தித் தந்துள்ளமை அவர் களின் செம்ம லுள்ளத்தைக் காட்டுகின்றது. ''எனைத்தானும் நல்லவை கேட்க'' என்ற குறிக்கோளையொட்டிப் பலரையும் கேள்விஞானம் படைத்த பெருமைக்குரியவராக ஆக்கி வருகிறார் கள். இராமேசுவரத்தில் தாம் ஒருவரே பொறுப்பேற்று நம் பெரு மன்ற ஆண்டு மாநாட்டை நடத்தித் தந்தது சைவத்தில் தோய்ந்த அவர்கள் உள்ளத்தைத் தெள்ளிதின் காட்டுகிறது. இன்னோரன்ன நல்ல அறப்பணிகள் நடைபெறுவதற்குத் தாம் ஈட்டிய பொருளை வழங்கி ஈத்துவக்கும் இன்பத்தைப் பெற்று வருகின்றார்கள். பொருட்செல்வம் மிக்குடையாரேனும் பத்தி யுடன் ஒழுக்கமும் பணிவும் மிக்க பண்பாளராகத் திகழ்கிறார். இவர்கள் ஆற்றிவருகின்ற அறப்பணி இவர்களுக்கு எல்லாச் சிறப் புகளையும் நல்கச் சிவபெருமான் அருள் புரிவாராக,

பாராட்டுரைகள்

பேராசிரியர்

க. வெள்ளைவாரணனார்

சிதம்பரம்

நாள்: 19—4—86

"சைவ சமயக் கையேடு" என்னும் இந்நூல், சிவநெறிச் செல்வர் ஒவ்வொருவரும் இன்றியமையாது தெரிந்து கொள்ள வேண்டிய சைவ சமயம் பற்றிய அரும்பொருட் குறிப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாகும். இந்நூல் (1) தோத்திரப் பகுதி (2) சாத்திரப் பகுதி (3) பொதுப் பகுதி என்னும் மூன்று பகுதிகளையுடையது. தோத்திரப் பகுதியில் பன்னிரு திருமுறை வரலாறு முதல் நாற்பத்தேழு தலைப்புக்களும், சாத்திரப் பகுதியில் சைவ சமய வரலாறு முதல் பதினொரு தலைப்புக்களும், பொதுப் பகுதியில் திருக் கோயிலமைப்பு முதல் முப்பத்திரண்டு தலைப்புக்களும் இடம் பெற்றுள்ளன. இந்நூல் சைவ சிந்தாந்தப் பெருமன்றத்தின் முத்துவிழா வெளியீடாக வெளியிடப்பெறுகிறது.

இந்நூலுக்கு வேண்டிய அரும்பொருட் குறிப்புக்களைத் தொகுத்து வழங்கியவர்கள் சைவ சித்தாந்தப் பெருமன்றத்துடன் நெருங்கிய தொடர்புடைய வித்துவான் திரு. அம்பை சங்கரனார் அவர்களும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் டாக்டர் கு. சுந்தரமூர்த்தி அவர்களும் ஆவர். இந்நூலைத் தமது பொருட்செலவில் தொகுத்து வழங்குபவர் சைவத் திருவாளர் ஆ. இராசரத்தின முதலியார் அவர்களாவர். நேஷனல் பளையகாட் கம்பெனியின் பங்குதாரராகவும் செந்தமிழும் சிவநெறியும் வளர்க்கும் செங்குந்தர்குலச் செல்வராகவும் திகழும் இவர்கள், சென்னைச் சைவ சித்தாந்தப் பெருமன்றத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். மன்றத்தின் சார்பில் சைவ சமயப் பணிகள் பல புரிந்து வருகின்றார்கள்.

இவர்கள் சென்னையில் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் ஆதரவில் ஆங்கிலமாதம் ஒவ்வொரு முதல் சனிக்கிழமை மாலையிலும் செந்தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் கு. சுந்தர மூர்த்தி அவர்களை யழைத்துச் "சிவத்தலப் பெருமை" என்னும் பொருள்

குறித்துத் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துதற்கு வேண்டிய பொருட் செலவினைக் கயிலைப்புனிதர் டாக்டர். திரு. அ. மாணிக்கம் எம்.எஸ். அவர்களுடன் இணைந்து அன்புடன் ஏற்றுக் கொண்டுள்ளமை இங்குக் குறிப்பிடத் தகுவதாகும். இவர்கள் தில்லையில் நிகழவிருக்கும் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் முத்துவிழா வரவேற்புக் குழு உறுப்பினராகவிருந்து வேண்டும் உதவிகளைச் செய்து வருவது, சைவ சமய வளர்ச்சியிலும் சைவ சித்தாந்தப் பெருமன்ற வளர்ச்சியிலும் இவர்களுக்கு உள்ள ஈடு பாட்டினை இனிதுபுலப்படுத்துகின்றது.

சைவத் திருவாளர் திரு. ஆ. இராசரத்தின முதலியார் அவர்கள் தமது பொருட்செலவில் தொகுத்து வழங்கும் சைவ சமயக் கையேடு என்னும் இந்நூலுக்கு, ஆங்கிலம், தமிழ், வட மொழியாகிய மும்மொழித் துறைகளிலும் புலமை வாய்ந்தவரும், அரசினர் கல்லூரிகளிற் பேராசிரியராகவும், கல்லூரி முதல்வ ராகவும், கல்லூரிகளின் துணை இயக்குநராகவும், சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளராகவும் இருந்து ஓய்வு பெற்றவரும், சைவ சித்தாந்தப் பெரு மன்றத் தலைவராக விருந்து மன்றத்தின் பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றி வருபவருமாகிய சைவத் திருவாளர் பெ. திருஞானசம்பந்தன், எம்.ஏ.எல்.டி., அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள்.

மன்றுள் நிறைந்தாடும் மாணிக்கக் கூத்தன் திருவருளால் தில்லையம்பதியில் நிகழும் சைவ சிந்தாந்தப் பெருமன்றத்தின் முத்து விழா வெளியீடாகச் ''சைவ சமயக் கையேடு'' என்னும் இந்நூல் வெளிவருவது இவ்விழாவுக்கு அணி செய்யும் நன்னிகழ்ச் சியாகும். இந்நூல், சிவநெறிச் செல்வர் ஒவ்வொருவர் கையிலும் இருத்தற்குரிய சிறப்புடையதாகும். இந்நூலைச் சைவர் ஒவ்வொருவரும் வாங்கிப் பயன்கொள்ளுதல் வேண்டும் என்பது எனது பெருவேட் கையாகும்.

இந்நூற் பொருள்களைத் தொகுத்து வழங்கிய அறிஞர்கட்கும், இந்நூலைத் தம் பொருட் செலவில் ஆர்வமுடன் வெளியிட்டு தவிய திரு.ஆ. இராசரத்தின முதலியார் அவர்கட்கும் சைவ மக்களின் பாராட்டும் நன்றியும் என்றும் உரியனவாகும். செந் தமிழும் சிவநெறியும் வளர்க்கும் இப்புலமைத் திருப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் உளமாரப் பாராட்டுகின்றேன். மன்றுளாரடியாராகிய இவர்கள் என்றும் இன்பம் பெருகுமியல் பினால் நீடு வாழ்தல் வேண்டும் என அருமான வாண்முகத்தாள் அமர்ந்துகாண அமரர் கணம் தொழுதேத்த ஆடுகின்ற பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
எம்.ஏ., பிஎச்.டி.
முதல்வர்,
செந்தமிழ்க் கல்லூரி.

திருப்பனந்தாள்
10—4—86

தமிழ்ச்சைவ உலகில் தண்ணளியும் வள்ளன்மையும் கொண்டு விளங்குபவர்கள் சிலர். அச்சிலரில் ஒருவரும் நம் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரியவர்களாக விளங்குபவர்கள் சைவத் திருவாளர் ஆ. இராசரத்தின முதலியார் அவர்கள் ஆவர். அவர்கள் ஆற்றிவரும் அறப்பணிகளும் சிவத்தொண்டுகளும் பலரும் நினைந்து மகிழ்தற்குரியனவாம். அத்தகைய அருந் தொண்டு களுள் ஒன்று இவ்வரிய கையேட்டினை வழங்கி உதவுவதாகும்.

இக்கையேடு உளங்கொள்ளத்தக்க அரிய பல செய்திகளைக் குறிப்பாகவும் தெளிவாகவும் விளக்கி நிற்கின்றது. தமிழ்ச் சைவ மக்கள் ஒவ்வொருவரும் நாளும் நினைவு கூர்ந்து அவ்வப்போதும் மேற்கொள்ளத்தக்க அரிய செயல்களை நினைவூட்டவல்லது. சுருங்கக் கூறின் சைவ மெய்யுணர்வை வழங்கத்தக்க ஞானப் பேழையாக அமைந்திருப்பது, குறிக்கோளிலாது கெட்டேன் எனக் கழிந்ததற்கு இரங்கி அவலங் கொள்ளாதவாறு ஆட்படுத் தத்தக்கது.

இத்தகைய ஞானப்பேழையை அரிதின் முயன்று தொகுத்தும், தம் பொருட்செலவிலேயே வெளியிட்டும் அருட் கொடையாக வழங்கியருளும் முதலியார் அவர்களுக்குத் தமிழ்ச் சைவ உலகம் என்றென்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையது. அவர்கள் தம் பெயர்க்கு ஏற்பத் தம் நினைவாலும் சொல்லாலும் செயலாலும் ஒளிதந்து உதவி வருகின்றார்கள். "நவில்தொறும் நூல் நயம்போலும் பயில்தொறும் பண்புடை யாளர் தொடர்பு" என்னும் அரிய திருக்குறளுக்கு இலக்கியமாகத் திகழும் அவர் களுக்கு, என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள் கின்றேன். இந்நூல் அவர்களின் உளமனைய தண்ணளித்தாய் நின்று நிலவுக! மன்றுளார் அடியாரவர் வான்புகழ் நின்றது எங்கும் நிலவி உலகெலாம்,

வித்துவான்
அம்பை இரா. சங்கரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்
12—4—86

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் முத்து விழா சிதம்பரத்தில் அண்மையில் நிகழவிருக்கின்றது. அதன் நினைவுக்குறியாக சிவநேயச் செல்வர் திரு. ஆ. இராசரத்தின முதலியார் அவர்கள் சைவர்களுக்கு என்றும் நிலைத்த உதவியாக இருக்கத்தக்க நிலையில் ஒரு சைவ சித்தாந்த விளக்கக் கையேடு உதவ விரும்பினார்கள். அவர்கள் எண்ணத்தை முற்றுப்பெறச் செய்த பெருமை பெருமன்றச் செயலர் திரு. ம. அண்ணாமலை அவர்களையே சாரும்.

நம் சமய அடிப்படை உண்மைகள் கூடத் தெரியாதவர்களும் பலர் உளர். அவர்களுக்குத் தெரியவில்லை என்று குற்றம் கூறிப் பயனில்லை. அவர்கள் எளிமையாய்ப் புரிந்து கொள்ளத்தக்க நிலையில் தக்க வாய்ப்புகளைப் பொதுமக்கள்பெற நாம் வசதி செய்யவில்லை என்பதை ஒத்துத்தான் ஆக வேண்டும். ஆகவே அக்குற்றத்தினின்றும் விடுபட உலகத்துக்கே தலையாய நிறுவனமாயுள்ள சைவ சித்தாந்தப் பெருமன்றம் இக்கையேட்டினை வெளியிடுகின்றது. இதில் சைவ சமயம் சம்பந்தமான செய்திகள் யாவும் இருக்கவேண்டும்; எவை எவை இடம்பெற வேண்டும் என்று முதலில் மனத்தில் பட்டனவோ அவற்றை இக் கையேட்டில் சேர்த்துள்ளார்கள். உலகம் பலவிதம். பலர் அவரவர் மனநிலைக்கேற்ப விட்டுப் போனவையாகச் சிலவற்றைக் கருதுதலும் கூடும். அவ்வாறு எவையாவது உளவேல் அவற்றை அன்புகூர்ந்து தெரிவிக்கின் மறுபதிப்பில் சேர்த்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். எச்செயலையும் தருக்கமுறையில் விவாதித்துக் கொண்டு மாத்திரம் இருக்கக் கூடாது. அவ்விவாதத்தின் முடிவு உலக மக்களுக்கு நற்பயன் தரத்தக்கதாயிருக்க வேண்டும். ஆதலின் அன்பர்கள் இந்நூலின் நோக்கம் நன்கு நிறைவுபெற அவரவர் கருத்துக்குப் புலப்படுவனவற்றைப் பெருமன்றச் செயலாளருக்கு எழுதி உதவுவார்களாக,

இக் கையேட்டில் பன்னிரு திருமுறையைப்பற்றிய எல்லா விளக்கங்களும் சுருங்கிய அளவில் காணப்பெற்றுள்ளன. இவற்றைப் போன்றே பதினான்கு சாத்திரங்கள் பற்றிய விளக்கங்களும் இடம் பெற்றுள்ளன. சைவர்கள் மேற்கொள்ள வேண்டிய நோன்பு முதலிய செய்திகளும் பொதுப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. இன்னும் விரிந்த அறிவினைப் பெற மக்களுக்குத் தூண்டுகோலாய் இக்கையேடு அமையுமாயின் அதுவே இக் கையேட்டு வெளியீட்டின் பயனாகும்.

அன்பர்கள் யாவரும் வாங்கவேண்டும் என்பதற்காகவே அடக்க விலைக்கும் குறைவாகவே விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. யாவரும் வாங்கிப் படித்துத் தாங்களும் நம் சமய உண்மைகளைத் தெரிந்துகொள்வதுடன் வருங்கால சந்ததியினரையும் நம் சமய விளக்கம் பற்றித் தெரிந்துகொள்ள ஊக்கப்படுத்த வேண்டுகிறேன். அதற்கு இந்நூல் தலையாய சைவ சமயக் கண்ணாடி. இந்நூலை வெளிவரச்செய்த சிவநேயச் செல்வர் திரு. ஆ. இராசரத்தின முதலியார் அவர்களும் பெருமன்றச் செயலர், தலைவர், செயற்குழு உறுப்பினர் முதலிய யாவரும் பாராட்டுக்கு உரியவராவர். இவர்கள் முயற்சி நிலைத்த பயன்செய்ய, மக்கள் வாங்கிப் படித்து, சைவந் தழைக்க உறுதுணை செய்வார்களாக. அதற்கு எல்லாம் வல்ல இறையருளும் இன்னருள் கூட்ட அவனிணையடிகளையே வணங்கி அமைகின்றேன்.

சிவத்திரு ம. அண்ணாமலை

செயலாளர்,
சைவ சித்தாந்தப் பெருமன்றம்

சென்னை
20—4—86

பல ஆண்டுகளாகச் சிவ பக்தராய் இருந்து வருபவர் பலர். சிவத்தலங்களை வழிபட்டு நித்திய பூசை செய்து, பக்திப் பாடல்களை வாயாரப் பாடிவரும் நியமம் கொண்டவர் சிலர். சைவ சமய அடிப்படைக் கொள்கைகளையும், நெறி முறை களையும் அறிந்தோர் மிகச் சிலரே. கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போய் விடும் என்பது பழமொழி. எத்தொழிலைச் செய்தாலும், அத்தொழிலின் தன்மை, நிறை வேற்றப்படும் வழி, அதன் பயன் இவற்றைத் தெரிந்து செயலாற்றுவது அறிவுடைமை யாகும்.

கேள்வி கேட்பது எளிது. பதில் சொல்லுவது கடினம். தக்க பதில் சொல்லுவது அதனினும் கடினம். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது மிகவும் கடினம்.

சைவ சமயம் என்பது யாது? அதன் அடிப்படைக் கொள்கைகள் யாவை? அதனைப் பின்பற்ற வேண்டிய நெறி முறைகள் யாவை? அதனால் கிடைக்கும் பயன் என்ன? தோத்திரம் என்பது எது? சாத்திரம் என்பது எது? திருக் கோயில் களின் அமைப்பின் தத்துவம் யாது? கோயில் வழிபாடு ஏன் அவசிய மானது? சமயாசாரியர் யார்? சந்தானா சாரியர் யார்? அவர்கள் அருளிச் செய்த நூல்களின் திரண்ட கருத்துக்கள் யாவை? நாயன் மார்கள் புரிந்த திருத்தொண்டுகளும் அற்புதச் செயல்களும் யாவை? அவர்கள் காட்டிய செந்நெறிகள் யாவை? சைவ சம யத்தைப் பற்றி சாதாரண சைவன் ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள்—ஏனைய குறிப்புக்கள் யாவை? சைவ சமயம் எவ்வாறு சிறந்தது?

மேற்காணும் வினாக்களைக் கேட்கின்றனர் சைவ மதத்தைப் பின்பற்றி ஒழுகும் ஆர்வம் கொண்ட பலர். அவர்கள் கற்றவர், சிறிது கற்றவர், கல்லாதவர் என மூவகையினராக இருக்கலாம். அவர்களின் ஐயங்களைப் போக்கி சைவ அறிவைக் கொடுத்து,

நமது மதத்தின் அடிநிலை தத்துவத்தை எளிய முறையில் விளக்கி அவர்கள் சிந்தை தெளிவுபெற வைப்பது நூல் பல கற்ற நுண்ணறிவாளர்களின் கடமையாகும். குறிப்பாக சைவத்தைப் பரப்புவதற்காகத் தோன்றிய நிறுவனங்களின் தலையாய கடமையும் பொறுப்புமாகும். இப்பணியை நிறைவேற்றிட இதுவரை நூல் பல எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் சிற்றறிவுடைய சாதாரண சைவர்களுக்கு, இளைஞர்களுக்கு, குறிப்பாக சைவத்தைப் பற்றி முதன் முதலாகத் தெரிந்துகொள்ள விழையும் அன்பர்களுக்குப் பயன் தரத்தக்கதாகவும், பல குறிப்புகளைச் சுருக்கமாகவும், தெளிவாகவும், எளிய முறையில் எழுதப்பட்ட நூல்கள் மிகச் சிலவே.

சைவ சித்தாந்தப் பெருமன்றக் காப்பாளரும் சிவநேயச் செல்வருமாகிய திரு. ஆ. இராசரத்தின முதலியார் அவர்கள் சில திங்களுக்கு முன்னர் அடியேனிடத்தில் தமது விருப்பம் ஒன்றைத் தெரிவித்தார்கள். அதாவது பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும், சைவ சமயத்தைப்பற்றி முதன் முதலில் அறிய விரும்பும் சாமானிய கல்வி அறிவுடைய அன்பர்களுக்கும் உதவிடும் வகையில் நூல்ஒன்றை வெளியிட விரும்பினார்கள். அத்தகைய நூல், சிதம்பரத்தில் நடைபெறவிருக்கும் சைவ சித்தாந்தப் பெருமன்ற முத்து விழாவில் வெளியிடப் படவேண்டும் எனவும் தெரிவித்தார்கள். அவர்கள் விருப்பப்படி இந்நூல் பெருமன்ற வெளியீடாக வெளிவந்துள்ளது.

திரு. ஆ. இராசரத்தின முதலியார் அவர்கள் யாவரும் சைவத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற பேராசையால் உந்தப்பட்டவராய் இருந்த அவர்தம் மெய்யுணர்வை, கொடை உள்ளத்தை, தொண்டு மனப்பான்மையை உணர்ந்து உள்ளம் நெகிழ்ந்தேன்.

அவர்தம் திண்ணிய எண்ணத்தால் எண்ணியாங்கு எய்தப்பட்டதே இந்நூலின் வெளியீடாகும். இது ஒரு ஆராய்ச்சி நூல் அன்று. புதியதொரு படைப்புமன்று. ஆனால் சைவ சமய உண்மை தெரியாது இருட்டறை எனும் அஞ்ஞானத்தில் உழலும் ஆர்வங் கொண்டசைவர்களுக்கு உதவிடும் ஒருஞானவிளக்கு. மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாகத் தொடங்க விரும்பும் அன்பர்களுக்கு இது ஒரு வழிகாட்டி, எந்த நூலில் எப்பொருள் கிடைக்கும் எனத் தெரியாது ஏங்குவோருக்கு ஏற்ற ஒரு துணைவன். கசடறக் கற்காத காரணத்தால் கரை காண வழி தெரியாது கலங்கி நிற்போருக்கு இது ஒரு கலங்கரை விளக்கு.

சைவ சித்தாந்தம் அறிவு ஆராய்ச்சி மட்டுமின்றி நிறைவான வாழ்க்கைக்குரிய நெறிமுறை கொண்டது என்பதைத் தெரிந்து கொள்ளவும், சைவ சித்தாந்தத்தைத் தனித்தும், ஒப்பியல் முறையிலும் கற்க விழைவோர்க்கு இந்நூல் உறுதுணை புரியும் என்பதிலும் ஐயமில்லை. பல நூல்களை ஆழ்ந்து கற்க ஆவலைத் தூண்டி அதன் அவசியத்தை உணரச்செய்யும், இந்நூல் எனில் மிகையன்று. பல நூல்களில் காணப் பெறும் முக்கிய கருத்துக்களையும், செய்திகளையும் குறிப்புத் தொகுப்பையும் தன்னகத்தே கொண்ட இக் கையேடு, சைவ இல்லங்கள் தோறும் இருக்க வேண்டுவதொன்றாகும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில், விரும்பிய குறிப்புகளை விரைவில் தெரிந்து கொள்ளும் வகையில் ''உள்ளுறை'' அமைக்கப் பெற்றிருப்பது போற்றுதற்குரியது.

திரு. ஆ. இராசரத்தின முதலியார் அவர்களுடன் பல ஆண்டுகளாக நெருங்கிப் பழகும் நல்வாய்ப்புப் பெற்ற அடியேன் அவர்கள் தனித்தன்மைகளைப் பற்றி ஈண்டு குறிப்பிடுவது எனது கடமையென உணருகிறேன்.

முதலியார் அவர்கள் செய்தொழிலில் உழைப்பால் உயர்ந்த உத்தமர். கொள்கையினால் உயர்ந்த நிறைவுடையவர், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தொழுகும் சிவபக்தர். பகுத்துண்டு பல் உயிர் ஓம்பும் பண்பாளர். சில திருக்கோயில் திருப்பணிகளில் பங்கேற்றவர். தெய்வப் பணிபுரியும் அமைப்புகளுக்கு ஆண்டு தோறும் நல்ஆதரவு நல்கி வருபவர்.

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் ஆயுள் உறுப்பினராகி, கடந்த சில ஆண்டுகளாக நெருங்கிய தொடர்பு கொண்டு நல்லாதரவு தந்து வருபவர். இராமேசுவரத்தில் நடைபெற்ற பெருமன்ற மாநாட்டில் கலந்துகொண்ட அன்பர்கள் அனைவருக்கும் இரண்டு நாட்களுக்கு அன்னம் பாலிக்கும் அறப்பணியில் முழுப்பங்கேற்றவர். அவர்தம் இல்லத்தில் இருமுறை ''திருமுறை முற்றோதல்'' சிறப்பாக நடத்தினார்கள். ஆண்டுதோறும் ஒரு நாள் முழுவதும் ''திருக்குறள்—திருவிளையாடல் புராணம் முற்றோதல் நடைபெறவும் அதில் கலந்து கொள்ளும் அன்பர்களுக்கு அன்னம் பாலிக்கவும்'' அவர்தம் பெற்றோர் பெயரில் பெருமன்றத்தில் பெரியதொரு அறகட்டளையை நிறுவியுள்ளார்கள். இது ஒரு செயற்கரிய செயல் எனில் மிகையன்று.

சைவ அன்பர்கள், பாடல் பெற்ற சிவத்தலங்கள் அனைத்தின் பெருமையை நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமென்ற பேரவாவின் காரணமாக ஒரு அருமையான நிகழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்கள் திங்கள் தோறும் ஒருநாள் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களால் பெருமன்ற அலுவலகத்தில் ''சிவத்தலப் பெருமை'' தொடர் சொற்பொழிவு நடத்தப்பட்டு வருகிறது. கடந்த செப்டம்பர் திங்களில் தொடங்கப்பெற்ற இத்தொடர் சொற்பொழிவு சுமார் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நடைபெறும். இந்த நிகழ்ச்சியில் திங்கள்தோறும் சைவ அன்பர்கள் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டு நற்பயனைப் பெற்று வருவது குறிப்பிடத் தக்கது. இந்த ஏற்பாட்டிற்கு திரு. ஆ. இராசரத்தின முதலியார் அவர்களும், கயிலைப்புனிதர் டாக்டர் திரு. அ. மாணிக்கம் அவர்களும் சேர்ந்து முழு ஆதரவு தந்து வருவதை சைவ உலகம் என்றும் போற்றி நிற்கும்.

நிற்க. சிதம்பரத்தில் நடைபெறும் பெருமன்ற முத்துவிழாவின் வரவேற்புக் குழு உறுப்பினராய் திரு. ஆ. இராசரத்தின முதலியார் இருப்பதுடன் அவ்விழாவில், கற்றோரும் மற்றோரும் கண்டு களிப்படையத் தக்கதோர் ''காட்சி உரை'' அமைக்க ஆர்வம் கொண்டார்கள். இவ்விழாவில் ''சைவசமயப் பொருட்காட்சி'' ஒன்று அமைக்க உறுதுணை செய்துள்ளார்கள். பெருமன்றப் பொது நிதிக்கும் அன்பளிப்பு செய்துள்ளார்கள்.

இவ்வாறு பல்லாற்றானும் பணிபுரிந்து வரும் திரு. ஆ. இராசரத்தின முதலியார் அவர்கள் பொருளுதவியுடன் வெளியிடப்படும் இந்நூலின் 500 படிவங்களைப் பெருமன்றத்திற்கு அன்பளிப்பாக வழங்கி அதன் விற்பனைத் தொகையைக் கொண்டு அவ்வப்போது மறுபதிப்புகள் வெளியிட வேண்டும் எனும் அவர்தம் விருப்பத்தைப் பெருமன்றச்செயற்குழு பெருமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளது.

திரு. ஆ. இராசரத்தின முதலியார் அவர்களுக்கு சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சார்பில் அடியேனது பாராட்டுதலையும், வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் நெடிது இனிது வாழ்ந்து, சைவப் பணி பல புரிந்து, பார் புகழ்கொள்ளத் தில்லைக் கூத்தனின் ஆடிய பாதத்தைப் போற்றி வணங்குகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க சைவம்!! வாழ்க உலகெலாம்!!!

பெரும்புலவர்
இர. திருஞானசம்பந்தர்,
தலைவர், புலவர் மன்றம், சென்னை.

''முத்துக் குடில்''
அலுவலர்கள் காலனி
சென்னை-88

வாழ்த்து

(நிலைமண்டில ஆசிரியப்பா)

உலகில் முகிழ்த்த சமயம் அனைத்திலும்
நிலவுஞ் சைவமே முதலாம் சமயமாம்
உலக மொழிகளில் முதன்மொழி தமிழ்தான்
நிலவும் பத்தி மொழியென மொழிந்தார்
தன்னே ரில்லாத் தனிநாயக அடிகளார்

மின்னார் செஞ்சடை பொன்னார் மேனியனைச்
சமய குரவரும் சந்தான குரவரும்
இமய முதலாக் குமரி வரைக்கும்
இடையே யுள்ள தலங்களைப் பாடினர்
கடையரும் கேட்டே பிறவியைக் கடந்தனர்

பன்னிரு திருமுறை தன்னிற் சிறந்த
கன்னல் போலும் பாசுரம் எடுத்து
வரலாற் றுடனே குறிப்புந் தந்தே
பெருநூல் கொணரப் பேருளங் கொண்ட
குறிஞ்சிக் கடவுள் அருளால் தோன்றிய

குறிஞ்சிப் பாடி அறிஞர் திலகம்
சிவசிவ என்பதே சிந்தை யுற்ற
சிவமணங் கமழும் ''சிவநேயச் செல்வர்''
இராச இரத்தின முதலியார் வள்ளல்
இராசனாம் நடமிடு நம்பன் நகரில்

பெருமன்ற முத்து விழாவினில் தந்தார்
பெருநூல் தந்த பெருநல் லாரும்
முத்து விழாக்காண் பெருமன்று போல
முத்து விழாக்கண்டு முத்தென மிளிர்ந்தே
உலகில் வளமுடன் நீடுவா ழியரே!

சென்னை, பெரும்புலவர், திருக்குறள் நெறித் தோன்றல், இறைநெறிக் கவிஞர், சத்துவகுணச் செம்மல், அருள்விளக்கம் அண்ணாமலை அடிகள் வழங்கிய,

வாழ்த்துப்பா

(கட்டளைக் கலித்துறை)

ஆதி சமயமே சைவச் சமயம் அதன்பெருமை 1
ஓதி யுணர்ந்திட வுற்றுள தோத்திர சாத்திரங்கள்
நாதி சிவனே எனவவன் நற்பதம் நாடிடவே
சோதியுட் சீவனாம் சோதி கலந்து சுகித்திடுமே.

நான்மை நெறியுடன் முப்பொருள் தன்மையும் நன்குணரத் 2
தான்வினை யொப்பும் மலபரிபாகமும் சார்ந்திடுமே.
வான்மிகு சைவ உயர்நெறி முற்றிலும் வாய்ந்திடவே
ஏன்றிடு சைவ சமயக்கை யேடீ தினிதுறவே.

கையேடு தந்த கருணையர் யாரெனக் கேட்டிடினே 3
ஐயே எனவந் தடுப்பவர்க் கீந்திடும் அன்பரவர்
நையேல் எனவருள் வார்த்தையும் நல்கிடும் நண்பரவர்
வையம் வழுத்தும் திருராஜரத்தினர் வாழ்கவென்றே.

முதற்பதிப்பின் முன்னுரை



சிவநேயச் செல்வர்
ஆ. இராசரத்தின முதலியார்

4, பானு அவின்யூ,
தாம்பரம் சானடோரியம்,
சென்னை-600 047.
21—4—1986.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு (திருக்குறள்)

கற்றதனாலாய பயன் பற்றற்றான் தாளை வணங்குவ தாகும். தெய்வம் தொழ, தெய்வத்தன்மையை உணர வேண்டும். தெய்வம் தெளிய சமய உண்மைகளையும் அதன் அடிப்படைத் தத்துவங்களையும் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொண்டபடி ஒழுக வேண்டும். இது ஆன்றோரின் அறிவுரை.

மேன்மைகொள் சைவ நீதியை நன்கு தெரிந்து கொள்வதற்குப் பல நூல்களைப் பல நாட்கள் பயின்று, கற்றோர் மாட்டுப் பாடம் கேட்க வேண்டும். சிறப்பாக. சைவசமயாசாரியர், சந்தானாசாரியர் ஏனைய அருளாளர்கள் அருளிச் செய்த நூல்களை ஓத வேண்டும். பின் உணர வேண்டும். இவர்கள் அருளிச் செய்த நூல்கள் அனைத்தும், பதிகங்களாகவும், பாசுரங்களாகவும், பாடல்களாகவுமே உள்ளன. பாடல்களை மனனம் செய்வது எளிது, செய்திகளை உரை நடையில் சொல்லுவதைவிட, பாடலில் காவிய நயம், கற்பனைத் திறன் கூடிய சுவையுடன் சொல்லலாம். பெரும்பாலும், சைவசமய அருளாளர்கள் அனைவருமே பாடல்களைத் தான் அருளிச் செய்திருக்கின்றனர். இப்பாடல்களைப் படித்துப் பொருள் உணர ஒருவருக்கு முதலில் வேண்டுவது பக்தி. பின் இலக்கண இலக்கிய அறிவு வேண்டும். குருவினிடம் பாடம் கேட்கும் வேட்கையும் வேண்டும்.

ஆழ்ந்து கற்று, ஆசானிடம் பயின்று ஆய்வு செய்யும் திறன் பெறுவது ஒரு நிலை. இந்நிலைக்கு வருபவர் மிகச் சிலராகத்தான் இருக்க முடியும். இன்றைய உலகம் வேகமானது, தற்கால மக்கள் எதையும் எளிய முறையில் விரைவில் அறிந்து கொள்ளவும் செயல் புரியவும், அதன் பயனை நுகரவும் விழைகின்றனர்.

அதிகம் கற்காத பாமர மக்கள் தொகை அதிகம். சைவ மதத்தின் சிறந்த உண்மைகளையும், பல முக்கிய குறிப்புகளையும் தெரிந்து கொள்ளாத பாமரக்கள் பலர் இருப்பது வருந்துதற் குரியது. இத்தகைய பாமர மக்களுக்குப் பயன் தரத்தக்க சிறு நூல் ஒன்றை வெளியிட விரும்பினேன். பல நூல்களைப் படித்துப் பல செய்திகளைத் தெரிந்து கொள்வதைவிட ஒரு சிறு நூலில் பல முக்கிய செய்திகளையும், குறிப்புகளையும் சுருக்கமாகத் தொகுத்துத் தந்து உதவினால், நமது சமயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புவோருக்குப் பயன்படுமே எனக் கருதினேன். இறையருளால் இந்நூல் உருவானது.

இந்நூலில் காணப்பெறும் செய்திகளையும் குறிப்புகளையும் சேகரிப்பதற்கு எனக்கு உறுதுணை புரிந்தவர்கள் வித்துவான் அம்பை இரா. சங்கரனார், டாக்டர் கு. சுந்தரமூர்த்தி, சம்பந் தரடியான் திரு. கு. வைத்தியநாதன், திரு. ம. அண்ணாமலை ஆவார்கள். அவர்களுக்கு எனது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலைச் சிதம்பரத்தில் நடைபெறவிருக்கும் சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் முத்து விழாவில் வெளியிட வேண்டுமென்பது அடியேனின் ஆசை. இந்நூலை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தார் வெளியிட அன்புகூர்ந்து இசைவு தந்தமைக்குப் பெருமன்றத் தலைவர், செயலாளர், செயற்குழு உறுப்பினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய, சைவ சித்தாந்தப் பெரு மன்றத் தலைவர், மும்மொழிக் கொண்டல், பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தன் அவர்களுக்கும், பாராட்டுகள் வழங்கி யுள்ள முதுபெரும் புலவர் சித்தாந்த வித்தகர் பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்களுக்கும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக ஆசிரியர் வித்து வான் அம்பை இரா. சங்கரனார் அவர்களுக்கும், சைவ சித்தாந்

தப்பெருமன்றச் செயலாளர் திரு. ம. அண்ணாமலை அவர்களுக்கும், வாழ்த்துப் பாடல்கள் வழங்கிய பெரும்புலவர் திரு. இர. திருஞான சம்பந்தர் அவர்களுக்கும், வித்துவான் அருள்விளக்கம் அண்ணாமலை அடிகள் அவர்களுக்கும் எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திருப்பணியைச் செய்திட என்னைத் தூண்டியவர். பெருமன்றச் செயலாளர் திரு. ம. அண்ணாமலை அவர்கள்தான். அடியேன் ஏதாவது சிறு சிறு சைவப் பணிகளும், சைவ சித்தாந்தப் பெருமன்றத்திற்குச் சிறு தொண்டும் செய்து வருகின்றேன் என்றால், என்னை இப்பணிக்கு ஆளாக்கிய பெருமை திரு. ம. அண்ணாமலை அவர்களையே சாரும் எனில் மிகையன்று. அவர்கள் சைவத் தொண்டு சிறந்து ஓங்க வாழ்த்துகிறேன்.

இந்நூலில் காணும் செய்தித் தொகுப்பிற்குப் பெரிதும் துணைபுரிந்த நூல்கள் (1) மாவட்ட முன்சீப் திரு. வ. த. சுப்ரமணிய பிள்ளை வெளியிட்ட ''சிவத்தல மஞ்சரி'' (2) கொழும்பு விவேகானந்த சபையினரின் வெளியீடு ''சைவ சமயம்'' என்பனவாம். இச்சான்றோர்களுக்கு எனது நன்றி உரியது.

இந்நூலில் சைவ சமயம் பற்றிய எல்லாச் செய்திகளும், குறிப்புகளும் தரப்பட்டுள்ளன எனச் சொல்லுவதற்கில்லை. வேறு சில குறிப்புகள் சேர்க்காமல் விடுபட்டிருக்கலாம். குறிப்பாக, பொதுப் பகுதியில் 26 முதல் 30 வரை உள்ள தலைப்புகளில் இன்னும் ஏதாவது சேர்க்கப்பட வேண்டுவன இருப்பின் அன்பர்கள் சைவ சித்தாந்தப் பெருமன்றத்திற்குத் தெரிவித்தால் அவைகள் ஆலோசிக்கப்பட்டு அடுத்த பதிப்பில் சேர்க்க முயற்சி செய்யப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் வேறு பிழை இருப்பின் சைவ அன்பர்கள் பொறுத்துக் கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்ட சென்னை-14. அலமு அச்சகத்தாருக்கும் குறிப்பாக அதன் உரிமையாளர் திரு.து. இராமநாதன் அவர்களுக்கும் எனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலைச் செந்தமிழ் அன்பர்களும், சிவநெறிச் செல்வர்களும் வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன். இத்தகைய முயற்சிக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் ஆக்கமும் ஊக்கமும்அளிக்குமென நம்புகின்றேன். வணக்கம்,

உள்ளுறை

I. தோத்திரப் பகுதி

(ஈ) அடியார்கள்

(உ) திருமுறை ஓதும் முறை

II, சாத்திரப் பகுதி


III பொதுப் பகுதி



உ

திருச்சிற்றம்பலம்

சமய குரவர் நால்வர்



சம்பந்தர் அப்பர் சுந்தரர் மணிவாசகர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி !
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி !
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி !
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி !

— உமாபதி சிவம்

உ

சிவமயம்

I. தோத்திரப் பகுதி

1. பன்னிரு திருமுறை வரலாறு

நம் சைவ நெறியில் தோத்திர உருவில் முதன்முதல் தோன்றிய சிறந்த நூல்கள் பன்னிரு திருமுறைகள் ஆகும். அவை தாம் சைவப் பெருமக்களுக்குரிய திருமறை ஆகும். அவற்றுள் முதலில் வைக்கத்தக்கது தேவாரம் என்பதாகும். தேவாரம் பாடியோர் மூவர் ஆவர். அவர்களுள் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் சமகாலத்தவர். திருஞான சம்பந்தர் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். திருநாவுக்கரசர் ஆறாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் பிறந்து ஏழாம் நூற்றாண் டின் பிற் பகுதியில் மறைந்தவர் ஆவார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். ஆகவே இவர்கள் மறைந்த காலத்தை மனத்துட்கொண்டும் முதன்முதல் தேவாரம் தோன்றிய நிலையை எண்ணியுமே திருமுறைகள் அடைவுபடுத்தப் பெற்றன என்பது குறிக்கொளத்தக்கது.

மூவருக்குப் பின் அவர்கள் அருளிய தேவாரப் பாடல்களை அங்கங்கு இலைமறை காய்போல் பாடி வந்தார்களே யொழிய அவைகளை ஒருசேரக் காண முடியவில்லை. தேவாரம் பாடு வோருக்கு நிவந்தம் முதலியனவும் ஏற்பட்டிருந்ததைக் கல்வெட்டு களும் அறிவித்தன. இவற்றையெல்லாம் தெரிந்த இராசராச சோழன் இத்தேவாரத் திருமுறைகளை எங்கே ஒருசேரக் காணலாம் என நினைத்துக் கவலையில் ஆழ்ந்தான்.

அவ்வமயம் திருநாரையூரில் வாழ்ந்துவந்த நம்பியாண்டார் நம்பிகளைப் பற்றிக் கேள்வியுற்றான். அவர் பொல்லாப் பிள்ளை யார் அருள்பெற்றுள்ளவர் என்று தெரிந்து அவரிடம் சென்று அவர் மூலம் தேவாரத் திருமுறைகள் சிதம்பரத்தில் பாதுகாப்பாக வைக்கப்பெற்றிருப்பதை அறிந்தான். அவற்றை முயன்று வெளி வரச் செய்தான். அவ்வாறு பாதுகாப்பாக வைக்கப் பெற்றிருந்தும் கூட பல ஏடுகள் சிதலரிக்கப்பெற்றிருந்தமையால் இராசராசன்

மனம் கலங்கினான். இறையருளால் அசரீரி தோன்றி உலகத்துக்கு வேண்டியது இருப்பதாகக் கூற ஒருவாறு மன அமைதி பெற்றுக் கிடைத்தவற்றை ஒழுங்குபடுத்த முற்பட்டான்.

நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டே இத் திருமுறைப் பகுப்பினை மேற்கொள்ளலானான். திருஞான சம்பந்தர் காலத்து வாழ்ந்திருந்த திருநீலகண்டயாழ்ப்பாணர் மரபில் தோன்றிய மூதாட்டியார் ஒருவர் துணைகொண்டு அப்பதிகப் பண் முறைகளைத் தெரிந்து அவற்றிற்கேற்பவே நம்பியாண்டார் நம்பிகள் அடைவு செய்து திருமுறைகளைப் பாகுபாடு செய்தார். திருஞான சம்பந்தர் தேவாரத்தை முதல் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் தேவாரத்தை 4, 5, 6ஆம் திருமுறைகளாகவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தை ஏழாம் திருமுறையாகவும் நம்பிகள் பகுத்தார். ஞானசம்பந்தர் தேவாரத்திற்குத் திருக்கடைக் காப்பு என்றும் திருநாவுக்கரசர் பாடல்களுக்குத் தேவாரம் என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடல்களுக்குத் திருப்பாசுரம் அல்லது திருப்பாட்டு என்றும் குறிப்பிடும் மரபு உண்டு. மூவர் முதலிகள் பாடிய பதிகங்கள், பாடல்கள் பற்றி திருமுறை கண்ட புராணம் கூறுவதையும் தற்போது கிடைத்துள்ள பதிகங்கள், பாடல்கள் பற்றியும் பட்டியல் மூலம் தனியே வரையறையில் காட்டப்பட்டிருக்கிறது, விவரம் அதில் தெரிந்து கொள்ளலாம்.

பின்னர் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம், திருக்கோவையார் எட்டாம் திருமுறையாக முறைப் படுத்தப்பட்டன. திருவாசகம் பதிகம் 51, பாடல்கள் 658. பாவை பாடிய வாயால் கோவை பாடுக எனப் பெருமானால் விரும்பிக் கேட்டுப் பெற்றது திருக்கோவையார் எனக் கூறுவர். அது நானூறு பாடல்கள் கொண்டது.

திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் இருபத்தெட்டும் திருப்பல்லாண்டுப் பதிகம் ஒன்றும் ஆக இருபத்தொன்பது பதிகங்களை ஒன்பதாந் திருமுறையாக முறைப்படுத்தினார். இதிலுள்ள பாடல்கள் 301 ஆகும்.

திருமூலர் அருளிய திருமந்திரப் பாடல்களைப் பத்தாந் திருமுறையாகப் பாகுபாடு செய்தார். திருமந்திரம் 3,000 பாடல்

களுடையது. தற்போது வெளிவந்துள்ள பதிப்புகளில் 3,071 பாடல்கள் காணப் பெறுகின்றன. பாட பேதப் பாடல்களும் இடைச் செருகற் பாடல்களும் சேர்ந்தே அச்சிட்டிருக்கின்றனராதலின் 71 பாடல்கள் அதிகமாயுள்ளன என்று கொள்வதே தக்க காரணமாகும். இத்திருமந்திரம் தோத்திர சாத்திரக் கருத்துக்கள் பொதுளியுள்ள சிறந்த நூலாகும். சிவாகமக் கருத்துக்களும் நிறைந்து காணப் பெறுகின்றன.

பதினோராந் திருமுறை திருவாலவாயுடையார் அருளிய திருமுகப் பாசுரம் முதலாக காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீர தேவ நாயனார், கல்லாட தேவ நாயனார், கபில் தேவ நாயனார், பரண தேவ நாயனார், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பிகள் ஆகிய பன்னிருவர் இயற்றிய நாற்பது பிரபந்தங்களைக் கொண்டது. அந்நூல்களின் பட்டியலைப் பின்னர் காண்க. இத்திருமுறையில் மொத்தப் பாடல்கள் ஆயிரத்து நானூற்றுமுப்பது ஆகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் காலத்தும் தமக்கு முன் காலத்தும் இருந்த அடியார்களைப் பற்றி திருவாரூர்ப் பெருமான் அடியெடுத்துக் கொடுக்க ''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று ஆரம்பித்து திருத்தொண்டத் தொகையைப் பாடினார்கள். பின்னர் இத்திருமுறைகளை அடைவு செய்த நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டத் தொகையிலுள்ள தனியடியார் அறுபத்துமூவர், தொகையடியார் ஒன்பதின்மர் பற்றியும் திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் தலைப்பில் ஒரு அந்தாதி நூல் இயற்றியருளினார்.

திருத்தொண்டத் தொகையையும் திருத் தொண்டர் திருவந்தாதியையும் கல்வெட்டு முதலிய சான்றுகளையும் அடியொற்றியே திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் சேக்கிழார் சுவாமிகளால் இயற்றப்பெற்றது. இது நம் சைவசமய வரலாற்று மூலப் பேரிலக்கியமாகும்.

இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலம் 1133-1146 ஆகும். இவன் அரசவையில் தான் சேக்கிழார் அமைச்சர் பதவி வகித்தார். பின்னர் அப்பதவியை விடுத்து தில்லை சென்று திருத்தொண்டர் புராணத்தை இயற்றி அரங்கேற்றினார். பிற்காலத்து

வந்த சைவப் பெருமக்கள் இந்நூலின் ஒப்புயர்வற்ற பெருமையினை அறிந்து இதனைப் பன்னிரண்டாம் திருமுறையாக ஏற்றுக் கொண்டதோடு மிகவும் போற்றவும் முற்பட்டனர். திருமலைச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் முடிய பெரிய புராணம் 13 சருக்கங்களைக் கொண்டது. இந்நூலிலுள்ள பாடல்கள் 4,286 ஆகும்.

சைவப் பெருமக்கள் தங்கள் நித்திய வழிபாட்டில் இறைவனைத் துதிக்கும் முகத்தான் பன்னிரு திருமுறைகளிலிருந்தும் வகைக்கொரு பாடலாகப் பன்னிரண்டு பாடல்களைப் பாடித் தோத்திரம் செய்யும் நியதியை இப்பெரிய புராணக் காலத்திலிருந்தே மேற்கொண்டனர். நாமும் அவர்கள் அடிச்சுவட்டையொட்டி இப்பன்னிரு திருமுறைகளாம் தமிழ் மறையை உயிரினும் மேலாகப் போற்றிப் படனம் செய்வதுடன் அன்றாட வழிபாட்டிலும் தவறாது பாடித் துதிக்கும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வோமாக.

ஆசை அறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீ சீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்

(சிவபோக சாரம்)

பன்னிரு திருமுறைகளும் ஆசிரியர்களும்

பட்டியல்

தேவாரம் :

1.	முதல் திருமுறை	திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள்
2.	இரண்டாந் திருமுறை	
3.	மூன்றாந்திருமுறை	
4.	நான்காந் திருமுறை	திருநாவுக்கரசு சுவாமிகள்
5.	ஐந்தாந் திருமுறை	
6.	ஆறாந் திருமுறை	
7.	ஏழாந் திருமுறை	சுந்தரமூர்த்தி சுவாமிகள்

8. எட்டாந் திருமுறை :

திருவாசகம் திருக்கோவையார்	மாணிக்கவாசக சுவாமிகள்

9. ஒன்பதாந் திருமுறை

திருவிசைப்பா திருப்பல்லாண்டு	1. திருமாளிகைத் தேவர் 2. சேந்தனார் 3. கருவூர்த் தேவர் 4. பூந்துருத்தி நம்பி காடநம்பி 5. கண்டராதித்தர் 6. வேணாட்டடிகள் 7. திருவாலியமுதனார் 8. புருடோத்தமநம்பி 9. சேதிராயர்

10. பத்தாந்திருமுறை :

திருமந்திரம்	திருமூலர்

11. பதினோராம் திருமுறை :

(1) திருமுகப் பாசுரம்	1. திருவாலவா யுடையார்
(2) திருவாலங்காடு மூத்த திருப்பதிகங்கள் 2 (3) திருவிரட்டை மணிமாலை (4) அற்புதத் திருவந்தாதி	2. காரைக்காலம்மை யார்
(5) க்ஷேத்திரத் திருவெண்பா	3. ஐயடிகள் காடவர் கோன் நாயனார்
(6) பொன்வண்ணத்தந்தாதி (7) திருவாரூர் மும்மணிக் கோவை (8) திருக்கைலாய ஞானஉலா	4. சேரமான் பெரு மான் நாயனார்
(9) கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி (10) திருஈங்கோய்மலை எழுபது (11) திருவலஞ்சுழி மும்மணிக் கோவை (12) திருவெழுகூற்றிருக்கை (13) பெருந்தேவபாணி (14) கோபப் பிரசாதம் (15) கார் எட்டு (16) போற்றித் திருக்கலி வெண்பா (17) திருமுருகாற்றுப் படை (18) திருக் கண்ணப்ப தேவர் திருமறம்,	5. நக்கீரதேவ நாயனார்

(19) திருக் கண்ணப்ப தேவர் திருமறம்	6. கல்லாடதேவ நாயனார்
(20) மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை (21) சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை (22) சிவபெருமான் திருவந்தாதி.	7. கபிலதேவ நாயனார்
(23) சிவபெருமான் திருவந்தாதி.	8. பரணதேவ நாயனார்
(24) சிவபெருமான் திரு மும்மணிக் கோவை.	9. இளம் பெருமானடிகள்
(25) மூத்த பிள்ளையார் திருமும்மணிக் கோவை	10. அதிராவடிகள்
(26) கோயில் நான் மணிமாலை (27) திருக்கழுமல மும்மணிக் கோவை (28) திருவிடைமருதூர் மும்மணிக் கோவை (29) திருவேகம்பமுடையார் திருவந்தாதி. (30) திருவொற்றியூர் ஒருபா ஒருபது.	11. பட்டினத்துப் பிள்ளையார்
(31) திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலை (32) கோயில் திருப்பண்ணியர் விருத்தம் (33) திருத்தொண்டர் திருவந்தாதி (34) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (35) ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் (36) ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை (37) ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை (38) ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் (39) ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை (40) திருநாவுக்கரசு தேவர் திரு ஏகாதசமாலை	12. நம்பியாண்டார் நம்பிகள்
12. பன்னிரண்டாந் திருமுறை திருத்தொண்டர் புராணம்	சேக்கிழார் சுவாமிகள்

தேவாரப் பதிகங்களும் பாடல்களும் பட்டியல்—அன்றும், இன்றும்

எண்	ஆசிரியர்	திருமுறைகண்ட புராணப்படி அன்று இருந்தவை		இன்றுள்ளபடி கிடைத்துள்ளவை							
				பதிகங்கள்				பாடல்கள்			
		பதிகங்கள்	பாடல்கள்	திரு முறை	திரு முறை	திரு முறை	ஆக	திரு முறை	திரு முறை	திகு முறை	ஆக
1	சம்பந்தர்	1600	16000	1 136	2 122	3 126	384	1 1469	2 1331	3 1358	4158
2	அப்பர்	4900	49000	4 113	5 100	6 99	312	4 1070	5 1015	6 981	3066
3	சுந்தரர் (7ஆம் திருமுறை)	3800	38000	—	—	—	100	—	—	—	1026
	மொத்தம்	10300	103000				796				8250

2. நால்வர் வரலாறு

திருஞானசம்பந்தர் வரலாறு

திருஞான சம்பந்தர் சோழ நாட்டில் சிகாழிப்பதியில் சிவபாத இருதயர்க்கும் பகவதி அம்மையார்க்கும் சிறந்த மகவாய் கவுணியர் கோத்திரத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியில் அவதரித்தார்.

மூன்று வயதினராயிருந்த போது ஒரு நாள் தன் தந்தை யாரோடு குழந்தை திருக்கோயிலுக்குச் சென்றது. தந்தையார் கோவில்குளக் கரையில் குழந்தையை அமர வைத்துப் பின்னர் குளத்தில் இறங்கி நீராடினார். தந்தையார் மூழ்கியிருந்த போது தந்தையாரைக் காணோம் என்று எண்ணி சீகாழித் திருக்கோயில் கோபுரத்தை நோக்கிக் குழந்தை அழுதது. உடனே தோணி யப்பர் உமையம்மையோடு விடையின் மேல் காட்சி கொடுத்து பொன் கிண்ணத்தில் திரு முலைப்பாலைக் கறந்து சிவ ஞானத் தையும் கலந்து ஊட்டுமாறு அம்மைக்கு அருளினார். அம்மை யாரும் ஊட்ட அதுமுதல் ஆளுடைய பிள்ளையார் எனவும் சிவ ஞான சம்பந்தர் எனவும் பெயர் பெற்றார்.

சிவபாத இருதயர் நீராடிய பின் கரையில் வந்து குழந்தை வாயில் பால் வழிந்திருப்பதைப் பார்த்து ''யார் பாலை உண் டாய்'' என ஒரு குச்சியை ஓச்சினார். ஞான சம்பந்தர் தோணி புரப் பெருமானைச் சுட்டி ''தோடுடைய செவியன்'' என்னும் திருப்பதிகத்தைப் பாடி விரலால் காட்டினார்.

பின்னர் இத் தெய்வீகக் குழந்தை தம் தந்தையார் தோள் மீது அமர்ந்து அருகிலுள்ள திருக்கோலாக்காவுக்குச் சென்று பதிகம் பாடியது. இறைவன் பொன்தாளம் கொடுத் தருளினார். பின்னரே சம்பந்தப் பெருமான் பல தலங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டார். தம் தாயார் பிறந்த ஊராய திருநனி பள்ளி சென்றார். அங்குள்ள பெருமானை வணங்கிப்பாடி, பாலை நிலமாயிருந்த இப்பகுதியை நெய்தல் வளம் கொழிக்கச் செய்தார்.

பின்னர் திருநீலகண்டப் பெரும்பாணர் சம்பந்தர் இசைக்கு ஏற்ப யாழ்வாசித்தார். சிதம்பரம் முதலிய தலங்களை வணங்கி திருநெல் வாயிலரத்துறையடைந்து அங்கு பெருமான் அருளால் முத்துச் சின்னம்முத்துச் சிவிகை முத்துக் குடை பெற்றார்.

சீர்காழி வந்து மறையவர்களுக்கு ஐந்தெழுத்தின் பெருமையை உணர்த்தினார். சம்பந்தர் பெருமை கேட்டு திருநாவுக்கரசர் சீர்காழி வந்து சேர்ந்து வணங்கினார். இருவரும் சின்னாள் தங்கியபின் நாவுக்கரசர் சில பதிகளை வணங்கச் செல்ல, சம்பந்தர் திருப்பாச்சிலாச்சிராமம் சென்றார், அங்கு கொல்லிமழவன் என்னும் அரசன் மகள் முயலக நோயால் துன்புற்றுக் கொண்டிருந்தாள். அவ்வரசன் வேண்டுகோட்கு இணங்க "துணிவளர் திங்கள்" என்னும் பதிகம் பாடிப் பெரு மானை வணங்கி அந்நோயைப் போக்கியருளினார்.

அப்பால் பல தலங்களைத் தரிசித்துத் திருக்கொடி மாடச் செங்குன்றூர் வந்து சேர்ந்தார். அங்கு மக்களின் சுர நோயைப் பதிகம் பாடித் தீர்த்தார். சிவபெருமான் திருவருளால் பட்டீசுரத் தில், ஒரு சிவபூதத்தின் மூலம் முத்துப் பந்தர் பெற்றார்.

பின்னர் திருவாவடுதுறையில், சம்பந்தப் பெருமான் தந்தை யின் வேள்விக்காக இறைவனை வேண்டிப் பொற்கிழி பெற்றுத் தந்தார். தருமபுரத்தில் பெரும்பாணர் திருப்பதிக இசை யாழுக்கும் அடங்காதது என்பதை உலகவர் அறிய வைக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்ய உடனே "மாதர் மடப் பிடியும்" என்னும் யாழ்முரிப் பண்ணைச் சம்பந்தர் பாடினார். பெரும்பாணர் அதை இசைக்க இயலாமையால் யாழை உடைக்க முயன்ற போது சம்பந்தர் தடுத்து நிறுத்தி இசையின் பெருமையை எடுத்துக் கூறி இயன்றவரை யாழில் மீட்டச் சொன்னார்.

திருமருகலில் பதிகம்பாடி இறந்த வணிகன் பெருமான் அருளால் உயிர்பெறச் செய்தார். பின்னர் பல தலயாத்திரை மேற்கொண்டு திருநாவுக்கரசருடன் திருவீழிமிழலை சேர்ந்தார். இருநாயன்மார்களும் திருவீழிமிழலையில் பஞ்சத்தால் வாடும் மக்கள் துன்பத்திற்கு வருந்தினார்கள். இருவரும் சிவபெரு மானையே வேண்டிப் படிக்காசு பெற்று மக்கள் பஞ்சத்தைப் போக்கினார்கள்,

இருவரும் திருமறைக்காடு அடைந்தனர். கோயில் கதவுதிறக்க திருநாவுக்கரசர் பாடினார். நேர் கதவு திறந்தது. சம்பந்தர் பின்னர் பாடி அதை மூடச் செய்தார். அது முதல் அவ்வழியே மக்கள் போகவர ஆரம்பித்தனர். அப்பால் திருவாய்மூர் சென்று வழிபட்டு இறைவன் ஆடல் கண்டு இன்புற்றார்.

பின் மறைக்காடு வந்த அவ்வமயமே பாண்டி நாட்டிலிருந்து வந்த அடியார் சிலர் அங்கு சமண சமயம் பரவியிருப்பது பற்றியும் பாண்டிய அரசன் மனைவி மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச் சிறையாரும் மனம் வருந்திக்கொண்டிருப்பதையும் தெரிவித்தனர். மேலும் அவர்கள் பாண்டிநாட்டுக்கு எழுந்தருள வேண்டும் என்றும் விண்ணப்பித்தனர். உடனே திருஞானசம்பந்தர் பாண்டி நாடு செல்ல விரும்பினார். திருநாவுக்கரசர் சமணர்களின் வஞ்சகச் செயல் பற்றிக் கூறிச் செல்ல வேண்டாமென்று தடுத் தார். கோள்களும் நன்னிலையிலில்லை எனக் கூறினார். அது கேட்ட பிள்ளையார் "வேயுறு தோளிபங்கன்" என்னும் திருப் பதிகம் ஓதி அடியார்களுக்கு அக்கோள்கள் நலிவினைச் செய்யா என்று கூறிப் பாண்டி நாடு புறப்பட்டார்.

பாண்டிய நாட்டு எல்லையில் குலச்சிறையாரால் வரவேற்கப் பட்ட சம்பந்தர் திருக்கோயிலில் மங்கையர்க்கரசியாரைக் கண்டு மகிழ்ந்தார். சம்பந்தர் திருமடத்தில் சமணர்களால் வைக்கப் பட்ட தீ, பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோய் உண்டு பண்ணி யது. சமணர்கள் அந்த வெப்பு நோயைப்போக்க பலவாற்றானும் முயன்றனர். பயனின்றிப் போகவே அரசன் மிகவும் துன்புற்றான். மங்கையர்க்கரசியார் சம்பந்தரை அழைத்து வர அரசனின் இசைவைப் பெற்றார். பின்னர் சம்பந்தர் வந்து "மந்திரமாவது நீறு" என்னும் திருப்பதிகம் பாடி மெய்ந் நீறு பூசி அந்நோயைப் போக்கினார். அவன் கூனையும் நிமிரச் செய்தார். அது முதல் அவன் நின்றசீர் நெடுமாறன் ஆனான்.

இது கண்ட சமணர்கள் சம்பந்தரை அனல்வாதத்திற்கழைத் தனர். இருவர் சமயக் கொள்கைகள் எழுதிய ஏட்டையும் தீயிலிட சமணர் ஏடு எரிந்தது. சம்பந்தர் ஏடு பச்சையாய் எரியாது தென் பட்டது. பின்னர் புனல்வாதத்திற்கு அழைத்தனர். இருவர் ஏட்டினையும் வைகையாற்றிலிட்டனர். சமணர் ஏடு அடித்துக் கொண்டு போகப்பட்டது. சம்பந்தர் ஏடு ஆற்றை எதிர்த்துச் சென்றது. திருவேடகத்தில் மந்திரி குலச்சிறையார் சென்று

எடுத்து வந்தார். இதனைக் கண்ட அரசன் சைவன் ஆனான். சமணர்கள் முன்னரே கூறுரைத்தவாறு கழுவேறினர்.

பின்னர் சோழ நாட்டிற்குத் திரும்பி திருக்கொள்ளம் புதூரில் பதிகம்பாடிக்காவிரி ஆற்றில், அடியார்களை ஓடத்தில் அழைத்துச் சென்றார். திருத்தெளிச்சேரியில் சம்பந்தரை வாதத்திற் கழைத்த புத்தர்களை வென்றார். அப்பருடன் திருப்பூந்துருத்தியில் சில நாட்கள் தங்கிய பின்னர் தொண்டை நாட்டு யாத்திரையை மேற்கொண்டார். திருவோத்தூரில் இறையருளால் ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கினார். தொண்டை நாட்டுத் தலங்களை வழிபட்டு வடநாட்டுத் தலங்களை உள்ளத்தால் வழிபட்டார்.

திருவொற்றியூர் கோயிலை வணங்கி திருமயிலை சேர்ந்தார். அங்கு பூம்பாவை எனும் மங்கை நல்லாளின் எலும்பைப் பதிகம் பாடி மீண்டும் பெண்ணுருவாக்கினார்.

பல தலங்களின் யாத்திரைக்குப் பின்னர் சீர்காழி அடைந்தார். நல்லூர்ப் பெருமணத்தில் நம்பியாண்டார் நம்பியின் பெண்ணைச் சம்பந்தருக்குத் திருமணம் செய்ய ஏற்பாடு ஆகியது, திருநீலநக்க நாயனார் திருமண வேள்வியை நடத்தினார். திருமணக்கோலத்தோடு மனைவியுடனும் இறைவன் திருவடியில் சேர "காதலாகிக் கசிந்து" என்னும் பதிகம் பாடினார். திருமணத்திற்கு வந்திருந்த அடியார்களுடன் அருட்சோதியில் கலந்தார். யாவரும் பேரின்ப முற்றனர். அந்நன்னாளே வைகாசி மாதம் மூல நட்சத்திரமாகும்.

வெம்பந்தம் தீர்த்து உலகு ஆள் வேந்தன் திருஞான
சம்பந்தனை அருளால் சாருநாள் எந்நாளோ

(தாயுமானசுவாமிகள்)

திருநாவுக்கரசர் வரலாறு

திருநாவுக்கரசர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாண் மரபில் குறுக்கையர் குடியில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் அரிய மகவாய் ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தருளினார். இவருக்குப் பிள்ளைத் திருநாமம் மருள் நீக்கியார் என்பதாம். இவருக்குத் திலகவதியார் என்னும் தமக்கையார் ஒருவருமிருந்தார்.

திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயது ஆரம்பமாயிற்று. அவ்வமயம் கலிப்பகையார் என்னும் நம்பிக்குத் திலகவதியாரை மணஞ்செய்து கொடுப்பதாகப் பேச்சு நடந்தது. உறுதியும் ஆயிற்று. அதற்குள் பகை மன்னர் தமிழ்நாட்டில் போர் தொடுக்க வர, நாட்டுக் காவல் கருதி கலிப்பகையார் உற்றுழி உதவி வர, தமிழ் மன்னருக்குத் துணையாகப் போருக்குப் புறப்பட்டார். இந்நிலையில் புகழனார் நோய்வாய்ப்பட்டு இறந்தார். அது பொறாத மாதினியாரும் கணவனாருடன் உயிர் நீத்தார். பெற்றோர்களை இழந்த குழந்தைகளிருவரும் மிகவும் துன்புற்றனர். போதாக் குறைக்குப் போருக்குச் சென்ற கலிப்பகையாரும் புகழுடம்பு பெற்றார் என்ற செய்தி வந்தது. அது கேட்டுப் பொருத திலகவதியார் தானும் உயிர்நீக்கக் கருதினார். தம்பியார் மருள்நீக்கியார் மிகவும் நொந்து தமக்கையாரை வணங்கி அவர் உயிர் நீக்கக் கருதின் அவருக்கு முன் தாம் உயிர் நீப்பதாகக் கூறினார்.

இது கண்ட திலகவதியார் தம்பியார் உளராக வேண்டும் என வைத்த இரக்கம் மேலீட்டால் உயிர் தாங்கி மனைக்கண் இருந்தே தவம் மேற் கொண்டு ஒழுகலானார். மருள் நீக்கியார் தமக்கையார் பாதுகாப்பில் நன்கு வளர்ந்து வந்தார். கல்வி கேள்விகளில் வல்லவரானார். அக்காலத்து சமண சமயம் எங்கும் பரந்திருந்தது. அச்சமயக் கோட்பாடுகள் மருள் நீக்கியாரைத் தம் வயப்படுத்தின. ஆதலின் மருள் நீக்கியார் சமண சமயச் சார்பு பெற்று அம்மதக் கோட்பாடுகளை நன்கு கற்று அச்சமயத்தில் ''தருமசேனர்'' என்ற பட்டமும் பெற்றுச் சிறந்து விளங்கினார். பாடலிபுத்திரத்தில் சமண சமயத் தலைவர்களுள் ஒருவராய் வாழ்ந்து வந்தார்.

தம்பிக்காக உயிர்தாங்கிய திலகவதியார் இந்நிலை கண்டு மிகவும் மனம் நொந்தார். திருவதிகைக்குச் சென்று அங்கு வீரட்

டானப் பெருமானை நித்தலும் வணங்கினார். அத்திருக்கோயிலுக்குரிய திருவலகிடுதல், பூக்கொய்தல், மாலைகள் கட்டிக் கொடுத்தல் முதலிய திருப்பணிகளையும் செய்து கொண்டு தம் தம்பியையும் ஈடேற்ற வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துப் பெருமானைப் பணிந்து வந்தார்.

பெருமான் திருவருளால் மருள் நீக்கியாருக்குச் சூலை நோய் பற்றியது. சமணர்கள் பல்லாற்றான் முயன்று பார்த்தும் அந்நோய் நீங்கவில்லை. அந்நோயின் மிகுதியால் தம் தமக்கையை நினைத்தார். ஆள்மூலம் அவருக்குச்செய்தி அனுப்பினார். அவ்வம்மையார் தான் அவ்வமண்பாழிவர இயலாது என்று மறுக்கவே மருள் நீக்கியாரே தக்க துணையுடன் திருவதிகை வந்துசேர்ந்தார். தமக்கையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நோயின் கொடுமையையும் எடுத்துரைத்தார். அவ்வம்மையார் "இறைவன் அருள்" என்பதை மனத்துட்கொண்டு "திருவாளன் திருநீற்றைத் திலகவதியார் ஐந்தெழுத்து ஓதி எடுத்துக்கொடுக்க பெருவாழ்வு வந்த" தெனக் கருதி மருள் நீக்கியார் இருகையாலும் வாங்கித் தரித்துக் கொண்டார். பின்னர் அம்மையார் மருள் நீக்கியாரைத் திருவீரட்டானேசுரர் முன் அழைத்துச் சென்றார். மருள் நீக்கியார் பெருமானை வணங்கியதும் திருவருள்வலத்தால் உள்ளத்தில் பேரன்பு பொங்கப்பாடும் உணர்ச்சி மீதூரவே "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

உள்ளங்கசிந்து பாடவே சூலை நோயும் பெருமானருளால் நீங்கியது. அவ்வமயமே-'நாவுக்கரசு எனும் பெயர் பெற்று நிலை பெறுக" என்னும் அசரீரியும் தோன்றிற்று. அது முதல் மருள் நீக்கியார் திருநாவுக்கரசர் ஆனார்.

இவ்வாறு திருநாவுக்கரசர் சிறந்த தொண்டராய் மாறியதுடன் பல தலங்கள் தோறும் சென்று வழிபடக் கருதினார். அங்கங்கு திருக்கோயிலில் புல்பூண்டு முள் முதலியவற்றை நீக்கித் தூய்மை செய்ய விரும்பிக் கையில் உழவாரப்படை ஒன்றை எப்பொழுதும் தாங்கும் நியதியை மேற்கொண்டு தொண்டுள்ளம் கொண்டு ஒழுகினார்.

இவர் சைவ சமயம் சார்ந்ததைப் பொறாத அமணர்கள் அவ்வமயம் நாட்டையாண்ட சமண சமயத்தைச் சார்ந்த பல்லவ மன்னனிடம் சென்று பொய்யுரைகள் பல கூறி அவனை நாவுக்கரசர் பால் சினங்கொள்ளச் செய்து ஒறுக்கவும் தூண்டினர்;

பல்லவ மன்னனும் நாவுக்கரசரை அழைத்து வர அமைச்சர்களைப் போக்கினான். நாவுக்கரசரோ ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்னும் திருப்பதிகம் பாடி அரசன் முன் செல்லமறுத்து விட்டார். அதனால் அரசனுக்குச் சினம் மூளும் என்று கருதிய அமைச்சர்கள் திருநாவுக்கரசரிடம் தங்கள் துன்ப நிலைளை எடுத்துக் கூற அவரும் அமைச்சருடன் அரசன்பால் சென்றார். அரசன் சமணர் ஆலோசனைப்படி நாவுக்கரசரை நீற்றறையிலிடப் பணித்தான். அவ்வாறே நாவுக்கரசரை நீற்றறையிலிட்டுப் பூட்டினர். அவ்வ மயம் ''மாசில் வீணையும்'' எனும் திருப்பதிகம் பாடி இறைவனடி யையே நாவுக்கரசர் சிந்தித்திருந்தார். ஏழு நாள்களுக்குப் பின் நீற்றறையைத் திறந்து பார்த்து நாவுக்கரசர் பெருமான் இறையடி மறவாத சிந்தையராய் இருப்பது கண்டு வியந்தனர். பின்னர் நாவுக்கரசருக்கு நஞ்சூட்ட அமணர் கூறிய யோசனையை ஏற்று அவ்வாறே அரசனும்செயல்படுத்தினான். அதையும் அருந்தினார். நஞ்சும் நாவுக்கரசரை நலியாதிருப்பதைக் கண்ணுற்ற அமணர்கள் யானையை விட்டு இடறச் செய்யுமாறு அரசனுக்குக் கூறினர். அவனும் அவ்வாறே யானையைக் கொண்டு நாவுக்கரசரைத் துன்புறுத்தச் செய்தான். அது போதே ''சுண்ணவெண் சந்தனச் சாந்தும்'' என்னும் திருப்பதிகம் பாடினார். ''அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும் இல்லை'' என்று பாடி அவ்வாறே இறையெண்ணத்துடன் நின்றார். அவ்யானை நாவுக் கரசரை வலம் வந்து இறைஞ்சி மீண்டது.

பாகர்கள் யானையை வற்புறுத்தி நாவுக்கரசரை நலியுமாறு ஏவவே அவர்களையும் அருகிலுள்ள அமணர்களையும் கொன்று வீழ்த்திச் சென்றது. பின்னரும் அரசன் அமணர்களின் ஆலோ. சனைப்படி நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலில் வீழ்த் தினான். அவ்வமயமே ''சொற்றுணை வேதியன்'' என்னும் திருப் பதிகம் பாடிக் கல்லே தெப்பமாய் மிதக்கக் கரைவந்து சேர்ந்தார். திருப்பாதிரிப் புலியூர்க் கரையிலே நாவுக்கரசரை அடியார்கள் எதிர்கொண்டு அழைக்க அங்குள்ள திருக்கோயிலுக்குச் சென்று ''ஈன்றாளுமாய்'' என்னும் திருப்பதிகம் பாடிப் பரவினார். பின்னர் பல பதிகளுக்கும் சென்று வணங்கித் திருவதிகை சேர்ந் தார். அங்குள்ள பெருமானை வணங்கித் துதித்து முன்னுள்ள அறியாமையை நினைந்து வருந்தி ஏழைத் திருத்தாண்டகம் பாடினார்.

இவ்வாறு பல துன்பங்களிலும் பிழைத்த நாவுக்கரசர் பெருமை கேட்டு, பல்லவ மன்னனும் தான் செய்த துன்பங்களுக்கு வருந்தி அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிச் சைவனானான்.

அப்பால் நாவுக்கரசர் பல தலங்களை வணங்கிக் கொண்டே திருப்பெண்ணாகடம் சேர்ந்தார். அங்குள்ள திருத்தூங்கானை மாடப் பெருமானை இறைஞ்சி சூலக்குறியும் இடபக்குறியும் பொறித்தருள வேண்டினார். அவ்வாறே ஒரு பூதம் அவர் வேண்டியவாறு அக்குறிகளைப் பொறித்துச் சென்றது கண்டு மகிழ்ந்தார். பின் பல தலங்களை வணங்கிய பின் தில்லையம்பலம் சார்ந்து அங்கு பெருமானைக் கண்ணாரக் கண்டு பல பதிகங்கள் பாடிப்பரவினார். அப்பால் அருகிலுள்ள சில தலங்களை வணங்கிய பின் தில்லையை அடைந்து தில்லைக்கூத்தனை மீண்டும் வணங்கிப் பாடினார். அவ்வமயமே சீர்காழியில் உள்ள ஆளுடைப்பிள்ளையாரின் பெருமையினைக் கேள்வியுற்று அப்பதிசார்ந்தார். பிள்ளையாரும் திருநாவுக்கரசர் பற்றிச் செவியுற்று எதிர் கொண்டார். அவ்வாறு சந்தித்தபோதே சம்பந்தர் அப்பரே என நாவுக்கரசரை விளித்து உபசரித்தார். சீர்காழியில் இருவரும் பல நாள் தங்கி காழிப் பெருமானை வழிபட்டனர். பின்னர் திருநாவுக்கரசர் சோழ நாட்டுத் திருத்தலங்களை வழிபடச் சென்றார்.

பல தலங்களையும் வழிபட்டுக் கொண்டே திருச்சத்தி முற்றம் சேர்ந்தார். அங்கு "பூவார் அடிச்சுவடு என்மேற்பொருத்திவை" என வேண்டித் திருப்பதிகம் பாடினார். அப்போது இறைவன் "நல்லூர்க்கு வா" என்ப் பணித்தருளவே அவ்வாறே நல்லூர் சென்றார். அங்கு பெருமானை வணங்க "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என உணர்த்தி நல்லூரெம்பெருமான் நாவுக்கரசரின் "சென்னிமிசைப் பாத மலர் சூட்டினன்."

அப்பால் சோழ நாட்டுத் திருப்பதிகள் பல வணங்கித் திருப்பழனம் வந்தார். வரும் வழியில் திங்களூரில் ஒரு தண்ணீர்ப் பந்தர் திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தர் என விளங்குவதைக் கண்டார். அங்குள்ளவரிடம் அப் பந்தர் பற்றி வினவியறிந்து திங்களூரிலுள்ள அப்பூதியடிகள் அங்குள்ள குளம், சோலை முதலிய எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசர் பெயர் சூட்டியிருப்பதைக் கேட்டு வியப்புற்றார். அவ்வப்பூதியாரைக் காண நாவுக்கரசர் திங்களூர் சென்றார். அப்பூதியாரைக் காணவே

அவரும் அடியாரைக் கண்டு உபசாரம் செய்தார். நாவுக்கரசர் "தண்ணீர்ப் பந்தரில் நும் பெயரை எழுதாது வேறொரு பெயர் எழுதக் காரணமென்ன"? என்று அப்பூதியாரை வினவினார். அதுகேட்ட அப்பூதியடிகள் நாவுக்கரசர் பெருமையை எடுத்துக் கூறி அவருடைய பெயரா வேறொரு பெயர்? சிவனடியார் திருவேடம் பூண்டும் இவ்வாறு கூறலாமா என வெகுண்டுரைத் தார். வந்த அடியாரை நீவிர் யார்? என்று வினவினார். உடனே சூலை நோயினின்றும் தடுத்தாட்கொண்டவர் தாமே என்பதுணர்த்த அப்பூதி அடிகள் கொண்ட மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. சுற்றத்தார் யாவரொடும் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு செய்தார்.

உண்ணும் நேரம் அண்மியது. மூத்த திருநாவுக்கரசு எனும் தன் முதல் மகனை அடியார் உண்ண இலை அறுத்து வருமாறு அப்பூதி அடிகள் ஏவினார். அப்பிள்ளையும் சென்று இலையை வீட்டின் பின்புறத்துள்ள வாழை மரத்தில் அறுத்தபோது பாம்பொன்று தீண்டிக் கடித்தது. அது பொறாத பிள்ளை இலையைத் தாயிடம் ஓடோடி வந்து கொடுத்ததும் உயிர் விட்டான். தாயும் தந்தையும் அடியார் அமுதுண்ண இவ்விறப்பு தடையாயிருக்கக் கூடாது என நினைத்து அப்புதல்வன் உடம்பினை மூடி மறைத்து வைத்தபின் விருந்துக்கு ஏற்பாடு செய்தனர்.

திருநாவுக்கரசர் அமுதுண்ண அமரும்போது வீட்டிலுள்ளார் யாவரும் வழிபட்டுத் திருநீறு பெற்றனர். மூத்த திருநாவுக்கரசு வராதிருக்கவே அப்பர் பெருமான் அப்பிள்ளையைப் பற்றிக் கேட்டார். "இப்போதிங்கவன் உதவான்" என்று அப்பூதியடிகள் பதில் கூறினார். அதுகேட்ட அப்பர் அடிகள் மேலும் வினவி உண்மையறிந்து அவ்வுடம்பைக் கொணரச் செய்து "ஒன்று கொலாம்" என்னும் திருப்பதிகம் ஓதி அப்பையனை உயிர்த்தெழச் செய்தார். பின்னர் யாவரும் மகிழ அப்பர் பெருமான் விருந் துண்டார். சின்னாள் அங்கு தங்கியபின் அப்பர் திருப்பழனம் சென்று வழிபட்டார்.

அப்பால் திருநல்லூர், திருவலஞ்சுழி, திருக்குடமூக்கு முதலிய பல தலங்களைத் தரிசித்துக்கொண்டே திருவாரூர் சேர்ந்தார். பன்னாள் அங்குள பெருமானைப் பாடிப் பரவியபின் திருப்புகலூர் வந்து சேர்ந்தார். முருக நாயனார் திருமடத்தில் தங்கியிருந்த

போதே திருஞானசம்பந்தர் அங்கு வந்து சந்தித்தார். பின்னர் இருவரும் அண்மையிலுள்ள தலங்களைத் தரிசித்துத் திருப்புகலூர் வந்து சேர்ந்தனர். பின்னர் இருவருமே சேர்ந்து திருஅம்பர் மாகாளம், திருக்கடவூர் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டே திருவீழிமிழலை வந்து சேர்ந்தனர். அவ்வமயம் அவ்வூரில் கடும் பஞ்சத்தால் மக்கள் துன்புற்றனர். அதுகண்டு பொறாது பெருமானிடம் வேண்டினர். இருவருக்கும் இறை யருளால் நாள்தோறும் படிக்காசு வழங்கப்பட்டது. அடியார்கள் துன்பம் கலைந்தது. அப்பால் இருவரும் திருவாஞ்சியம் முதலிய தலங்களை வணங்கிய பின் திருமறைக்காடு சேர்ந்தனர்.

அங்கு வேதங்கள் வழிபட்டு அடைத்த கதவு அக்காலத் திலிருந்து திறக்கப் பெறவேயில்லை. மக்கள் பக்கத்து வழியில் திருக்கோயில் சென்று வந்தனர். அதுகண்ட சம்பந்தர் திருநாவுக்கரசரை அக்கதவு திறக்குமாறு பாடக்கேட்டுக் கொண்டார். அப்பரும் "பண்ணினேர் மொழியாள்" எனும் திருப்பதிகம் பாடினார். பத்துப் பாட்டுப் பாடியும் கதவு திறவாமையைக் கண்டு "இரக்கம் ஒன்றிலீர்" என்றும் "சரக்க இக்கதவம் திறமினே" என்றும் பாடி வேண்டினார். உடனே கதவம் திறந்தது. பின் சம்பந்தர் அக்கதவம் மூடப் பாடியதும் மூடிக்கொண்டது. அது முதல் மக்கள் அவ்வழியே திருக் கோயிலுக்குள் போய்வரத் தொடங்கினர். திருவாய்மூரில் இருவரும் இறைவனின் திருநடனக் காட்சியைக் கண்டு களித் தனர்.

அவ்வமயம் மதுரைக்குச் சம்பந்தர் சென்றார். திருநாவுக் கரசர் சமணர் கொடுமைகளை எடுத்துக் கூறி மதுரை செல்ல வேண்டாமென்று தடுத்தார். சம்பந்தர் இறையருள் வலம் கொண்டு புறப்படலானார். பின் அப்பர் நாகைக் காரோணம், திருவாவடுதுறை முதலிய தலங்களை வணங்கிய பின் பழையாறை என்னும் திருத்தலத்திற்கு வந்தார். அங்கு சமணர்கள் ஒரு திருக்கோயிலை மறைத்துள்ளனர். அது பொறாது அப் பெருமானை வணங்கியன்றிப் போகேன் என அப்பர் பெருமான் உண்ணா நோன்பு மேற்கொண்டார். பழையாறைப் பெருமான் அங்குள அரசன் கனவில் தோன்றி அப்பரின் குறிப்பினை அருள் செய்தார். அரசனும் இறைவன் அருளியவாறே சென்று திருக் கோயிலைப் புதுக்கி அப்பரை வழிபடச் செய்து தானும் வழிபட்டு

நன்னிலையுற்றான். சமணர்களையும் அடக்கினான். திருப்பைஞ் ஞீலியில் சிவன் அருளால் பொதி சோறு பெற்று உண்டு களித்தார்.

அப்பால் பல தலங்களைத் தரிசித்துப் பின்னர் திருக்காளத்தி அடைந்து வட நாடு செல்ல முற்பட்டார். மூப்பால் வட யாத்திரை செல்ல முடியவில்லை. நடந்தும் உருண்டும் சென்றார். இறைவனின் கருணையினால் ஒரு குளத்தில் மூழ்கி திருஐயாற்றில் எழுந்திருந்து பெருமானைத் திருக்கயிலைக் காட்சியில் கண்டார்.

திருப்பூந்துருத்தி வந்து சேர்ந்தார். அங்கேயே திருமடம் ஒன்று அமைத்துக்கொண்டு பெருமானை நாடோறும் வழிபட்டுப் பாடிப் பரவி வந்தார். இச்சமயத்துத்தான் பாண்டி நாட்டு யாத்திரையை முடித்துத் திரும்பிய ஞான சம்பந்தர் பல தலங் களை வணங்கியபின் திருப்பூந்துருத்தியில் அப்பர் தங்கியிருப்பது பற்றிக் கேள்வியுற்று அவண் வந்து சேர்ந்தார். சம்பந்தர் வருகையைத் தெரிந்த அப்பர் தன்னை இன்னாரென அறிவித்துக் கொள்ளாது கூட்டத்துட் புகுந்து சம்பந்தர் ஏறிவந்த சிவிகை யைத் தாங்கி வந்தார். திருப்பூந்துருத்தி அண்மியதும் அங்குள்ளாரை ''அப்பர் எங்குற்றார்?'' என்று சம்பந்தர் வினவி னார். உடனே தங்கள் சிவிகையைத் தாங்கும் பேறு பெற்று இங்குற்றேன்'' என்று அப்பர் பெருமான் பதிலிறுத்தார். அது கேட்டுச் சம்பந்தர் சிவிகையினின்றும் கீழே குதித்து இருவரும் பணிந்து உளமுருகித் தொழுது போற்றினர். பின்னர் இருவரும் திருமடத்தில் தங்கினர்.

அப்பால் அப்பர் பாண்டி நாட்டு யாத்திரையை மேற்கொண் டார். திருவாலவாய் சென்று வணங்கினார். அப்பர் மங்கையர்க்கரசியாரையும் குலச்சிறையாரையும் கண்டு உளம் மகிழ்ந்தார். பின் திருப்பூவணம் முதலிய பல திருத்தலங்களை யும் வழிபட்ட பின் சோழ நாடு சேர்ந்து திருப்புகலூர் வந்து சேர்ந்தார். புகலூர்ப் பெருமானை வணங்கிப் பல திருப் பதிகங்கள் பாடிப் பரவி உழவாரத் தொண்டுகளும் செய்து கொண்டு அங்கேயே வதிந்து வந்தார்.

அப்பர் பெருமானின் உள்ளப்போக்கை உலகத்தார்க்குத் தெரிவிக்கக் கருதிய இறைவன் அப்பர் உழவாரத் தொண்டு செய்த இடங்களில் எல்லாம் பொன்னும் மணியும் கிடைக்குமாறு அருள் செய்தார். நாவுக்கரசர் அவற்றைக் கண்டு சிறிதும் மனம்

மாறுபடாமல் ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் பான்மையில் அவற்றை எடுத்து அருகிலுள்ள குளத்தில் வீசி எறிந்தார். மேலும் தேவமாதர்கள் பலர் அப்பர் பெருமான் முன்வந்து ஆடிப் பாடி அவர் சிந்தையைக் கலைக்க முயன்றனர். அதற்கெல்லாம் சிறிதும் துளக்கமில்காட்சியராய் சிந்தையைச் சிவன்பால் செலுத்தி உறைப்பாயிருந்தார். கடைசியில் உலக வாழ்க்கையில் உவர்ப்புற்று அவன் திருவடிப்பேறு அடையும் நாட்டம் மீதூர்ந்தவராய் ''எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ'' என்னும் கசிவு மிக்க தாண்டகப் பதிகத்தைப் பாடி வேண்டினார். அவ்வேண்டுகோட்படியே ''புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே'' என்றவாறு சித்திரைத் திங்கள் சதய நன்னாளில் அப்பர் பெருமான் தம் 81-ஆம் வயதில் இறைவன் திருவடி நிழல் அடைந்து பேரானந்தப் பெருவாழ்வு எய்தினார்.

ஏரின் சிவபோகம் இங்குஇவற்கே என்னஉழ
வாரம்கொள் செங்கையர்தான் வாரம்வைப்பது எந்நாளோ.

(தாயுமான சுவாமிகள்)

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு

திருக்கயிலையில் சிவபெருமானின் அடியார்களுள் ஒருவரான ஆலாலசுந்தரர் ஒரு நாள் திருநந்தவனத்திற்குப் பூக்கொய்யச் சென்றார். அவ்வமயம் உமாதேவியாரின் சேடியர்களுள் இருவர் அனிந்திதை, கமலினி என்போரும் அங்கே பூக்கொய்ய வந்தனர். ஆலாலசுந்தரர் அப்பெண்களிருவரையும் கண்டு காதல் கொண்டார். இருப்பினும் தம் மனத்தை அடக்கிக்கொண்டு பூக்கொய்து இறைவன்பால் சென்றார். எல்லாம் அறியும் ஆற்றல் வாய்ந்த பெருமான், போக இன்பம் துய்த்தற்குரிய இடம் பூலோகமாதலின் அங்குச் சென்று அவ்விருவரையும் மணந்து இன்பம் துய்த்தபின் இங்கு வா என்று கூறி ஆலால சுந்தரரை அனுப்பிவிட்டார். அப்போது ஆலாலசுந்தரர் நான் உலக மயக்கால் துன்புறாது தடுத்தாட்கொள்ள வேண்டும் என்று வேண்டினார். பெருமானும் அதற்கு நேர்ந்தார். அதன்படியே சுந்தரமூர்த்தி சுவாமிகளாய் பூலோகத்தில் பிறந்தார்,

சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் ஆதிசைவ மரபில் திருநாவலூரில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் அரும் பெறல் மகவாய் ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்தார். அவருக்குப் பிள்ளைத் திருநாமம் நம்பியாரூரர் என்பதாம். ஒரு நாள் அந்நாட்டு அரசன் நரசிங்கமுனையரையர் இப்பிள்ளையின் பேரழகிலீடுபட்டு சடையனாரிடத்தில் போய்க் கேட்டு அப்பிள்ளை யைப் பெற்றுச் சென்று அரசனின் குமரனாகவே வளர்த்து வந்தார். அப்பிள்ளையும் அரசர் திருவும் ஆதிசைவர் கலையும் பெற்றுச் சிறந்து திகழ்ந்தது. பின்னர் நம்பியாரூரர்க்குத் திருமணப் பருவம் கிட்டியது.

புத்தூர் சடங்கவிசிவாசாரியர் திருமகளை நம்பியாரூரருக்கு மணமுடிக்கப் பெரியோர்கள் கருதினர். திருமண ஏற்பாடுகள் சிறப்புற நிகழ்ந்தன. திருமண முன்னாளன்று, ஒரு கிழ வேதியர் வந்து நம்பியாரூரர் தம் அடிமை என்றும் தனக்குத் தெரியாமல் திருமணம் செய்துகொள்ளக் கூடாதென்றும் அதற்குத் தம்மிடம் பழைய ஆவணமுள்ளதென்றும் கூறினார். அங்கிருந்தோர் மறையவர் பிறர்க்கு அடிமையாகும் வழக்கமில்லையே என்றும் கூறிப் பார்த்தனர். கிழவேதியர் விடவில்லை. தன்கூட தனக்கு வேலையாளாய் வரவேண்டும் என்று அழைத்தார். நம்பியாரூரர் - 'நீ பித்தனோ' என்று சினந்தார். - 'பித்தனானாலும் சரி

பேயனானாலும் சரி, நீ பணி செய்ய உடனே கூடவா'' என்றார் கிழ வேதியர். உடனே நம்பியாரூரர் அந்தப் பழைய ஆவண ஓலையைக் காட்டச் சொன்னார். அப்பெரியவர் காட்ட மறுக்கவே வலியப் பிடித்து அவ்வோலையை நம்பியாரூரர் கிழித் தெறிந்தார். அதுகண்டு அக்கிழவேதியர் அவையினரை நோக்கி முறையிட்டார்.

பின்னர் அம்மறையவர் பற்றி யார் என விசாரித்தனர். அம்மறையவர், தாம் திருவெண்ணெய் நல்லூரிலிருப்பதாகக் கூற அங்கேயே வழக்குத் தீர்த்துக்கொள்ளக் கருதி மறையவர் முன் செல்ல நம்பியாரூரர் பின்தொடர்ந்தார். திருவெண்ணெய் நல்லூர் அவையினரும் வழக்கைக் கேட்டு நம்பியாரூரரைக் கேட்டனர். அவர் இவ்வழக்கு புதுமையாயுள்ளது என்று கூறினார். பின்னர் அவையினர் கிழ வேதியரிடம் வழக்கை எவ்வாறு உறுதிப்படுத்துவதென்று கேட்க நம்பியாரூரன் கிழித்த ஓலை; படி ஓலை மூல ஓலை வேறு உளது என்று அதைக் காட்டினார். அவ்வோலையை அவையினர் பார்த்து கையெழுத்து முதலியன ஒத்திருத்தல் கண்டு நம்பியாரூரர் கிழவேதியருக்கு அடிமையே என முடிவு கூறினர்.

பின், அவ்வவையினர் திருவெண்ணெய்நல்லூரில் உம் இருப்பிடம் எங்குளது என்று கேட்க தாம் காட்டுவதாக யாவரை யும் அழைத்துச் சென்று அங்கு திருக்கோயிலினுள் சென்று மறைந்தார். பின்னரே யாவரும் திகைத்து நின்றனர். அவ்வமயம் சிவபிரான் உமையம்மையாருடன் காட்சி கொடுத்து அவரைத் தடுத்தாண்ட நிலையையும் தெரிவித்தருளினார். பின் திருநாவலூரர் வன்மையாகப் பேசியமையால் வன்றொண்டர் என்னும் பெயரும் பெற்றார். அவ்வமயம் பெருமான் ''அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலின் சொற்றமிழ் பாடுக'' என்றார். நம்பியாரூரர் எவ்வாறு பாடுவேன் என்றுளம் கசிய ''நீ என்னைப் பித்தனோ'' என்றாய். ஆதலின் அவ்வாறே பாடுக என்றார். உடனே ''பித்தா பிறைசூடி'' என்னும் திருப்பதிகத்தை இறையரு ளால் செந்தமிழ் நலம் கனியப்பாடி இறைஞ்சினார். முன்னர்ப் பேசிய சடங்கவிசிவாசாரியார் திருமகள் சுந்தரரையே வழிபடு தெய்வமாகப் போற்றிப் பின்னர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அப்பால் சுந்தரர் திருத்துறையூரை அடைந்து அங்குள்ள பெருமானை வணங்கி தவநெறி தந்தருள வேண்டினார்.

திருவதிகை சேர்ந்து அவ்வூர்க்குப் புறம்பேயுள்ள சித்தவட மடத்தில் இரவு துயின்றார். அதிகைப் பெருமான் முதுவேதியர் வடிவுகொண்டு அருகில் படுத்து சுந்தரர் திருமுடியில் தம் திருவடியைச் சூட்டியருளினார். சுந்தரர் வேறு திசையில் படுத்தும் மீண்டும் திருவடி சூட்டவே ''நீ யார்'' என சுந்தரர் கேட்க ''அறிந்திலலயோ'' எனக் கூறி மறைந்தருளினார். அது கண்டு ''தம்மானை அறியாத சாதியார் உளரோ'' என்ற திருப்பதிகம் பாடிப் பரவினார். பின் தில்லை வந்து சேர்ந்தார். அங்குள பெருமானைப் பாடிப் பரவவே ''திருவாரூர் வா'' என்னும் அசரிரி கேட்க உடனே புறப்பட்டு சீகாழி அடைந்தார். அங்கு காழிப்பெருமான் காட்சியினைக் கண்டு வணங்கித் துதித்தார். அப்பால் திருவாரூர் எல்லை வந்து சேர்ந்தார். அதற்குள் அங்குள அடியார்கள் கனவில் நம்பியாரூரரை எதிர்கொண் டழைக்குமாறு பெருமான் தெரிவித்தார். ஆகவே அடியார்கள் தக்க சிறப்புக்களுடன் நம்பியாரூரரை எதிர்கொண்டு அழைத்துப் போற்றினர். ஆரூரர் திருக்கோயிலின் உள்ளே தேவாசிரிய மண்டபம் முதலியவற்றைத் தொழுது திருமுன் சென்று பாடிப் பரவினார். அவ்வமயம் பெருமான் ''நம்மைத் தோழமையாகத் தந்தனம்'' என்று அசரிரி கூற அது முதல் அவருக்குத் தம்பிரான் தோழர் என்னும் திருநாமமும் ஏற்பட்டது.

திருக்கயிலையில் கண்ட பெண்கள் இருவருள் கமலினியார் என்பவர் திருவாரூரில் பரவையார் என்னும் பெயரைப் பூண்டு கணிகையர் குலத்துள் தோன்றி நாள்தோறும் பெருமானை வழிபட்டு வந்தார். வழக்கம்போல் அவ்வம்மையார் திருக்கோயில் வழிபாட்டுக்கு வரும்பொழுது சுந்தரர் அத்தையலாரைக் கண்டு முன்னை ஊழ்வினையால் காதல் கொண்டார். பரவையார் உள்ளமும் சுந்தரர்பால் சென்றது. இருவரும் இறையருளையே நாடினர். பெருமானும் அடியார்களிடத்து அவ்விருவர் திருமணத்தையும் முடித்துவைக்குமாறு கனவில் அருள் செய்தார். அவ்வாறே சுந்தரர் பரவையார் திருமணமும் அடியார்கள் முன்னிலையில் சிறப்புற நிகழ்ந்தது. ஒரு நாள் தேவாசிரிய மண்டபத்தில் அடியார்கள் பலரிருக்கக் கண்டும் உள்ளே பெருமானை வழிபடச் சென்றார். அதுகண்ட விறன்மிண்டர் சுந்தரர் அடியார்களை வணங்காது சென்ற நிலை கண்டு சினம் கொண்டார். உள்ளே சிவபெருமானும் தொண்டர் தம் பெருமையை எடுத்துக் கூறி அவர்களைப் பாடுவாயாக என்று கூற

''எவ்வாறு பாடுவேன்'' என்று சுந்தரர் தன் இயலாமையைத் தெரிவிக்க ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடியெடுத்துக் கொடுக்கவே அவனருளால் அத்திருத் தொண்டத்தொகைப் பதிகத்தைப் பாடிப் பரவி அங்குள்ள அடியார்கள் யாவரையும் வணங்கினார்.

சுந்தரர் திருவாரூரில் பரவையாருடன் ஆரூர்ப் பெருமானை வழிபட்டுக்கொண்டிருக்கும்போது ஒரு சமயம் கடும் பஞ்சம் உண்டாயிற்று. அதனால் வழக்கம்போல் நெல் முதலியவை அனுப்பும் குண்டையூர்க்கிழார் என்பவர்க்கு அச்சமயம் அனுப்ப முடியா நிலை ஏற்பட்டது. அதனால் வருந்தித் துயின்றார். பெருமான் திருவருளால் மறுநாள் நெல் மலையாகக் குவிந்து கிடந்தது. அதனை அவர் சுந்தரர்க்குக் கூறி அவற்றை எடுத்துக் கொள வேண்டினார். சுந்தரர் அந்நெல் மலையைப் பார்த்ததும் பெருமானையே அந்நெல் எடுத்து வரத்தக்க ஆட்களையும் தருமாறு வேண்டினார். ''நீளநினைந்தடியேன்'' என்னும் திருப் பதிகத்தைத் திருக்கோளிலி என்னும் தலத்திலுள்ள பெருமானை வணங்கிப் பாடினார். இரவே பூதகணங்கள் அந்நெல் மலையைத் திருவாரூர் கொண்டுவந்து சேர்த்தன. திருவாரூரில் பல இடங்களிலும் நெல் பரந்து கிடக்கவே மக்களும் எடுத்து இன்புறச் செய்தார்.

அவ்வமயம் சிறந்த அடியாராகிய கோட்புலியார் தம்மூராய திருநாட்டியத்தான்குடிக்குச் சுந்தரரை அழைத்துச் சென்றார். அங்கு மிகவும் உபசரித்து தம் பெண்களாய சிங்கடி, வனப்பகை என்னும் இருவரையும் ஏற்றுக்கொள்ள வேண்டினார். சுந்தரரோ அவர்களிருவரையும் தம் புதல்வியராகக் கருதி உபசரித்தார். பங்குனி உத்திர விழா அண்மியதாதலின் புகலூர் சென்று பெருமானை வணங்கிய பின் பரவையாருக்குப் பொன் கொடுக்க எண்ணினார். பூம்புகலூரிலேயே அதே கருத்துடையவராய்ச் சில செங்கற் கட்டிகளைத் தலையணையாக வைத்துக்கொண்டு சிறிது நேரம் உறங்கலானார். விழித்துப் பார்த்தபோது அச்செங்கற் கட்டிகள் பொற்கட்டிகளாக மாறியது கண்டு வியந்து புகலூரிறைவனைப் பாடிப் பரவினார்.

அப்பால் அப்பொன் கட்டிகளுடன் திருப்பனையூர் சென்றார். அங்கு பெருமான் சுந்தரர்க்கு ஆடல் காட்டியருளினார். அப்பெரு

மானைப் பாடிய பின் திருவாரூர் வந்து சேர்ந்து பரவையாருடன் இனிது இருந்தார். பின் திருவாலம்பொழில் சேர்ந்தார். அவ் வமயம் பெருமான் மழபாடிக்கு வர மறந்தனையோ என்று கேட்டு அவரை வந்து பாடச் செய்தார். ''பொன்னார் மேனியனே'' என்று மழபாடி மாணிக்கத்தைப் போற்றிப் பரவிய பின் திருப்பாச்சிலாச்சிராமம் சென்று பொன் வேண்டவே பெரு மான் அருள் செய்யாதது கண்டு ''இவரலாது இல்லையோ பிரானார்'' என்று இடித்துக் கூறி நிறைந்த பொருளை உடனே பெற்றார். அப்பால் கொங்கு நாட்டுத் தலங்களை வணங்கிப் பேரூர் சென்றார். அவண் பெருமான் தில்லைக் காட்சி நடனத் தைக் கண்டு நேரே தில்லை சென்றார். வழியில் திருமுதுகுன்றத் தில் பொன் வேண்டும் குறிப்புடன் பாட பன்னீராயிரம் பொற்காசு கள் பெருமான் அருளினார், அவற்றைத் திருவாரூர்க்கு எப்படிக் கொண்டுபோவது என்று கேட்க ''மணிமுத்தாற்றிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுத்துக்கொள்க'' என்று அருள் வாக்கு எழுந்தது. அதன்படியே அப்பொன்னை மச்சம் வெட்டி எடுத்துக் கொண்டு ஆற்றிலிட்டுத் தில்லை சென்றார். அங்கு பெருமானைக் கண்ணாரக் கண்டு வணங்கிப் பாடினார். அப்பால் தலங்கள் பல வற்றை வணங்கித் திருவாரூரை அடைந்தார். ஒரு நாள் பரவை யாரை அழைத்துக் கொண்டு திருவாரூர்க் குளம் சென்று பொன் னைத் தேடினார். ''பரவை நகையாதவாறு பொன்னைத் தர வேண்டும்'' என்று வேண்டிப் பாடினார். பொன்னும் கிடைத்தது. மாற்றுக் குறையாதிருப்பதை மச்ச மூலமும் தெரிந்து பெருமானை வணங்கிப் பாடினார். பின் பல தலங்கள் வணங்கியதும் திருக் கோலக்கா சென்று அங்கு தெய்வக் காட்சி கண்டு பாடிப் பரவினார். திருக்குருகாவூர் சென்றார். அவ்வமயம் சுந்தரரின் பசி, நீர்வேட்கை முதலியன அறிந்து பெருமானே வழியில் தண்ணீர்ப் பந்தர் கிழ வேதியர் வடிவுடன் வந்து வைத்து யாவருக்கும் தண்ணீரும் பொதிசோறும் கொடுத்தருளினார். உண்டுறங்கிய சமயத்தில் பெருமான் தண்ணீர்ப்பந்தருடன் மறையவே ''இத்தனையாமாற்றை அறிந்திலேன்'' என்னும் திருப்பதிகம் பாடிப் பரவினார்.

அப்பால் திருக்கச்சூரை அடைந்தார். நடுப்பகலாகியதால் பசி மீதூரவே பெருமானே மறையவர் வடிவுடன் தான் உணவு கொண்டுவருவதாகக் கூறிச் சென்று ஊரில் இரந்து கொண்டு வந்து கொடுத்து உண்பித்தார். இவ்வருஞ் செயலைப் போற்றிப்

பாடிக் காஞ்சிபுரம் சென்று வணங்கினார், திருவோணகாந்தன் தளியிலுள்ள பெருமானை வணங்கிப் பாடி, பொன்னைப் பெற்றார். பின் திருக்காளத்தி வரை சென்று வணங்கியபின் வட நாட்டுத் தலங்களையும் அங்கிருந்தே வணங்கியதும் திருவொற்றி யூர் வந்து சேர்ந்தார்.

உமாதேவியாரின் சேடியர்களுள் மற்றொருவராய அனிந் திதையார் தொண்டை நாட்டில் ஞாயிறு என்னும் ஊரில் ஞாயிறு கிழார் மகளாக சங்கிலியார் என்னும் பெயரில் தோன்றி நன்கு வளர்ந்து வந்தார். உரிய காலத்தே அவ்வம்மையார் வேண்டு தலின்பேரில் திருவொற்றியூரில் சிவத்தொண்டு புரிந்து வருவாரா யினர். இடையில் பெண்கேட்க விரும்பி வந்த ஒருவரும் இறந்தார். ஆதலின் சங்கிலியாரைப் பின்னர் யாரும் விரும்பி வரவில்லை. ஒரு நாள் சுந்தரர் ஒற்றியூர்ப் பெருமானை வணங்க திருக்கோயில் சென்றார். சங்கிலியாரைக் கண்டு முன்னை ஊழால் காதல் கொண்டார். பெருமானையே வேண்டி இரவு துயின்றார். பெரு மானும் கனவில் அதற்குத் துணை செய்வதாகக் கூறி மறைந்தார். பின்னர் சங்கிலியார் கனவிலும் தோன்றிய பெருமான் சுந்தரரை மணந்துகொள்ளுமாறு கூறினார். சங்கிலியார் முன்னரே சுந்தரர் பரவையாரை மணந்த செய்தி தெரிந்தவராதலின் தன்னை மணந்ததும் பரவையார் பால் செல்லப் பிரிந்து விடுவாரே என்று கூறினார். அவ்வாறு பிரியாதிருக்க சபதம் வாங்கிக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார். சுந்தரரிடமும் சங்கிலியைப் பிரியாதிருக்கச் சபதம் செய்து கொடுக்குமாறும் கூறினார். சுந்தரர் தான் சபதம் செய்யும்போது திருக்கோயிலிலில்லாமல் எதிரிலுள்ள மகிழ மரத் தினடியில் தாங்கள் எழுந்தருளியிருக்க வேண்டும் என்று வேண்டி னார். பெருமானும் ஒப்புக்கொண்டு சங்கிலியாரிடம் மகிழ மரத் தினடியிலேயே சபதத்தை நிறை வேற்றுமாறு குறிப்பிட்டார். மறுநாள் சுந்தரரும் சங்கிலியாரும் சந்தித்தனர். திருக்கோயிலில் சபதம் செய்யப் புகும்பொழுது சங்கிலியாரின் சேடியர்கள் மகிழ மரத்தின் அடியிலேயே சபதம் செய்தால் போதும் என வேண்டி னர். சுந்தரர் மறுமொழி கூற முடியா நிலையில் ஒத்துக்கொண்டு வந்து ''சங்கிலியாரைப் பிரியமாட்டேன்'' என சபதம் செய்து கொடுத்துள்ளார். பின் இறைவன், அடியார்கள் கனவில் இருவருக் கும் திருமணம் நடத்துமாறு ஆணையிட அவ்வாறே திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. சங்கிலியாருடன் திருவொற்றியூரில் நன்கு வாழ்ந்து வந்தார்,

வசந்த காலம் வந்தது. திருவாரூரில் பெருமான் திருவிழாக் கோலத்தை நினைவு கூர்ந்தார் சுந்தரர். ''எத்தனை நாள் பிரிந் திருக்கேன் என் ஆரூர் இறைவனையே'' என்று உளம் நொந்தார். ஒரு நாள் திருவாரூர் நோக்கிப் புறப்பட்டார். திருவொற்றியூர் எல்லையைத் தாண்டியதும் சுந்தரரின் இரு கண்களும் ஒளி இழந்தன. அது கண்டு மிக வருந்தினார். உடன் வந்தோர் வழி காட்ட வடதிருமுல்லைவாயிலை அடைந்தார். ''சங்கிலிக்கா என் கண்கொண்ட பண்ப நின்னடியேன் படுதுயர்களையாய்'' என வேண்டி இங்குள்ள பெருமானைப் பாடிப் பரவினார். பின் அங்கிருந்து புறப்பட்டுத் திருவெண்பாக்கம் சென்று வழிபட்டு தன் பிழையைப் பொறுத்துக் கண்ணருள வேண்டினார். ''கோயிலுளா போ என்ன, உளோம் போகீர் என்றானே'' என மிக உருக்கமாகப் பாடினார். அவ்வமயம் பெருமான் சிறிது இரக்கமுற்று ஒரு ஊன்று கோல் கொடுத்தருளினார். பின் காஞ்சி வந்து சேர்ந்தார். அங்கு காமாட்சியையும் பெருமானையும் வணங்கி வேண்டவே பெருமான் இடக்கண்ணைக் கொடுத்தார். பின் பல பதிகளை வணங்கி திருவாவடுதுறை வந்து சேர்ந்தார். அங்கு உடல் நோயும் அவர்க்குற்றது. அதுகண்டு பெருமானிடமே முறையிட்டார். பின் திருத்துருத்தி சென்று வழிபட்டார். அங்குள்ள பெருமான் சுந்தரரை அண்மையிலுள்ள தீர்த்தத்தில் மூழ்கிவரச் செய்து அவர் உடல் நோயைப் போக்கினார்.

பின்னர் பல தலங்களையும் வணங்கிக்கொண்டே திருவாரூர் வந்து சேர்ந்தார். அங்கு பரவையுள் மண்டலியை வணங்கியபின் திருமூலட்டானத்தீசுரரையும் வணங்கி வலக்கண்ணையும் தர வேண்டிப் பாடிப் பரவி வழிபட்டார். ''மீளா அடிமை'' என்னும் திருப்பதிகம் பாடினார். உடனே வலக்கண் இறையருளால் கிடைக்கப்பெற்று மகிழ்ந்தார். சங்கிலியாரைத் திருவொற்றியூரில் மணந்த செய்தியைக் கேள்வியுற்ற பரவையார் சுந்தரர் மேல் சினம் கொண்டிருந்தார். அச்சினத்தைத் தணிக்கப் பெருமானும் அந்நள்ளிரவில் பரவையார் பால் தூது சென்றார். சினந்தணிந்து சுந்தரருடன் வாழ அறிவுரை கூறினார். பரவையாரும் பெருமானின் எளிவந்த தன்மையை எண்ணி பெருமான் கருத்துக்கு இசைந்தார்.

பின்னர் சுந்தரரிடம் சென்று நற்செய்தி கூறிட பெருமானைப் போற்றி வணங்கியபின் பரவையாரின் மாளிகைக்குச் சென்றார். பரவையாரும் எதிர்சென்று நல்லுபசாரங்களுடன் அழைத்து

வந்தார். அப்பால் இருவரும் இன்புற்று வாழ்ந்து வந்தனர். சுந்தரர் பொருட்டுத் தூது சென்றதைக் கேட்டு ஏயர்கோன் கலிக் காமர் என்னும் நாயனார் ஒருவர் பெருமானைப் பணிசெய்யச் செய்தமைக்கு மிகவும் சீற்றம் கொண்டார். இச்சீற்றம் பற்றிய செய்தியைச் சுந்தரர்பால் சிலர் கூறினர். அச்சினத்தைத் தீர்க்க வேண்டி சுந்தரர் பெருமானையே வேண்டினார். ஒரு நாள் கலிக் காமர்க்குக் கடுஞ்சூலை நோய் வந்தது. அப்போது அவர் பெரு மானைத் துதித்து அரற்றினார். பெருமானும் சுந்தரர் வந்தால் நோய் தீரும் என்று அருளினார், அச் சுந்தரர் வந்து என் நோய் தீர்வதைக் காட்டிலும் அவனைப் பார்க்காமலே என் உயிர் போகட்டும் என்று நினைத்துத் துடித்தார். அந்நிலையில் பெரு மான் சுந்தரர் கனவிலும் கலிக்காமர் சூலை நோய் பற்றிக் கூறி அதைத் தீர்த்து வர ஏவினார். சுந்தரர் கலிக்காமர் ஊருக்கு வருவது அறிந்த அந்த அடியார் அச்சுந்தரர்வருவதற்கு முன்னரே உயிரை விட்டு விடுவது மேல் எனக்கருதி உடைவாளினால் வயிற் றைக் கிழித்துக்கொண்டு உயிர் நீத்தார். அதுகண்டு வருந்திய அவர் மனைவியார் சுந்தரர் வருகையைத் தெரிந்து எதிர்கொண்டு அழைத்துவரச் செய்தார். அவர் வந்து கலிக்காமர் பற்றிய விவரம் அறிந்து அவ்வுடைவாளாலேயே தன்னுயிரையும் நீக்கிக்கொள்ள முற்பட்டார். இறையருளால் கலிக்காமர் உயிர்பெற்றெழுந்து சுந்தரரைத் தடுத்தார். பின்னர் இருவரும் தம்முள் வணங்கிக் கொண்டு நண்பராயினர். பின் திருப்புன்கூரை அடைந்து ''அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத'' என்னும் திருப்பதிகம் பாடினார். பின் இருவரும் திருவாரூர் சேர்ந்தனர். சின்னாள் தங்கி ஏயர்கோன் கலிக்காமர் சென்றபின் சுந்தரர் திருநாகைக்கா ரோணம் சென்று வழிபட்டார். அங்கு நறுமணப் பொருள்கள் ஆடை குதிரை முதலியன வேண்டிப் பெற்றார்.

அவ்வமயம் சேர நாட்டை ஆண்ட சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரர் பெருமையினைத் தில்லைக்கூத்தன் திருவரு ளால் உணர்ந்து தில்லையடைந்து வழிபட்டுத் திருவாரூருக்கு வந்தார். இருவரும் கண்டு பழகி அளவளாவி மகிழ்ந்தனர். பின்னர் சுந்தரர் சேரமான் தோழர் என்னும் பெயரினையும் பெற்றார். இருவரும் திருவாரூர்க் கோயில் சென்று வணங்கினர். அப்பால் பரவையார் வீட்டில் சிறந்தவிருந்து நிகழ்ந்தது. பின் இருவருமே திருமறைக்காடு முதலிய தலங்களை வணங்கியபின் திருவாலவாய் சேர்ந்தனர். அங்கு இறைவனைப் பாடிப் பரவிய

பின் பாண்டிய அரசனால் உபசரிக்கப் பெற்றனர். சோழனும் வரவே அப்பால் திருப்பூவணம் முதலிய தலங்களை வணங்கித் திருப்பரங்குன்றம் அடைந்து அங்கும் சுந்தரர் பாடிப் பரவினார். தமிழ் அரசர் மூவரும் கேட்டின்புற்றனர். பின்னர் பாண்டிய மன்னன் பாண்டி நாட்டுத் தலங்களை வழிபட அவ்விருவருக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான். அவர்கள் திருக் குற்றாலம், திருநெல்வேலி, திருவிராமேச்சுரம் முதலிய தலங்களை வணங்கினர். இராமேசுரத்திலிருந்தே திருக்கேதீச்சரத்தையும் சுந்தரர் பாடிப் பரவினார். அப்பால் திருச்சுழியல் வந்து வழிபட்ட சமயம் "நாமிருப்பது கானப்பேர்" என்று அங்கு சுந்தரரை பெருமான் வரவழைத்தார். அப்பால் திருக்கானப்பேருக்கு இருவரும் சென்று வழிபட்டனர்.

திருவாரூர் சேர்ந்தபின் சேரமான் பெருமாள் சுந்தரரைத் தங்கள் நாட்டுக்கு அழைத்தார். சுந்தரரும் இசைந்து திருக்கண்டி யூர் வந்தார். அங்கு வழிபட்ட பின் எதிரேயுள்ள திருவையாறை வழிபட இருவரும் கருதினர். நடுவே காவிரியில் வெள்ளம் நிறைந் திருந்தது. சுந்தரர், பெருமான் திருவருளை நினையவே காவிரியே நீர் விலகி வழிவிட்டது. பின்னர் இருவரும் அங்கு சென்று ஐயா றப்பரை வழிபட்டனர். பின் அவ்வழியே திரும்பி வந்ததும் முன் போன்று வெள்ளம் செல்ல ஆரம்பித்தது. பின் திருவஞ்சைக்களம் சென்றனர். அங்கு சுந்தரர் "முடிப்பது கங்கை" என்னும் திருப் பதிகம் பாடிப் பரவினார். அப்பால் யானை மீது சுந்தரரை அமர்த்தி சேரமான் கவரி வீச அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். சுந்தரர் அங்கேயே சேரமானுடன் பன்னாள் தங்கி யிருந்தார். பின் விடை பெற்றுத் திருவாரூர்க்குச் சுந்தரர் புறப் பட்டார். சேரமான் சுந்தரர்க்கு நிறைய பொருள்கள் கொடுத் தனுப்பினார். திருவாரூர் செல்லும் வழியில் திருமுருகன் பூண்டி யில் பெருமானே பூதங்களை அனுப்பி அப்பொருள்களைக் கவர்ந்து வரச் செய்தார். சுந்தரர் "கொடுகு வெஞ்சிலை" என்னும் பதிகம் பாடி அம்முருகன் பூண்டிப் பெருமானை வழிபடவே கவர்ந்து செல்லப்பட்ட பொருள்கள் யாவும் திருக்கோயில் வாசல்முன் வந்து சேர்ந்தன. உடன் அப்பொருள்களை ஏவலாட்கள் திருவாரூர் கொண்டு சேர்த்தனர்.

பின்னர் ஒரு சமயம் சேரமான் பெருமாளை நினைந்து சுந்தரர் சேரநாடு நோக்கிப் புறப்பட்டார். வழியில் அவிநாசித் திருத்தலமிருந்தது. அங்கு சென்று கொண்டிருக்கும் போது ஒரு

வீட்டில் அழுகையொலியும் அந்த வீட்டின் எதிர் வீட்டில் மங்கள ஒலியும் கேட்டார். உடனே விசாரித்தறிந்தார். ஒத்த ஐந்து வயதுப் பிள்ளைகளிருவர் குளத்திற்குக் குளிக்கச் சென்றதாகவும் ஒருவனை முதலை இழுத்துச் சென்றதாகவும் மற்றவனுக்குப் பூணூல் சடங்கு நிகழ்வதாகவும் அதுகண்டு மகனை இழந்தவர்கள் பின் பிள்ளையை நினைந்து வருந்திய நிலையையும் கூறி சுந்தரரை வழிபட்டு அரற்றினார்கள், அதுகேட்டு இரக்கம் மீதூர்ந்தவராய் அக்குளத்தைக் காட்டச் சொன்னார். அவிநாசிப் பெருமானை நினைந்து ''எற்றான் மறக்கேன்'' என்னும் திருப்பதிகம் பாடி ''கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே'' என்று பாடித் துதித்தார். உடனே இயமன் அப்பிள்ளை உயிரை விடுக்க முதலை அக்குழந்தையைத் தக்க வளர்ச்சியுடன் வெளியே கரையில் கொண்டுவந்து விட்டது. பெற்றோர்கள் தம்பிள்ளையை அவிநாசிப் பெருமான் முன்னிலையில் அழைத்துச் சென்று வழி படச் செய்து வீட்டிற்கழைத்து வந்து பூணூல் திருமணமும் செய்து மகிழ்ந்தனர்.

அப்பால் சுந்தரர் சேரநாடு சேர்ந்தார். சேரமான் பெருமாளும் எதிர்கொண்டு அழைத்துச் சென்றார். அங்கு மலை நாட்டுத் தலங்களை வணங்கிச் சின்னாள் இருந்தார். ஒருநாள் சேரமான் பெருமாள் நீராடிக்கொண்டிருந்த பொழுது சுந்தரர் அஞ்சைக் களத்தப்பனை வணங்கச் சென்று இவ்வுலக வாழ்க்கையின் உவர்ப்பையும் எடுத்துக் கூறி ''தலைக்குத் தலைமாலை'' என்னும் திருப்பதிகத்தையும் பாடிப் பரவினார்.

உடனே பெருமான் சுந்தரரைத் திருக்கயிலைக்கு அழைத்து வரும்படி வெள்ளை யானையையும் தேவர்களையும் அனுப்பினார். அவ்வாறே யானையும் தேவர்களும் வந்தார்கள். ஈசன் கட்டளையைக் கேட்ட சுந்தரர் அப்படியே கட்டளைக்குப் பணிந்தார். வெள்ளானையில் தேவர்கள் சுந்தரரை வீற்றிருக்கச் செய்தார்கள். சுந்தரரும் சேரமானை நினைத்துக் கொண்டே கயிலைக்குப் புறப்பட்டார்.

இதனைச் சேரமான் குறிப்பாலுணர்ந்து தம் குதிரையை வரவழைத்து அதன் காதில் ஐந்தெழுத்தை ஓதினார். அதன் மேல் ஏறி உட்கார்ந்தார். அது வான் வழி செல்லும் ஆற்றல் பெற்றது. வெள்ளை யானையை வலம் வந்து முன்னே சென்றது. நம்பியாரூரர் ''தானெனை முன்படைத்தான்'' என்னும் திருப்பதிகம் பாடி

கயிலைமலையின் தென்திசை சேர்ந்தார். சேரமான் எதிர்கொள்ள இருவரும் உள்ளே சென்றனர். சேரமானைத் தடுக்கவே சுந்தரர் உள்ளே சென்று பெருமானிடம் கூறிப் பின்னர் அனுமதியுடன் சேரமானும் உட்சென்றார். இருவரும் பெருமானை இறைஞ்சினர். பின்னர் சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலாவைப் பாடப் பெருமான் செவிமடுத்து இன்புற்றார். சுந்தரர் ஆலால சுந்தரராகவும், சேரமான் சிவகணத் தலைவராகவும் அணுக்கத் தொண்டுபுரியும் நிலைபெற்றனர். பரவையாரும் சங்கிலியாரும் கமலினி, அனிந்திதையராக மாறி உமைக்குத் தொண்டு புரியலாயினர்.

இவ்வாறு கயிலை சென்றது ஆடி மாதத்தில் சுவாதி நட்சத்திரத்தில் ஆகும். தம் பதினெட்டாவது வயதில் சுந்தரர் இறையருளில் நன்னிலையுற்றார்.

பித்தர்இறை என்று அறிந்து பேதைபால் தூதுஅனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வது எந்நாளோ.

(தாயுமான சுவாமிகள்)

மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

பாண்டி நாட்டில் மதுரைக்கு ஏழுகல் தொலைவிலிருக்கும் திருவாதவூர் என்னும் தலத்தில் அமாத்தியர் குலத்தில் திருவாத வூரர் தோன்றினார். காலம் நான்காம் நூற்றாண்டு எனவும் ஒன்பதாம் நூற்றாண்டெனவும் கூறுவர். நான்காம் நூற்றாண் டென்பதே ஏற்புடைத்தெனத் தெரிகிறது. இவர் பெற்றோர் பெயர்கள் சரியாகத் தென்படவில்லை. பலர் பலவாறு கூறுப. இளமையில் நன்கு கற்றுத் துறைபோனார். இவர் அறிவு வன்மைக் யைக் கண்டு அக்காலத்து அரசனாயிருந்த அரிமர்த்தன பாண்டியன் தன் முதல் அமைச்சராக ஆக்கி "தென்னவன் பிரமராயன்" என்னும் பட்டமும் கொடுத்துச் சிறப்பித்தான். பலவிருதுகளையும் அரசன் அளித்தான். திருவாதவூரர் அறநெறி பிறழாமல் நாட்டை ஆள அரசருக்குறுதுணையாயிருந்தார். மேலும் ஆலவாய்ப் பெம் மானிடமும் இடையறா அன்பு பூண்டொழுகினார். எப்பொழுதும் சிந்தை மாத்திரம் நற்குருவைப் பெறவேண்டும் என்னும் தாகத் தோடிருந்தது.

ஒரு சமயம் அரண்மனையிலுள்ள குதிரைச் சேவகர்கள் குதிரைகள் மூப்பாலும் நோயாலும் குறைந்துள்ளதை அரசனுக்குக் கூறினார்கள். அரசனும் திருவாதவூரரை நல்ல குதிரைகள் வாங்கி வருமாறு கட்டளையிட்டான். வாதவூரரும் ஒரு நன்னாளில் குதிரைகள் இறங்கும் துறைமுகம் செல்ல நிறைந்த பணத்துடன் புறப்பட்டார். திருப்பெருந்துறை என்னும் இடம் சேர்ந்த போது அவருக்கு உள்ளம் ஒன்றியது. அதனால் உடன் வந்தவர் களை அனுப்பிவிட்டுத் தான் மாத்திரம் அங்கிருந்து பெருமானை வழிபடலானார். ஒரு நாள் பெருமான் மானிடச் சட்டை தாங்கி மானைக்காட்டி மானைப் பிடிப்பது போல் வாதவூரருக்கு ஞானோ பதேசம் செய்யத் திருவுள்ளங்கொண்டு அங்குள்ள குருந்த மர நிழலில் சிவகணங்கள் சீடராகி வீற்றிருக்க சிவயோகியாய் ஞானப் பொருள்களை அன்பர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார். இதைக் கண்ணுற்ற வாதவூரர் அன்பு மீதூர்ந்தவராய்க் குருவின் திருவடி களில் விழுந்து வணங்கினார். ஆட்கொள்ள வேண்டினார். குரு மூர்த்தியாய் எழுந்தருளிய பெருமானும் வாதவூரரை நன்கு நோக்கி முடி முதல் அடிவரை தொட்டருளி ஞானதீக்கை செய் தருளினார். பின்னர் வாதவூரர் குருநாதர் மீது அன்பு களிந்த வாசகங்களைப் பாடினார். அவை சிறந்த இரத்தினம் போன்று

சிறந்திருந்ததாதலின் மாணிக்க வாசகர் என்னும் திருநாமம் பெற்றார்.

அப்பால் மாணிக்கவாசகர் தாம் கொண்டு வந்த பொருள் களையெல்லாம் குருமூர்த்திக்கே அளித்தார். அவர் அடியார்ப் பணிக்குச் செலவிட ஆணையிட்டார். அப்பால் குரு மறையவே அங்கேயே தங்கி அடியார் வழிபாடுடன் திருக்கோயில் கட்டும் திருப்பணியும் மேற் கொண்டார். இது விவரம் அரசனுக்கு எட்டிற்று. அரசன் அமைச்சரைத் தன்பால் வர திருமுகம் விடுத் தான். பெருமான் ''ஆவணி மூலத்தில் குதிரைகள் வரும்'' என்று அசரீரியாய்க் கூறவே மாணிக்கவாசகரும் அரசன் பால் சென்று குதிரை வரும் என்ற செய்தியைக் கூறினார். குறிப்பிட்ட நாளினை நெருங்கியும் குதிரைகள் வரவில்லை. அது கண்டு பாண்டியன் சினமுற்றான். குதிரைகள் வராததைப் பற்றிக் கேட்டு மாணிக்கவாசகரைச் சிறையிலிட்டுத் துன்புறுத்துமாறு ஆணையிட்டான். சேவகரும் அவ்வாறே செய்தனர். மாணிக்க வாசகரோ இறையடி மறவாத சிந்தையாராய்த் தேனூறு வாசகங்கள் பல பாடி இறைவனை நினைந்து நினைந்துருகினார்.

பின்னர் இறைவன் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கித் தான் தலைமைக் குதிரைச் சேவகனாக நடத்தி வந்தான். அது கண்டு ஊரிலுள்ளோர் மாணிக்க வாசகரிடம் கூற சிறைவிடு செய்யப் பெற்று பாண்டியன்பால் சென்றார். பாண் டியனும் அவரைத் துன்புறுத்தியமைக்காக மன்னிப்பு வேண் டினான். ஆனால் அன்றிரவே புதிய குதிரைகள் யாவும் நரிகளாக மாறி பழைய குதிரைகளையும் கொன்று ஊளையிட்டுக் கொண்டே ஓடி விட்டன. இது தெரிந்த அரசன் மாணிக்கவாச கரை மீண்டுந் துன்புறுத்தினான். வைகையாற்றில் நடு வெயிலில் மணலில் உருட்டச் செய்தான். இவ்வாறு அவர் பட்ட துன்பங்கள் அளப்பில. கருணாமூர்த்தியாகிய இறைவன் தன் அடியான் படுதுயர் பொறுராய் வைகையாறு பெருக்கெடுத்து வரச் செய் தான். வைகை வெள்ளம் ஊரையே அழித்து வர முற்பட்டது. அரசன் மக்களை வைகைக்குக் கரையை உயர்த்தி வெள்ளம் ஊருக்கு வராது தடுக்க ஆணையிட்டான். மக்களுக்குரிய பங்கு அளந்து கொடுக்கப்பட்டது. அவரவர்களும் தத்தம் பங்கை அடைத்தனர். வந்தி என்னும் பிட்டுவாணிச்சிக்குரிய பங்கு அடைக்க ஆளின்றி அடைபடாமலிருந்தது. இறைவன் அவன்

பொருட்டிரங்கிக் கூலியாளாய் வந்து அவள் பங்கை அடைக்கும் திருவிளையாடலைப் புரிந்தார். அவ்வேலையாள் முதலில் அடைக்காமலிருந்து பாண்டியன் ஏவலரால் பிரம்படிபட்டு அவ்வடி அண்டசராசரத்துள்ள எல்லா உயிர்கள் மேலும் பட்டது. அப்போதே ஒரு கூடை மண் போட அவ்வுடைப்பு அடைந்தது. அக்கூலியாளும் மறைந்தார்.

அப்பொழுதுதான் மாணிக்கவாசகரின் பெருமை அரசனுக்குப் புலப்பட்டது. அவரடிகளில் விழுந்து வணங்கினான். அவர் விருப்பம் போல் செய்ய விடுத்தான். மாணிக்க வாசகரும் அமைச்சர் பதவியை விடுத்துத் திருப்பெருந்துறை சென்றார். அங்கு பெருமானை வணங்கித் தன்னை ஆட்கொண்ட திறத்தினைப் போற்றிப் பரவினார். அப்பொழுது ''நலமலிதில்லையுள் கோலமார் தருபொதுவினில் வருக'' என ஓர் அசரீரி கேட்க உடனே அங்கிருந்து புறப்பட்டு உத்தர கோசமங்கை, இடைமருது, திருவண்ணாமலை, திருக்கழுக் குன்றம் முதலிய சிறந்த தலங்களை வழிபட்டுப் பாடல்களும் பாடிப் பரவினார். கடைசியாகத் தில்லை வந்து சேர்ந்தார்.

அங்கு ஈழ நாட்டரசன் ஒருவன், புத்தரைத் தில்லையில் நிலை நாட்டும் எண்ணத்தோடு வந்திருந்தான். புத்தகுரு தில்லையிலுள்ளாரை வாதுக்கழைத்தார். அரசனின் ஊமைப் பெண்ணும் அவர்களுடன் ஈழத்திலிருந்து வந்திருந்தாள். அவ்வமயம் இறையருள் தில்லைவாழந்தணர்கட்கு மாணிக்க வாசகரைக் கொண்டு புத்தரை வெல்லச் செய்யுமாறு கனவு மூலம் உணர்த்திற்று. உடனே தில்லை வாழந்தணர்கள் மாணிக்க வாசகரை வணங்கி புத்தனை வெல்ல வேண்டினர். அப்பால் மாணிக்கவாசகர் புத்தன் கொள்கைகள் எல்லாவற்றையும் கூறக்கேட்டார். பின்னர் சைவ உண்மைகளை எடுத்துரைத்தார். அவர்கள் அவற்றை மறுத்து மீண்டும் வீண் வாதம் செய்தனர். அதனால் பெருமான் திருவருளை நினையவே அப்புத்தர்கள் யாவரும் ஊமையாயினர். அதுகண்ட ஈழ அரசன் பேசியவரை ஊமையாக்கினீர். ஊமையாய தன் பெண்ணைப் பேசச் செய்யுங்கள் என வேண்டினான். அப்பால் அப்பெண்ணிடம் மாணிக்கவாசகர் சைவ உண்மைகள் பலவற்றை வினவாய்க் கேட்க, அப்பெண் ஊமைத் தன்மை மாறி விடை பகர்ந்தாள். அது கண்டு புத்த அரசன் சைவனாய் மாறியதுடன் தன் நாட்டிலும் சைவ சமயத்தைப் பரப்பினான்.

பின்னர் அப்புத்தர்களையும் மாணிக்கவாசகர் இரக்கமேலிட்டால் பேசச் செய்தார். ஈழநாடு சைவம் ஓங்கித் திகழ்ந்தது.

ஒரு சமயம் பெருமானே ஓர் அந்தண உருக் கொண்டு வந்து மணிவாசகரிடம் அவர் பாடிய திருவாசகச் செய்யுள்கள் யாவற்றையும் அவர் சொல்ல தாம் எழுதினார். மறுநாள் நடராசர் சந்நிதியில் திருவடிக் கீழ் ஓர் பிரதியிருப்பதை அறிந்து அதைப் பார்த்த பொழுது ''மாணிக்க வாசகன் சொல்ல, அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது'' என்ற அடிக்குறிப்புள்ளதைக் கண்டு யாவரும் வியந்தனர். மேலும் அவ்வந்தணர் எழுதியபோது பாவைபாடியவாயால் கோவையும் ஒன்று பாடுக'' என்றுவிரும்பிக் கேட்க அப்பொழுது திருக்கோவையார் பாடப்பட்டதாக வரலாறு.

இது கண்ட தில்லை வாழந்தணர் மாணிக்கவாசகரிடம் அவ்வேட்டைக்காட்டி அப்பாடல்களின் பொருளைத் தெரிவிக்க வேண்டினர். மாணிக்கவாசகரும் அவர்களை அழைத்துச் சென்று தில்லையிலுள்ள திருக்கூத்தப் பெருமானைச் சுட்டிக் காட்டி இவனே பொருள் என அவன் திருவடியில் அப்படியே இரண்டறக் கலந்தனர். அந்நாள் ஆனித் திங்கள் மக நன்னாளாகும். அவர் இவ்வுலகில் முப்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் திருக்கோவையாரை இயற்றி சாயுச்சியமுத்தி பெற்ற ஒப்பற்ற ஞானியாவார்.

போதவூர் நாடு அறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூர் ஐயன்அன்பை வாஞ்சிப்பது எந்நாளோ.

(தாயுமான சுவாமிகள்)

3. சமயாசாரியர் குறிப்பு

பெயர்	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்	திருநாவுக்கரசு நாயனார்
(1)	(2)	(3)
1 மறு திருப்பெயர்கள்	ஆளுடைய பிள்ளையார், காழி வேந்தர், கவுணியர் கோன், சண்பையர் காவலன், முத்தமிழ் விரகர், பரசமய கோளரி, பாலறாவாயர், சிவஞானக் கன்று, சைவ சிகாமணி, ஞானத்தின் திருஉரு, நான் மறையின் தனித்துணை, மண்ணில் வளர் மதிக் கொழுந்து, கானத்தின் எழு பிறப்பு.	ஆளுடைய அரசர், வாகிசர், தாண்டக வேந்தர், உழவாரப் படையாளி, அப்பர், மருணீக்கியார்.
2 தோன்றிய நாடு	சோழ நாடு	திருமுனைப்பாடி நாடு
3 தோன்றிய ஊர்	சீர்காழி	திருவாமூர்
4 தோன்றிய குலம்	அந்தணர்	வேளாளர்
5 தந்தையார்	சிவபாத விருதயர்	புகழனார்
6 தாயார்	பகவதியார்	மாதினியார்
7 தல் அருள் பெற்ற தலம்.	திருப்பிரமபுரம் (சீர்காழி)	திருவதிகைவீரட்டானம்

பெயர்	திருஞானசம்பந்தமூர்த்தி	திருநாவுக்கரசு
(1)	(2)	(3)
8 முதல் பாடிய பதிகம்	''தோடுடைய செவியன்...''	'கூற்றாயினவாறு...''
9 ஒழுகிய நெறி	ஞானத்தில் கிரியை	ஞானத்தில் சரியை
10 மார்க்கம்	சத்புத்திர மார்க்கம்	தாசமார்க்கம்
11 சிவபெருமான் காட்டி அருளியது.	பாலைக்காட்டி	சூலையைக் காட்டி
12 சிவபெருமானின் வாழ்த்துரை	தன்னைப்பாடுவான்	என்னைப்பாடுவான்
13 பாடலுக்குப் பெயர்	திருக்கடைக்காப்பு	தேவாரம்
14 அடைந்த முத்தி	சாமீபம்	சாலோகம்
15 விளங்கிய அற்புதங்கள்.	மூன்று வயதில் உமாதேவியாரிடம் திருமுலைப்பால் உண்டு பதிகம் பாடியது.	சமணர்களாலே ஏழு நாள் சுண்ணாம் பறையிலே பூட்டப்பட்டிருந்தும் வேகாது பிழைத்தது.
	சிவ பெருமானிடத்தில் பொற்றாளமும், முத்துப் பல்லக்கும், முத்துச் சின்னமும், முத்துக்குடையும். முத்துப் பந்தரும் உலவாக்கிழியும் பெற்றது.	சமணர் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டுஞ் சாகாது பிழைத்தது.

திருமறைக்காட்டில் (வேதாரண்யம்) திருக் கதவு அடைக்கப்பாடியது.

பாலை நிலத்தை நெய்தல் நிலமாகும்படி பாடியது.

ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியது.

பாண்டியனுக்குக் கூனையும் சுரத்தையும் போக்கியது.

சமணரோடு அனல் வாதம், புனல் வாதம் புரிந்து, தேவாரத் திருவேட்டை அக்கினியி லிட்டுப் பச்சையாய் எடுத்தது.

வைகையிலே தேவாரத் திருவேட்டை இட்டு எதிரேறும்படி செய்தது.

புத்தநந்தியின் தலையிலே இடிக்கச் செய்தது.

ஆற்றிலே தாமும் அடியாரும் ஏறிய ஓடத்தைத் திருப்பதிகத்தினாலே கரை சேர்த்தது.

இறந்த பெண்ணினது எலும்பைப் பெண்ணுருவாக்கியது.

சமணர் விடுத்த கொலையானையினால் வலஞ்செய்து வணங்கப் பட்டது.

சமணர் கல்லிற் சேர்த்துக் கட்டிக் கடலில் இடவும் அக்கல்லே தோணியாகக் கரையேறினது.

சிவபெருமானிடத்திலே படிக் காசு பெற்றது.

திருமறைக் காட்டிலே திருக்கதவு திறக்கப் பாடியது.

விடத்தினால் இறந்த அப்பூதி அடிகளாரின் மகனை உயிர்ப் பித்தது.

காசிக்கு அப்பால் ஒரு தடாகத் தினுள்ளே முழுகி, திருவையாற்றிலே வாவியின் மேலே தோன் றிக் கரையேறி, யாதும் சுவடு படாமல் ஐயாற்றரசின் கண்டறி யாத திருப்பாதத்தைக் கண்டது.

பெயர்	திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்	திருநாவுக்கரசு நாயனார்
(1)	(2)	(3)
	விடத்தினால் இறந்த செட்டியை உயிர்ப்பித்தது. சிவபெருமானிடத்தில் படிக்காசு பெற்றது. தமது திருக்கல்யாணத்தைத் தரிசிக்க வந்தவர்கள் எல்லோரையும் தம்மோடு அக்னியிலே புகுவித்து முத்தியிலே சேர்த்தது.	
16 சமகாலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள்.	திருநாவுக்கரசர், அப்பூதி அடிகள், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர்; குங்கிலியக் கலயர், குலச்சிறையார், நின்றசீர் நெடுமாறர், மங்கையர்க்கரசியார்.	சம்பந்தர், அப்பூதி அடிகள், சிறுத் தொண்டர், நீலநக்கர், முருக நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், குங்கிலியக் கலயர், குலச்சிறையார், நின்றசீர் நெடுமாறர், மங்கையர்க்கரசியார்.
17 அவரால் பாடப் பெற்றோர்.	சண்டேசுரர், கண்ணப்பர், கோச்செங்கட் சோழர், நீலநக்கர், முருக நாயனார், சிறுத் தொண்டர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், தில்லைவாழ் அந்தணர், இராவணன், இராமர்.	சம்பந்தர், அப்பூதி அடிகள், கோச்செங்கட் சோழர், சாக்கியர், இராவணன், இராமர்.

18	பாடிய பதிகத் தொகை.	16,000	49,000
	இன்றுள்ள பதிகங்கள்	384	312
	இன்றுள்ள பாடல்கள்	4,137	3,066
19	திருமுறை எண்	ஒன்று முதல் மூன்று திருமுறைகள்.	நான்கு முதல் ஆறு திருமுறைகள்
20	இறுதியாகப் பாடிய பதிகம்.	''காதலாகி........''	''எண்ணுகேன் என்சொல்லி''
21	முத்தி பெற்ற திருத்தலம்.	திருப்பெருமண நல்லூர்	திருப்புகலூர்
22	முத்தி அடைந்த வயது.	16	81
23	முத்தி அடைந்த தினம்.	வைகாசி-மூலம்.	சித்திரைச் சதயம்.
24	காலம்	கி.பி. 7-ஆம் நூற்றாண்டு	கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.
25	நாயனார் வரலாறு கூறும் நூல்கள்.	பெரிய புராணம். 11-ஆம் திருமுறைப் பிரபந்தங்கள், சீகாழித் தலப்புராணம் ஆச்சாபுரத் தலபுராணம்.	பெரிய புராணம்.

	பெயர்	சுந்தரமூர்த்தி சுவாமிகள்	மாணிக்கவாசக சுவாமிகள்
	(1)	(2)	(3)
1	மறு திருப்பெயர்கள்.	ஆளுடைய நம்பிகள், நம்பிஆரூரர், திருநாவலூரர், வன்றொண்டர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், திருமணக் கோலப் பெருமான், திருத்தொண்டர் தொகையாளி, சிங்கடியப்பன், வனப் பகையப்பன்.	ஆளுடைய அடிகள், மணி வாசகர், மணி மொழியார், கோவை வேந்தர்.
2	தோன்றிய நாடு	திருமுனைப்பாடி நாடு	பாண்டி நாடு.
3	தோன்றிய ஊர்	திருநாவலூர்	திருவாதவூர்.
4	தோன்றிய குலம்	ஆதிசைவர்	அந்தணர்,
5	தந்தையார்	சடையனார்	சம்பு பாதாசிரியார்.
6	தாயார்	இசைஞானியார்	சிவஞானவதியார்.
7	முதல் அருள் பெற்ற தலம்.	திருவெண்ணெய் நல்லூர்	திருப்பெருந்துறை.
8	முதல் பாடிய பதிகம்.	"பித்தா பிறைசூடி......"	...
9	ஒழுகிய நெறி	ஞானத்தில் யோகம்	ஞானத்தில் ஞானம்.

10	மார்க்கம்	சகமார்க்கம்	சன்மார்க்கம்
11	சிவபெருமான் காட்டி அருளியது.	ஓலையைக் காட்டி	காலைக் காட்டி.
12	சிவபெருமானின் வாழ்த்துரை.	பொன்னைப் பாடுவான்	மன்னைப் பாடுவான்.
13	பாடலுக்குப் பெயர்	திருப்பாசுரம் அல்லது திருப்பாட்டு.	திருவாசகம், திருக்கோவையார்
14	அடைந்த முத்தி	சாரூபம்	சாயுச்சியம்.
15	விளங்கிய அற்புதங்கள்	செங்கற்களைப் பொன்னாகப் பெற்றுக் கொண்டது. சிவபெருமான் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னை விருத்தாசலத்திலுள்ள ஆற்றிலே போட்டுத் திருவாரூர் திருக்குளத்திலே எடுத்தது. காவிரியாறு பிரிந்து வழிவிடச் செய்தது. முதலை உண்ட பாலனை அம்முதலை வாயினின்றும் அழைத்துக் கொடுத்தது.	சிவபெருமானே நரியைக் குதிரையாக்கிக் கொண்டு வரும் படிக்கும் மண் சுமந்து அடிபடும் படிக்கும் பத்தியால் பெருமானின் கருணை பெற்றது. புத்தர்களைத் தருக்கத்தில் வென்று ஊமைகளாக்கிப் பின் ஊமை தீர்த்துச் சைவர்களாக்கியது. பிறவி தொட்டு ஊமையாயிருந்த ஒரு பெண்ணை ஊமை தீர்த்துப் புத்தர் வினாவிய வினாக்களுக்கு விடை சொல்லும்படி செய்தது.

பெயர்	சுந்தரமூர்த்தி சுவாமிகள்	மாணிக்கவாசக சுவாமிகள்
(1)	(2)	(3)
	பரவைக்காக சிவபெருமானைத் தூதராக அனுப்பியது. வெள்ளையானையில் ஏறிக்கொண்டு திருக்கைலாசத்துக்கு எழுந்தருளியது.	தம்முடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுதிப் படி பெற்றுக்கொண்டது. எல்லோரும் காணக் கனக சபையினுள்ளே புகுந்து சிவத்தோடு கலந்தது.
16 சமகாலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள்.	விறன் மிண்டர், பெருமிழலைக் குறும்பர், ஏயர்கோன் கலிக்காமர், சோமாசிமாறர், சேரமான் பெருமாள், நரசிங்கமுனையர், கோட்புலியார், சடையனார், இசைஞானியார், மானக்கஞ்சாறர்.	...
17 அவரால் பாடப் பெற்றோர்.	இராவணன், இராமன் (ஏனை நாயன்மார் அனைவரும் திருத்தொண்டர் தொகையால் பாடப்பெற்றனர்.)	சண்டேசுரர், கண்ணப்பர், மண்டோதரி, இராவணன்.
18 பாடிய பதிகத் தொகை. இன்றுள்ள பதிகங்கள் இன்றுள்ள பாடல்கள்	38,000 100 1,038	... 51 திருவாசகம் : 658 திருக்கோவையார் : 400

19	திருமுறை எண்	ஏழாந் திருமுறை	எட்டாந்திருமுறை.
20	இறுதியாகப் பாடிய பதிகம்.	''தானெனை முன்......''	......
21	முத்திபெற்ற திருத்தலம்.	திருவஞ்சைக் களம் (திருக்கயிலை, நொடித்தான்மலை).	தில்லைச் சிற்றம்பலம்.
22	முத்தி அடைந்த வயது.	18	32
23	முத்தி அடைந்த தினம்.	ஆடி-சுவாதி	ஆனி-மகம்.
24	காலம்	கி.பி. 8-ஆம் நூற்றாண்டு.	(சரியாகத் தெரியவில்லை).
25	நாயனார் வரலாறு கூறும் நூல்கள்.	பெரிய புராணம். திருநாவலூர்ப் புராணம், திருவாரூர்ப் புராணம், பேரூர்ப் புராணம், திருத்துருத்திப் புராணம், அவிநாசிப் புராணம்.	திருவிளையாடல் புராணம், திருவாதவூரடிகள் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், திருஉத்தர கோசமங்கைப் புராணம்.

4 - நால்வர் துதிப்பாடல்கள்

நால்வர் வயது

1 அப்பருக்கெண் பத்தொன்று அருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்கு
அந்தம் பதினா றறி.

[தனிப் பாடல்]

நால்வர் திருநட்சத்திரம்

2 சித்திரைச் சதயம் அப்பர்; சிறந்தவை காசிமூலம்
அத்தரைப் பணிசம் பந்தர்; ஆனி மா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர் : முதியநல் ஆடிதன்னில்
சுத்தமாஞ் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

நால்வர் துதிப்பாடல்கள்

3 சைவத்தின்மேற் சமயம் வேறிலை
அதில்சார் சிவமாம்
தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லெனும்
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத்
தேவாரமும் திருவாசகமும்
உய்வைத்தரச் செய்த நால்வர் பொற்றாள்
எம் உயிர்த் துணையே.

[சைவ எல்லப்ப நாவலர்]

4 சொற்கோவும், தோணிபுரத் தோன்றலும் நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தான்எங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே.

[சிவானந்த மாலை]

5 பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

[உமாபதி சிவம்]

சிவத்தல அட்டவணை

சிவத்தலங்கள்

சோழநாடு

எண்	தலம்	இறைவன்-இறைவி	இடம்—ரயில் நிலையம்	திருஞானசம்பந்தர் பதிகம்	திருநாவுக்கரசர் பதிகம்	சுந்தரர் பதிகம்	பதிகங்களின் தொகை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
	தஞ்சை மாவட்டம்						
1	அகத்தியான்பள்ளி	அகத்தீசுரர் பாகம்பிரியாநாயகி	அகத்தியான்பள்ளி	1	—	—	1
2	அம்பர்ப்பெருந்திருக்கோயில்	பிரமபுரீசுரர் பூங்குழலம்மை	பூந்தோட்டம்	1	—	—	1

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
3	அம்பர்மாகாளம்	மாகாளநாதர் பட்சநாயகி	பூந்தோட்டம்	3	—	—	3
4	அரதைப் பெரும்பாழி (அரித்துவாரமங்கலம்)	பாதாளேசுவரர் அலங்காரநாயகி	சாலியமங்கலம்	1	—	—	1
5	அரிசிற்கரைப்புத்தூர் (அழகாரிபுத்தூர்)	படிக்காசு அளித்த ஈஸ்வரர்-அழகாம்பிகை	கும்பகோணம்	1	1	1	3
6	அவளிவணல்லூர்	சாட்சிநாயகேசுவரர் சௌந்தரநாயகி	சாலியமங்கலம்	1	1	—	2
7	திருவழுந்தூர்	வேதபுரீசுவரர் சௌந்தராம்பிகை	தேரழுந்தூர்	1	—	—	1
8	திருஆரூர்	வன்மீகநாதர் அல்லியங்கோதை	திருஆரூர்	5	21	8	34
9	திருஅன்னியூர் (பொன்னூர்)	ஆபத்சகாயேசுவரர் பெரியநாயகி	நீடூர்	1	1	—	2
10	ஆக்கூர்	தான்தோன்றியப்பர் வாளொடுங் கண்ணியம்மை	ஆக்கூர்	1	1	—	2

11	திருஆப்பாடி	பாலுகந்தஈசுவரர் பெரியநாயகி	ஆடுதுறை	—	1	—	1
12	திருஆரூர் அரநெறி	அரநெறியப்பர் வண்டார்குழலி	திருஆரூர்	—	2	—	2
13	திருஆரூர்ப் பரவையுண் மண்டலி	தூவாயநாதர் பஞ்சின் மெல்லடியம்மை	திருஆரூர்	—	—	1	1
14	திருஆலம்பொழில்	ஆத்மநாதேசுவரர் ஞானாம்பிகை	தஞ்சாவூர்	—	1	—	1
15	திருஆவடுதுறை	மாசிலாமணீசுவரர் ஒட்பிலாமுலை அம்மை	நரசிங்கம் பேட்டை	1	5	2	8
16	ஆவூர் (பசுபதீச்சுரம்)	பசுபதீச்சுரர் மங்களநாயகி	கும்பகோணம்	1	—	—	1
சூதாடி அதிற் கிடைத்த பொருளை எல்லாம் அடியவர் களுக்கு அமுதூட்டுவதற்குச் செலவு செய்தவர்.	சங்கமம்	கார்த்திகை-மூலம்
சிவனடியார்களுக்கு அன்பால் அமுதாக்கியவர். திருவைந்தெ ழுத்தை ஓதும் நியமம் பூண்ட வர். சுந்தரரின் உற்ற தோழர்.	குருவழி பாடு.	வைகாசி-ஆயில்யம்.
பௌத்த மதத்தைச் சார்ந்து அக்கோலத்தில் இருந்தபடியே சிவபெருமான் மீது அன்பு பூண்டு கல்லால் எறிந்து வழிபட்டுஉணவு உண்ணும் நியமம் பூண்டவர்.	லிங்கம்	மார்கழி-பூராடம்.
வெண்ணீறு அணிந்து வேதம் ஓதி யாகம் செய்து சிவனடியார் களுக்கு உணவு அளித்தவர்.	லிங்கம்	கார்த்திகை-பூராடம்.
தன் ஒரே மகனை வாளால் அரிந்து சமைத்துச் சிவனடியா ருக்கு இட்டவர்,	சங்கமம்	சித்திரை-பரணி.

(1)	(2)	(3)	(4)
36	கழறிற்றறிவார் நாயனார் (சேரமான் பெருமாணாய னார்)	அரசர்	கொடுங் கோளூர்-சேரநாடு
37	கணநாத நாயனார்	மறையவர்	சீர்காழி-சோழநாடு
38	கூற்றுவ நாயனார்	குறுநில மன்னர்,	களந்தை-சோழநாடு,
39	புகழ்ச்சோழ நாயனார்	அரசர்	உறையூர்-சோழநாடு.
40	நரசிங்க முனையரைய நாயனார்.	குறுநில மன்னர்	திருநாவலூர்-நடுநாடு.
41	அதிபத்த நாயனார்	பரதவர்	நாகைப்பட்டி னம்-சோழ நாடு.

(5)	(6)	(7)
கூத்தப் பெருமானை வழிபட்டு வந்தவர். பூசை முடிவில் கூத்தப் பெருமானின் சிலம்பொலி கேட்டவர். உவர் மண் காய்ந்து வெளுத்த மேனியோடு வந்த வண்ணாரைக் கண்டு சிவனடியார் என்று வணங்கியவர்.	லிங்கம்	ஆடி-சுவாதி.
திருத்தோணியப்பருக்கு நந்தவனம் முதலியன அமைத்துத் திருமாலை தொடுத்தல் முதலான பணிகளில் தொண்டர்களை ஈடுபடுத்தியவர். அவர்க்கு வேண்டிய கருவிகளை அளித்தவர்.	குருவழிபாடு.	பங்குனி-திருவாதிரை.
தில்லைக் கூத்தப் பெருமானால் அவர்தம் திருவடிகளையேதிருமுடியாகச் சூட்டப் பெற்றவர்.	லிங்கம்	ஆடி-திருவாதிரை.
அதிகமானுடன் போர் தொடுத்த போது அதிகமானது சேனை வீரர்களின் தலைகளைத் தமது சேனை வீரர்கள் வெட்டிக் கொணர்ந்து காட்ட அதில் ஒரு தலையைச் சிவனடியார் தலை என்று கண்டு, அத்தலையை ஏந்தித் திருவைந்தெழுத்து ஓதித் தீக்குளித்தவர்.	சங்கமம்	ஆடி-கார்த்திகை.
திருவாதிரை தோறும் அடியார்களுக்கு அமுது செய்வித்து நூறு பொன்னும் கொடுத்து வந்தவர்.	சங்கமம்	புரட்டாசி-சதயம்.
மீன் பிடிக்கும் போது அகப்படும் மீன்களில் தலை மீனைச் சிவபெருமானுக்கு என்று விட்டு வந்தவர். ஒரு நாள் நவமணி பொலிந்த மீன் ஒன்று மட்டுமே கிடைக்க அதனையும் கடலில் விடுத்தார்.	லிங்கம்	ஆவணி-ஆயில்யம்.

(1)	(2)	(3)	(4)
42	கலிக்கம்ப நாயனார்	வணிகர்	பெண்ணா கடம் -நடுநாடு
43	கலிய நாயனார்	செக்கார்	ஒற்றியூர்-தொண்டை நாடு.
44	சத்தி நாயனார்	வேளாளர்	வரிஞ்சையூர் - சோழநாடு.
45	ஐயடிகள் காடவர்கோன் நாயனார்	குறுநில மன்னர்	காஞ்சிபுரம் -தொண்டை நாடு
46	கணம்புல்லநாயனார்	தெரியாது	இருக்கு வேளூர்-சோழநாடு.
47	காரிநாயனார்	தெரியாது	திருக்கடவூர் சோழநாடு

(5)	(6)	(7)
சிவனடியார்க்கு நாள்தோறும் திருவமுது அளித்து வந்தவர். தன்னிடம் வேலை செய்த பணியாளர் சிவனடியாராக வந்த போது தன் மனைவியார் நீர் வார்க்கத் தாமதித்ததால் மனைவியின் கைகளை வெட்டியவர்.	சங்கமம்	தை-ரேவதி.
திருக்கோயிலில் திருவிளக்குப் பணி செய்து வந்தவர். ஒரு நாள் எண்ணெய் இல்லாது போகத் தனது இரத்தத்தை ஊற்றத் தன் கழுத்தை அரிய முற்பட்டவர்.	லிங்கம்	ஆடி - கேட்டை
சிவனடியார் திருவடிகளைப் பரவியும் திருவைந்தெழுத்தை ஓதியும் வந்தவர். சிவனடியார்களை இகழ்பவரது நாக்கை அறுக்கச் சத்தி என்ற ஆயுதம் ஏந்தியவர்.	சங்கமம்	ஐப்பசி-பூசம்.
சிவத்தலங்கள் தோறும் சென்று வழிபட்டுத் தலத்துக்கு ஒரு வெண்பாவாகப் பாடியவர், திருப்பணிகள் செய்தவர்.	லிங்கம்	ஐப்பசி-மூலம்
திருக்கோயிலுக்கு விளக்கு ஏற்றும் பணி செய்து வந்தவர். வறுமை வந்தபோது தில்லையையடைந்து கணம்புல் என்னும் ஒரு வகைப் புல்லை அறுத்து விற்று நெய்விளக்கு ஏற்றி வழிபட்டார். புல் விலை போகாமையால், புல்லையே விளக்காக எரித்து அதுவும் போதாமையால் தன் தலை முடியையே எரிக்க முற்பட்டார்.	லிங்கம்	கார்த்திகை -கார்த்திகை
மூவேந்தர்களிடம் பொருள் பெற்றுச் சிவாலயங்களைப் புதுப்பித்தும் சிவனடியார்களுக்கு வேண்டுவன கொடுத்தும் வந்தார்.	லிங்கம்	மாசி-பூராடம்

(1)	(2)	(3)	(4)
48	நின்றசீர்நெடுமாற நாயனார்	அரசர்	மதுரை-பாண்டிநாடு
49	வாயிலார் நாயனார்	வேளாளர்	மயிலாப்பூர்-தொண்டை நாடு
50	முனையடுவார் நாயனார்	வேளாளர்	நீடூர்-சோழ நாடு
51	கழற்சிங்க நாயனார்	மன்னர்	தெரியாது-தொண்டை நாடு
52	இடங்கழி நாயனார்	அரசர்	கொடும்பாளூர்-சேர நாடு

(5)	(6)	(7)
பாண்டிய நாட்டரசர். சோழ மன்னர் மகள் மங்கையர்க்கரசி யாரை மனைவியாகப் பெற்ற வர். குலச்சிறையாரை மந்திரி யாகப் பெற்றவர். சமணராய் இருந்து, வெப்பு நோயால் துடித் தார். திருஞானசம்பந்தரால் பாண்டியன் வெப்பு நோய் நீங்கி பிறவிக் கூனும் நீங்கப் பெற்றார் பின்னர் சைவம் தழைக்கச் செங்கோல் செலுத்தி வந்தார்.	குரு வழிபாடு	ஐப்பசி-பரணி
மனத்தைச் செம்பொற் கோயி லாக்கி ஞானத்தை விளக்காக ஏற்றி ஆனந்தத்தைத் திருமஞ் சனமாக ஆட்டி அன்பை அமு தாக நிவேதித்து நாள்தோறும் வழிபட்டு வந்தவர்.	லிங்கம்	மார்கழி-ரேவதி
போரில் பகைவரை வென்றும், பிறர்க்குத் துணையாய் நின்று வெற்றி வாங்கித் தந்தும் பெற்ற பொருளால் சிவனடி யார்க்கு அன்னம் பாலிப்புச் செய்து வந்தார்.	சங்கமம்	பங்குனி-பூசம்
திருவாரூர்க் கோயிலில் வழிபடும் போது தனது மனைவி புட்ப மண்டபத்தில் கிடந்த பூவை எடுத்து முகர்ந்தாள். அதைக் கண்டு செருத்துணையார் வெகுண்டு அந்நங்கையின்மூக்கை அரிந்தார். மலர் எடுத்த மனைவி யின் கையைக் கழற்சிங்கர் வெட் டினார்.	லிங்கம்	வைகாசி பரணி
சிவனடியார்க்குத் திருவமுதூட் டும் பணிக்கு முட்டுப்பாடு வந்த தால் தனது நெற்பண்டாரத்தில் நெல்லைக் களவாடிய சிவனடி யார் ஒருவரைக் கண்டு, அவரை வணங்கி நெற்பண்டாரத்தோடு மற்ற நிதிப் பண்டாரங்களையும் அவருக்கு அளித்தார்.	சங்கமம்	ஐப்பசி-கார்த்திகை

(1)	(2)	(3)	(4)
53	செருத்துணை நாயனார்	வேளாளர்	தஞ்சாவூர்-சோழநாடு
54	புகழ்த்துணை நாயனார்	ஆதி சைவர்	செருவிலி புத்தூர்-சோழநாடு
55	கோட்புலி நாயனார்	வேளாளர்	திருநாட்டியத்தான்குடி சோழநாடு
56	பூசலார் நாயனார்	மறையவர்	திருநின்றவூர்-தொண்டை நாடு
57	மங்கையர்க்கரசியார்	அரசர்	சோழநாடு

(5)	(6)	(7)
திருவாரூர்த் தியாகேசர் கோயிலில் நாடொறும் தொண்டாற்றி வரும் காலத்தில் ஒரு நாள் கழற்சிங்கரின் மனைவி பூவைமுகர்ந்த குற்றத்திற்காக அவளுடைய மூக்கை அரிந்தவர்.	லிங்கம்	ஆவணி-பூசம்
உலகில் பஞ்சம் வந்த காலத்திலும் சிவ வழிபாட்டை முட்டின்றிச் செய்து வரும்போது ஒரு நாள் பசியின் மிகுதியால் இறைவன் முடி மீது திருமஞ்சனக் குடத்தை வீழ்த்தித் தானும் மயங்கி விழ, இறைவனால் பஞ்சம் தீரும்வரை படிக்காசு கொடுக்கப் பெற்றவர்.	லிங்கம்	ஆவணி-ஆயில்யம்
திருக்கோயில்களின் திருவமுதுக்காக நெல்லைச் சேமித்து நாள்தோறும் வழங்கி வந்தவர்; பஞ்ச காலத்தில் அந்நெல்லை எடுத்துச் சுற்றத்தார் உண்ட குற்றத்திற்காக அவர்களை வாளினால் துணித்தவர்.	லிங்கம்	ஆடி-கேட்டை
மனத்தாலே பொருள் தேடி மனத்துள்ளே கோயில் கட்டிச் சிவபெருமானை எழுந்தருளச் செய்தவர். பல்லவ மன்னர் கட்டிய கோயிலின் குடமுழுக்கு நாளையும் மாற்றி வைக்கச் செய்து, தான் கட்டிய மனக் கோயிலில் குறித்த நாள் தவறாமல் இறைவனை எழுந்தருளச் செய்த சிறப்புப் பெற்றவர்.	லிங்கம்	ஐப்பசி-அனுஷம்
பாண்டிய அரசர் கூன்பாண்டியனின் மனைவியாக வாழ்ந்து தமது கணவனாரை நெடுமாறனாகத் திகழ வைத்துத் திருநீற்று நெறி காத்தவர். தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வப் பாவை. பாண்டிய நாட்டில் சமணம் நீங்கவும் சைவம் தழைக்கவும் திருஞானசம்பந்தரை மதுரைக்கு வரவழைத்துச் சைவம் வளர்த்த மங்கையர் திலகம்.	குரு வழிபாடு	சித்திரை-உரோகிணி

(1)	(2)	(3)	(4)
58	நேச நாயனார்	சாலியர்	காம்பிலி நகரம் (பெல்லாரி மாவட்டம்)
59	கோச்செங்கட்சோழ நாயனார்	அரசர்	தெரியாது-சோழநாடு
60	திருநீண்டயாழ்ப்பாண நாயனார்	பாணர்	திருஎருக்கத் தம்புலியூர்-நடு நாடு
61	சடைய நாயனார்	ஆதி சைவர்	திருநாவலூர் -நடு நாடு
62	இசை ஞானியார்	ஆதி சைவர்	திருவாரூர் நடு நாடு
63	சுந்தரமூர்த்தி சுவாமிகள்	ஆதி சைவர்	திருநாவலூர் -நடு நாடு

(5)	(6)	(7)
மனத்தால் சிவபெருமானது திருவடிகளை நினைந்தும், வாக்கால் திருவைந்தெழுத்தை ஓதியும் மெய்யால் அடியார்களுக்குக் கோவணமும் நீளுடையும்நெய்து கொடுத்தும் வந்தவர்.	சங்கமம்	பங்குனி-உரோகிணி
சிவபெருமானுக்குச் சோழ நாட்டில் மாடக் கோயில்கள் பல கட்டியவர். தில்லை நடராசப்பெருமானை வழிபட்டுத் தில்லைவாழ் அந்தணர்க்குத் திருமாளிகைகள் கட்டியளித்தார்.	லிங்கம்	மாசி-சதயம்
மதுரையில் யாழ் வாசித்து ஆலவாயானிடம் பொற்பலகை பெற்றவர். திருஞானசம்பந்தரோடு தலந்தோறும் சென்று சம்பந்தரது தேவாரப் பதிகங்களை யாழிலிட்டு வாசித்து வந்தவர்.	குரு வழிபாடு	வைகாசி-மூலம்
சுந்தரமூர்த்தி சுவாமிகளை மகனாகப் பெறப் பெருந்தவம் செய்தவர்.	லிங்கம்	மார்கழி-திருவாதிரை
சுந்தரமூர்த்தி சுவாமிகளை மகனாகப் பெற்றெடுத்த அம்மையார்.	லிங்கம்	சித்திரை-சித்திரை
சிவபெருமானுக்குத் தோழமை பூண்டு தலந்தோறும் சென்று திருப்பதிகம் பாடிச் சைவ நெறியைத் தழைக்கச் செய்தவர். திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் திருத்தொண்டர்த் தொகை பாடி அடியார் வரலாற்றை உலகறியச் செய்தவர்.	குரு வழிபாடு	ஆடி-சுவாதி

43. பௌர்ணமி நாட்களில் செய்யவேண்டிய அபிடேகப் பொருள்கள்

சித்திரைத் திங்கள்	—	தவனம் (மருக்கொழுந்து)
வைகாசி	—	சந்தனம்
ஆனி	—	முப்பழம் (வாழை, பலா, மா)
ஆடி	—	பசுவின்பால்
ஆவணி	—	சர்க்கரை
புரட்டாசி	—	அதிரசம்
ஐப்பசி	—	அன்னம்
கார்த்திகை	—	தீபம்
மார்கழி	—	பசுநெய்
தை	—	கருப்பஞ்சாறு
மாசி	—	கம்பளம், இளவெந்நீர்
பங்குனி	—	பசுந்தயிர்

44. தொகையடியார்கள்

1. தில்லைவாழந்தணர்
2. பொய்யடிமையில்லாத புலவர்
3. பத்தராய்ப் பணிவார்
4. பரமனையே பாடுவார்
5. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்
6. திருவாரூர்ப் பிறந்தார்
7. முப்போதும் திருமேனி தீண்டுவார்
8. முழுநீறு பூசிய முனிவர்
9. அப்பாலுமடிச்சார்ந்தார்

45. பெண் அடியார்கள்

(1) காரைக்கால் அம்மையார்
(2) மங்கையர்க்கரசியார்
(3) இசைஞானியார்

46, பஞ்சபுராணம் ஏற்பட்ட வரலாறு

சைவர்கள் தினந்தோறும் காலை மாலை இறைவழிபாடு செய்ய வேண்டும். அவ்வழிபாட்டுக் குறுதுணையாயிருப்பன நம் பன்னிரு திருமுறைகளாகும். ஆகவே நாடோறும் பன்னிரு திருமுறைகளிலிருந்தும் திருமுறைக்கு ஒரு பாடல் வீதம்

பன்னிரண்டு பாடல்கள் ஓதி வழிபட வேண்டும் என்பது முன்னையோர் வகுத்த முறையாகும். மக்கள் உலகியலில் உழன்று கொண்டிருப்பதால் ஒய்வில்லை, நேரமில்லை. அதிக வேலை என்ற காரணங்களைக் கூறி இத்திருமுறை வழிபாட்டினின்றும் விலகிவிடக் கூடாது என்பதைக் கருதியே நம் சைவப் பெருஞ் சான்றோர்கள் பெருங் கருணை மேலீட்டால் பன்னிரு பாடல்கள் ஓத முடியாவிடினும் ஐந்து பாடல்களாவது ஓதுங்கள் எனச் சுருக்க வழியையும் காட்டிப் போந்தனர். அவ்வாறு ஓதும் முறைக்கே பஞ்ச புராணம் ஓதுதல் என்பதாகும்.

(1) தேவாரம் ஏழு திருமுறைகளுள் ஏதாவது ஒரு பாடல், (2) எட்டாம் திருமுறை திருவாசகம் திருக்கோவையாருள் ஏதாவது ஒரு பாடல், (3) திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறையில் திருப்பல்லாண்டும் சேர்ந்திருக்கிறது. ஆகவே திருவிசைப்பாவில் ஒரு பாடலும், (4) திருப்பல்லாண்டில் ஒரு பாடலும் சேர்த்துள்ளனர். "வாழுமா வாழே" என்னும் ஆன்றோர் அமுத மொழிக் கேற்ப அவனுக்குப் பல்லாண்டுகூறி அதனால் மக்கள் தங்கள் முன்னேற்றம் கருதினர் போலும், ஆதலின் அப் பல்லாண்டுப் பாடலையும் பஞ்சபுராணத்தில் ஒன்றாக ஏற்றுள்ளார்கள் எனக் கருத இடமேற்படுகிறது. (5) இறுதியாக பெரிய புராணத்துள் ஒரு பாடலைப் பாடும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

ஆகவே பஞ்சபுராணம் என்பது தேவாரம், திருவாசகம் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் ஆகியவற்றுள் ஒவ்வொரு பாடலாகத் தினசரி வழிபாட்டில் ஆத்மார்த்த பூசையிலும் பரார்த்த பூசையிலும் ஐந்து திருப்பாடல்கள் பத்தியுடன் ஓதி வழிபடும் மரபாகும். யாவரும் தங்கள் வீட்டிலும் தங்கள் பிள்ளைகளுக்குப் பன்னிரு திருமுறைகள் ஓதும் பழக்கத்தை ஊட்டுவார்களாக. அதுமுடியாது போயினும் இப்பஞ்ச புராணப் பாடல்களையாவது ஓதி மக்களின் ஆன்மா நன்னிலையடைய வேண்டிய முயற்சியிலீடுபடுவார்களாக.

அவனருளாலே அவன் தாள் வணங்குக.

47. பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

(1)

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
    யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
    முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
    வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
    வழிபடும் அதனாலே.

(திருஞானசம்பந்தர்)

திருவாசகம்

(2)

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
    பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
    பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
    செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவ தினியே.

(மாணிக்கவாசகர்)

திருவிசைப்பா

(3)

அன்னநடையார் அமுத மொழியார்
    அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
    சிற்றம்பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
    புலித்தோல் பியற்கு இட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
    விகிர்தன் ஆடுமே!

(திருவாலியமுதனார்)

திருப்பல்லாண்டு

(4)

நிட்டை இலா உடல்நீத்து என்னை ஆண்ட
நிகர் இலா வண்ணங்களும்
சிட்டன் சிவன் அடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கு, என் அகம் நெக ஊறும்
அமிர்தினுக்கு, ஆல நிழல்
பட்டனுக்கு, என்னைத் தன்பால் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (சேந்தனார்)

பெரியபுராணம்

(5)

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிக்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.
(சேக்கிழார்)

48. பன்னிரண்டு திருமுறைகள்

திருச்சிற்றம்பலம்

முதல் திருமுறை

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

2ஆம் திருமுறை

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

3ஆம் திருமுறை

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே.

4ஆம் திருமுறை

மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானைப்
பண்பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனைஎன்
கண்பொருந்தும் போழ்தத்தும் கைவிடநான் கடவேனோ.

5ஆம் திருமுறை

ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானுந் தொழுவனே.

6ஆம் திருமுறை

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்துமானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாய் ஆறங்கமானாய்
பொன்னானாய் மணியானாய்ப் போகமானாய்ப்
பூமிமேல் புகழ்தக்க பொருளே உன்னை
என்னானாய் என்னானாய் என்னி னல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்துகேனே.

7ஆம் திருமுறை

திருவும் மெய்ப்பொருளும் செல்வமு மெனக்குன்
சீருடை கழல்களென் றெண்ணி
ஒருவரை மதியா துறாமைகள் செய்து
மூடியுமுறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திருமுல்லை
வாயிலாய் வாயினா லுன்னைப்
பரவிடுமடியேன் படுதுயர்களையாய்
பாசுபதாபரஞ் சுடரே.

8ஆம் திருமுறை

பாடிற்றிலேன் பணியேன் மணிநீயொளித்
தாய்க்குப் பச்சூன்
வீடிற்றிலேனை விடுதிகண்டாய் வியந்
தாங்கலறித்

தேடிற்றிலேன் சிவனெவ்விடத் தான் எவர்
கண்டனரென்
றோடிற்றிலேன்கிடந் துள்ளுருகேன் நின்
றுழைத்தனனே.

9ஆம் திருமுறை

திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுது, அருவிகண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி
ஈசற்கு ஆட்செய்மின், குழாம்புகுந்து,
அண்டம் கடந்த பொருள், அளவு
இல்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள
பொருள்'' என்றே பல்லாண்டு கூறுதுமே.

10ஆம் திருமுறை

எங்குந் திருமேனி யெங்குஞ் சிவசக்தி
எங்குஞ் சிதம்பர மெங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலா லெங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே.

11ஆம் திருமுறை

சிந்தனை செய்ய மனமமைத் தேன்செப்ப
நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத் தேன்கை
தொழ வமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத் தேன்மெய்
யரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி யீசற் கிவையான்
விதித்தனவே.

12ஆம் திருமுறை

இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின்
　　வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே
　　லுன்னை யென்று
மறவாமை வேண்டு மின்னும் வேண்டு நான்
　　மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும் போதுன் னடியின்கீ
　　ழிருக்க வென்றார்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.

(திருச்சிற்றம்பலம்)

II. சாத்திரப் பகுதி

1. சைவசமய வரலாற்றுச் சுருக்கம்

வரலாற்றுக் காலத்து முற்பட்ட தொன்மையை உடையது சைவசமயம். சைவம் சிவத்தோடு சம்பந்தம் உடையது. இது சங்க நூல்களிலும் போற்றப்பட்டு இருக்கிறது. ஐம்பெரும் காப்பியக் காலங்களில் சமண புத்த மதக் கலப்பால் சைவம் தலையெடுக்கத் தடை ஏற்பட்டது. அவ்வமயமே சைவசமய குரவர்கள் தோன்றிச் சைவத்தை வளர்த்தனர். பின் சங்கரரும் சைவக் கொள்கைக்கு மாறாக அத்துவைதம் என்ற பெயரால் ஏகான்ம வாதக் கொள்கையைப் பரப்பினார்.

திருமுறைகளுள் சைவ சமயச் சாத்திரக் கருத்துகள் இலை மறை காய்போல் அங்கங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ''பசு பாச வேதனை ஒண்தளையாயின தவிரவ் வருள்தலைவன்'' என்பது சம்பந்தர் திருவாக்கு. இன்னும் இதுபோல் பல உள. சமணர் புத்தர் வருகையால் சைவசமய குரவர் கிடைத்தனர். சங்கரர் வருகையால் சந்தான குரவர்கள் நமக்குக் கிடைத்தனர்.

2. மெய்கண்ட சாத்திர நூல்களும் ஆசிரியர்களும்

திருமுறைகள் பன்னிரண்டும் சித்தாந்த சைவ சாத்திரங்கள் பதினான்கும் சைவ சமயத்தின் பிரமாண நூல்கள் ஆகும். பதினான்கு சாத்திரங்களும் அவற்றை அருளிய சந்தான ஆசிரியர்களும் வருமாறு :

	நூல்கள்	அருளியவர்களின் பெயரும் காலமும்
1	திருவுந்தியார் 45 பாடல்கள்.	திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார், கி. பி. 1147.
2	திருக்களிற்றுப் படியார் திருஉந்தியார் வழிநூல் 100 வெண்பாக்கள்.	திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார், கி. பி. 1177.
3	சிவஞான போதம், 12 சூத்திரங்களும், 81 வெண் பாக்களும்.	மெய்கண்ட சிவாச்சாரியார், கி. பி. 1232.
4	சிவஞான சித்தியார், சிவ ஞானபோதத்தின் வழி நூல், பரபக்கம் 301 பாடல் கள், சுபக்கம் 328 பாடல்கள்,	அருணந்தி சிவாச்சாரியார் (மெய்கண்டாரின் மாணவர்).
5	இருபா இருபஃது, 20 வெண் பாக்கள், 20 ஆசிரியப் பாக்கள்.	ஷை
6	உண்மை விளக்கம், 53 வெண்பாக்கள்.	திருவதிகை மனவாசகங் கடந்த தேவர் (மெய்கண்டாரின் மற்றொரு மாணவர்).
7	சிவப்பிரகாசம் (சிவஞான போதத்தின் சார்பு நூல்) 100 திருவிருத்தங்கள்.	உமாபதி சிவாச்சாரியார் (மறைஞான சம்பந்தரின் மாணவர்) கி. பி. 1313.
8	திருவருட் பயன், 100 குறள் வெண்பாக்கள்.	ஷை
9	வினா வெண்பா 13 வெண் பாக்கள்.	ஷை
10	போற்றிப் பஃறொடை, 95 கண்ணிகள்.	ஷை
11	கொடிக்கவி, 5 பாடல்கள்	ஷை
12	நெஞ்சுவிடு தூது, 119 கண்ணிகள்.	ஷை
13	உண்மை நெறி விளக்கம், 6 செய்யுள்கள்.	ஷை
14	சங்கற்ப நிராகரணம், 13 அகவல்பாக்கள்,	ஷை

இப்பதினான்கு சாத்திரங்களையும் உள்ளடக்கிக் காட்டும் வெண்பா ஒன்று உள்ளது. அது வருமாறு :

''உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா, உண்மை பிரகாசம்—வந்தஅருள்
பண்பு வினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று''

இவை தவிர வாகீச முனிவர் (கி. பி. 1163) செய்த ''ஞானாமிர்தம்'' சீர்காழி சிற்றம்பல நாடிகள் (கி. பி. 1420) அருளிய துகளறு போதம், சிவஞான சுவாமிகள் செய்த 'சிவஞான போதம் சிற்றுரை' மற்றும் ''திராவிட மாபாடியம்'' முதலிய நூல்களும் சைவ சித்தாந்தப் பிரமாண நூல்களாகக் கொள்ளத் தக்கவை. யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் எழுதிய சைவ வினாவிடை முதலிய நூல்களையும் சைவ சமய சாத்திரப் பிரமாண நூல்களாகக் கொள்ளலாம்.

3. சந்தானங்கள் அமைப்பு முறை

சிவபெருமான் சிவாகமங்களை அருளினார். அவற்றை சிவபெருமான் நந்தி தேவருக்கு உபதேசித்தார் :

அகச் சந்தான குரவர் :

1. நந்தி தேவர் 2. சனற்குமாரர்
3. சத்தியஞானதரிசனி. 4. பரஞ்சோதி முனிவர்.

புறச் சந்தான குரவர் :

1. மெய்கண்டார் 2. அருணந்தி சிவாச்சாரியார்
3. மறைஞான சம்பந்தர் 4. உமாபதி சிவம்.

சந்தானாச்சாரியார் நால்வரின் வரலாற்றுச் சுருக்கத்தைக் கீழ்க்காணும் பட்டியலில் காண்க :

சந்தனாசாரியர்—

	மெய்கண்டார்	அருணந்தி சிவாச்சாரியர்
ஊர்	திருப்பெண்ணாகடம்	திருத்துறையூர்
குலம்	வேளாளர்	ஆதி சைவர்
வேறு திருப்பெயர்	சுவேதவனப் பெருமாள் திருவெண்காடர்	சகலாகம பண்டிதர்
குரு	பரஞ்சோதி முனிவர்	மெய்கண்ட தேவர்
சீடர்	அருணந்தி சிவாசாரியர், மனவாசகம் கடந்தார் சீகாழிச்சிற்றம்பல நாடிகள் முதலான 49 மாணவர்கள்	மறைஞான சம்பந்தர்
விளங்கிய அற்புதங்கள்	—	—
அருளிச் செய்த நூல்கள்	சிவஞான போதம்	சிவஞான சித்தியார் இருபா இருபஃது
முத்தி பெற்ற தினம்-காலம்	ஐப்பசி—சுவாதி—13-ஞூ	புரட்டாசி—பூரம் 13-ஞூ

மறைஞான சம்பந்தர்	உபாபதி சிவாசாரியர்
திருப்பெண்ணாகடம்	கொற்றவன் குடி
அந்தணர்	தில்லைவாழ் அந்தணர்
	கொற்றங்குடி முதலியார்
	கொற்றங்குடி அடிகள்
அருணந்தி சிவாசாரியர்	மறைஞான சம்பந்தர்
உமாபதி சிவாசாரியர்	—
—	பெற்றான் சாம்பானுக்கு முத்தி கொடுத்தருளியமை; முள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்தருளியமை; சிதம் பரத்தில் ஏறாது நின்ற கொடியைக் கொடிக்கவி பாடி ஏறச் செய்தமை; கோயிற் புராணத்தை அரங்கேற்றச் செய்தமை.
	(1) சிவப்பிரகாசம் (2) திரு அருட்பயன் (3) வினா வெண்பா (4) போற்றிப் பஃறொடை (5) கொடிக் கவி (6) நெஞ்சு விடுதூது (7) உண்மை நெறிவிளக்கம் (8) சங்கற்ப நிராகரணம் (9) கோயிற் புராணம் (10) பௌட்கராகமவிருத்தி (11) சேக்கிழார் புராணம் (12) திருமுறைகண்ட புராணம் (13) திருப்பதிக்கோவை (14) சிவநாமக்கலி வெண்பா
ஆவணி—உத்திரம் 13-நூ	சித்திரை—அத்தம் 14-நூ

4. சைவ சமயக் கொள்கைகள்

''என்று நீ அன்று நான் உன் அடிமை'' என்பது ஆன்றோர் வாக்கு. இதிலிருந்து பெருமானாகிய கடவுளும் எப்பொழுதும் இருக்கிறார். நான் எனப் பெறும் உயிரும் எப்போதும் இருக் கிறது. அடிமை என்பதால் அக்கடவுளுக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தமும் எப்பொழுதும் இருக்கிறது. இவற்றையே (பதி), (இறை), (2) பசு, (உயிர்), (3) பாசம் (ஆணவம், கன்மம், மாயை) எனச் சாத்திரங்கள் கூறுகின்றன. உயிரையும் பாசத்தை யும் கடவுள் படைக்கவில்லை. அவையும் அனாதியே என்பது சைவ சித்தாந்தக் கொள்கை.

பதி: இறைவன் எண் குணங்களையுடையவன். அவை தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வின னாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பு இல் இன்பம் உடைமை என்பனவாம். கடவுள் உயிர்களின் பொருட்டு அருவம் அருவுருவம் உருவம் எனும் மூவகைத் திருமேனி கொண்டு படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களைச் செய்கிறார்.

பசு: உயிர் சார்ந்ததன் வண்ணம் ஆம் தன்மையது. இறைவ னோடு சேர்ந்தால் நல்ல பண்புகளும் பாசத்தோடு சேர்ந்தால் அறியாமை முதலிய நிலைகளும் பெறுகின்றது. சத்தோடு (இறைவன்) சேர்ந்தும் அசத்தோடு (பாசம்) சேர்ந்தும் பழகும் தன்மை பெற்றிருப்பதாலேயே ஆன்மாவுக்குச் சதசத்து என்றும் பெயர் ஏற்பட்டது. உயிரை அறியாமை வந்து மறைப்பதால் பல பாவச் செயல்களில் அது ஈடுபடுகின்றது. பசுபதியை நாடி வழிபடின் அவனருளால் பாசத்தின் வலி குறைந்து செயலற்றுக் காணப்பெறும். அதனால் பசு இறையருள் பெற வாய்ப்பாகும். ''உள்ளது தோன்றாது இல்லது வராது'' என்பதும் ஒரு சிறந்த கொள்கை. அதனால் ஆணவம் என்னும் பாசம் உயிரோடு கலந்து மறைத்தலைச் செய்கிறது. இறையருளாம் ஒளி அவ் வாணவ ஆற்றலைக் குறைத்துவிடவே முத்தி சாதனத்தை அவ் வுயிர் பெற ஏதுவாகிறது.

பாசம்: மாயையும், கன்மமும் உயிர் நன்மை பெறத் துணையாயிருப்பனவே. ஆதலின் ஆணவ மாய மலமே உயிரைப்

பற்றி அறியாமையில் விழ்த்துவதென நம் சமய நூல்கள் கூறும். மாயையை ஒளி என்று நம் நூல்கள் கூறுகின்றன. இருளைப் போக்கத் துணையாயிருப்பது. கன்மம் நல்லது இது தீமை இது என ஆராய்ந்து செயற்பட முனைவதாம். உலகத் தோற்றத் துக்கு மாயையே முதற் காரணம். அவ்வாறு தோற்றி உயிர் களின் அறியாமையைப் போக்கி ஈடேறச் செய்யவே இறைவன் கருணையால் இவ்வுலகு முதலியவற்றைப் படைத்தான்.

தத்துவ உண்மை தெரிந்து அவனருளைப் பெற்று உலகத் துயிர்கள் இன்புறுவதாகுக. அத் தத்துவங்கள் வருமாறு:

5. தத்துவங்கள் – 36

ஆன்ம தத்துவம் (24)

பூதம் ஐந்தாவன: நிலம், நீர், தீ, வளி, வான்	5
பொறி (ஞானேந்திரியம்), மெய், வாய், கண், மூக்கு, செவி	5
கன்மேந்திரியம்: நா, கை, கால், குதம், குறி	5
தன் மாத்திரை: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்	5
அந்தக்கரணம்: மனம், புத்தி, சித்தம், அகங்காரம்	4
	24

வித்தியா தத்துவம் (7)

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை	7

சிவ தத்துவம் (5)

சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம், விந்து, நாதம்	5
	36

6. சிவாகமங்கள்

ஆகமம் கடவுளிடத்து வந்த நூல். வேதாகமங்கள் எல்லாப் பொருள்களின் இயல்புகளையும் கூறுதலின், முதனூல் எனப்படும். ஆகமம் இருபத்தெட்டு. இவை சதாசிவ மூர்த்தியின் ஐந்து திருமுகங்களினின்றும் தோற்றிச் சுத்த வித்தியா தத்துவத்தி லிருந்து சதாசிவனால் உபதேசிக்கப்பட்டனவாம். ஆகமங்கள் வருமாறு:

(1)	காமிகம்	(15)	வீரம்
(2)	யோகஜம்	(16)	ரௌரவம்
(3)	சிந்தியம்	(17)	மகுடம்
(4)	காரணம்	(18)	விமலம்
(5)	அசிதம்	(19)	சந்திரஞானம்
(6)	தீப்தம்	(20)	முகவிம்பம்
(7)	சூக்குமம்	(21)	புரோற்கீதம்
(8)	சகச்சிரம்	(22)	இலளிதம்
(9)	அஞ்சுமான்	(23)	சித்தம்
(10)	சுப்பிரபேதம்	(24)	சந்தானம்
(11)	விசயம்	(25)	சர்வோக்தம்
(12)	நிச்சுவாசம்	(26)	பாரமேசுரம்
(13)	சுவாயம்புவம்	(27)	கிரணம்
(14)	ஆக்கினேயம்	(28)	வாதுளம்

குறிப்பு : "ஆ"—சிவஞானம்; "க"—மோட்ச சாதனம்; "ம"—மலநாசம்; எனப் பொருள் கொண்டு ஆகமம் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசஞ் செய்து ஞானத்தை உதிப்பித்து மோட்சம் கொடுப்பதற்காக உபதேசிக்கப் பட்ட நூல் எனவும், ஆ—பசு; கம்—பதி; ம—பாசம் எனப் பொருள்கொண்டு, பதி, பசு, பாசம் என்பவற்றின் இலக்கணங்களை விரித்துணர்த்தும் நூல் எனவும் கூறுவர்.

7. வேதங்கள் (4)

(1) ருக்வேதம்	(2) யஜுர்வேதம்
(3) சாமவேதம்	(4) அதர்வணவேதம்

8. வேதாங்கங்கள் (6)

(1) சிக்ஷை	(2) வியாகரணம்
(3) சந்தஸ்	(4) நிருத்தம்
(5) கல்பம்	(6) ஜோதிஷம்

9. நாற்படிகள்

கிடைத்தற்கரிய மானுடப் பிறவியைப் பெற்ற மக்கள் இப் பிறவியைப் போற்ற வேண்டும். இப் பிறவியில் புண்ணியச் செயல்களிலிடுபட்டு மேலாய பயனாக வீடுபேறு அடைய முயல வேண்டுமே யொழிய தீச்செயல்களிலீடுபட்டுத் துன்பம் தரும் இழிபிறவிகளில் பிறந்து இறப்பதனையே தொழிலாகப் பெற்று விளங்கக் கூடாது. அவ்வாறு விடுபேறு அடைய நம் முன்னோர் மேற்கொண்ட வழி முறைகள் நான்காம். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இந்த நாற்படிகளையும் மேற் கொள்ள வில்லையே என்று மாணிக்கவாசக சுவாமிகள் "சிலமின்றி நோன்பின்றிச் செறிவேயின்றி அறிவின்றித்" திரிவதாகத் தம்மைத் தாழ்த்திக் கொள்கிறார். (ஆனந்த மாலை 3) ஆகவே இந்நாற்படிகளிலும் படிந்து முத்தி நிலையடைய முயல்வோமாக.

1. சரியை

சிவ பெருமான் உருவத்தை வழிபடுதல், பூந்தோட்டம் உண்டாக்குதல், மலர் பறித்தல், மாலை தொடுத்தல், பெருமானுக்குச் சூட்டுதல், திருக் கோயிலைத் தூய்மை செய்தல், மெழுகுதல், திருவிளக்கிடுதல், பெருமான் புகழைப் பாடிப் பரவுதல், திருக்கோயில் கட்டல், பழைய கோயில்களைப் புதுப்பித்தல், குளம் தோண்டுதல், மூர்த்தி, தலம், தீர்த்தம் போற்றி வழிபடல், இறைபணி, திருக்கோயிற் பணி, சிவனடியார் பணியில் ஆர்வமுடன் செயற்படுதல் முதவியனவாம். இவை புறத் தொழில்கள்.

2, கிரியை

எண்ணத்தாலும் செயலாலும் இறைவனின் அருவுருவத் திருமேனியை வழிபடுதல் (இலிங்கம் தீபம் போன்றன அவ்வுருவம்) சரியைத் தொண்டுகளும் செய்ய வேண்டும். மேலும் சிவபெருமான் மண், தீ, நீர், வாயு, வெளி, சந்திரன், சூரியன், ஆன்மா ஆகிய அட்டமூர்த்தியாயும் மற்றும் எங்கும் நிறைந்தும் காணப்படுகின்றார். அவனை வழி பட முதலில் ஆன்மா தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். பின் பூசை செய்யும் இடத்தைத் தூய்மை செய்ய வேண்டும். அப்பால் பூசைக்குப் பயன்படும் பொருள்களையும் தூய்மை செய்ய வேண்டும். அப்பால் தான் செபம்செய்ய நேரும் ஐந்தெழுத்து மந்திரத்தையும் ஞானநோக்கம் வேண்டித் தூய்மை செய்து கொள்ள வேண்டும். அப்பால் வழிபடு கடவுளாய் இலிங்கத்தைத் திருமுழுக்காட்டுதல் முதலிய செயல்களால் வழிபட்டுச் சுத்தி செய்ய வேண்டும். இவற்றிற்குப் பஞ்ச சுத்தி (ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலிங்கசுத்தி) என்பது பெயராகும். பின் அர்ச்சனை செய்தல், நறும் புகை காட்டுதல், ஒளி காட்டி வழிபடல், ஓமம் செய்து வழி படல் முதலியவற்றைச் செய்தல் வேண்டும். இவையனைத்தும் அகத்தும் புறத்தும் வழிபடும் முறையாம்.

3. யோகம்

சரியையாளன் காற்பங்கு மேனிலையுறுகிறான். கிரியையாளன் அரைப்பங்கு நன்னிலையடைகிறான். யோக நெறி நிற்போன் மனத்தை உலகியலில் உழலாமல் அடக்க வேண்டும். தியானப் பொருளாய சிவத்தையே மனத்தில் நிறுத்தி பிராணாயாமம் முதலிய யோகப்படிமுறைகளில் ஈடுபட்டு முன்னேறி மூலாதாரத்திலிருந்து எழும் இடைகலை பிங்கலை நாடிகளைச்

சுழுமுனையில் நிறுத்தி அதன் வழியாய்ப் பிரமரந்திரம் வரை அமிர்தம் தேக்கெடுக்கப் பின் அவ் வமிர்தை உண்டு இன்பமார்ந் திருக்கை. இது அகத்து மட்டும் இறைவனை வழிபடும் முறையாம்.

4. ஞானம்

சரியை, கிரியை, யோகம் என்பன அரும்பு மலர் காய்போல் வன. ஞானம் கனி போல்வது. ஞானமே வீட்டு நெறி காட்ட வல்லது. யோக நெறியில் மனத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தவன் பெருமானைப் பற்றிய அறிவை ஐயந்திரிவு அற பெறுகின்றான். முழு மலவலி கெட பெருமானே குருவாய் ஞான வானுக்கு வந்து உபதேசித்து அருள் மய மாக்குகின்றான். இரு வினையொப்பு, மலபரி பாகம், சத்திநிபாதம் முதலிய நிலைகள் ஏற்பட்டு வீடு பெறும் நிலை ஏற்படுகிறது.

சரியை	கிரியை	யோகம்	ஞானம்
தாசமார்க்கம்	சத்புத்திர மார்க்கம்	சகமார்க்கம்	சன்மார்க்கம்
அடிமைநெறி	மகன்மை நெறி	தோழமை நெறி	குருசீடநெறி அல்லது ஞானநெறி
அரும்பு	மலர்	காய்	கனி
சாலோகமுத்தி	சாமீபமுத்தி	சாரூபமுத்தி	சாயுச்சிய முத்தி
அப்பர்	சம்பந்தர்	சுந்தரர்	மாணிக்க வாசகர்
புறத்தொழில்	அகமும் புறமும் தொழிற்படல்.	அகம் தொழிற் படல்.	அறிவு தொழிற்படல்

இவ்வாறு படிப்படியாய் அருள் நெறியில் முன்னேறுவது சோபான முறை எனப்படும். பெரும்பாலும் எல்லா உயிர்களும் இவ்வாறே முன்னேறி முத்தி எய்தும். கருவிலேயே திருவுற்ற அருளாளர்கள் சிலர் இந் நெறி முறைக்கு விலக்காக அமைதலும் உண்டு. எடுத்துக் காட்டாகக் கண்ணப்பர் முதலிய நாயன்மார் களைக் குறிப்பிடலாம்.

10. சைவ சாதனங்கள்

1. திருநீறு

சைவ சமயச் சின்னங்கள் திருநீறும் அக்கு மணியும் ஆம். காலையில் எழுந்ததும் முகம் கழுவி திருநீறு 'சிவ சிவ' என்று கூறி

அணிதல் வேண்டும். உலகில் எந் நெறியினருக்கும் தத்தமக்கென்று ஒவ்வொரு சின்னமுண்டு. சைவ நெறியாளருக்குத் திருநீறே சிறந்த சமயச் சின்னமாகும். ''நீற்றினை நிறையப் பூசி'' என்பது அருளாளர் திருவாக்கு. திருநீற்றைச் சாதாரணமாக அணிவதற்கு உத்தூளனம் என்றும் நீரில் குழைத்து அணிவதற்குத் திரிபுண்டரம் என்றும் கூறுவர். ''நீறில்லா நெற்றி பாழ்'' என்பது அவ்வையார் திருவாக்கு. ஆகவே சைவர்கள் எப்பொழுதும் திருநீறு இலங்கிய நெற்றியினராகவே திகழ வேண்டும். யாராவது பழிப்பார் என்றோ பிறருக்கு அச்சப்பட்டோ திருநீறு அணிதலை விலக்கக் கூடாது. திருநீறு இறையுணர்வை நிலைபெறுத்துவதுடன் நிலையாமையையும் அறிவுறுத்தி மக்களை இறைவனிடத்தில் ஈடுபடுத்தும் ஒப்புயர்வற்ற சாதனமாகும். இதன் பெருமை குறித்துச் சம்பந்தர் பாடிய திருநீற்றுப் பதிகத்திலிருந்து உணரலாம்.

2. அக்குமணி (உத்திராட்சம்)

அக்குமணி இமயமலையில் உண்டாகும் ஒரு மரத்தின் விதையாகும். இதனைச் சைவர்கள் மாலையாகவோ தனித்தோ அணிந்துகொள்வர். இது இறைநினைவை ஊட்டும் சாதனமாய் அமையும். மேலும் உடலில் இம்மணியை அணிவதால் பல நோய்கள் இயல்பாகவே நீங்குகின்றன என்று தற்கால அறிவியலாராய்ச்சியாளர்கள் பரக்க எழுதியுள்ளனர். ஒரு முகம் முதல் பதினாறு முகம் வரை கொண்ட அக்குமணிகளை மாலையாய் அணிபவர் 54 அல்லது 108 மணிகளைக் கொண்டதாய் அமைத்துக் கொண்டு அணியலாம். ஐந்தெழுந்து மந்திரத்தைச் செபித்தற்கு இம்மாலையைப் பயன்படுத்தும் வழக்கமும் சிலர் மேற்கொள்வர்.

3. திருவைந்தெழுத்து

இறைவனுக்கு எண்ணற்ற பெயர்கள் உளவாயினும் நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு என்று அவன் பெயர்களைக் கூறி வழிபடும் மரபு நம் நாட்டில் உண்டு. அதனைச் சுருக்கிப் பதினாறு பெயர்களைக் கூறுவது சோடசம் என்னும் முறையாகும். இதற்கெல்லாம் மேலாக 'ஐந்தெழுத்து' என்னும் ஒரு ஒப்பற்ற திருப்பெயரை எப்பொழுதும் ஓதும் மரபு நம் முன்னையோர் மேற்கொண்ட முறையாகும். "வேதநான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே' என்பது ஆளுடைய பிள்ளையின் அருள்வாக்கு. அம் மந்திரம் தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், அதிசூக்கும பஞ்சாக்கரம், காரண பஞ்சாக்கரம், மகாகாரண பஞ்சாக்கரம் என்றெல்லாம் பலவகைப்படும், அவரவர் குருநாதர்

எந்த பஞ்சாக்கரத்தை உபதேசிக்கின்றாரோ அதையே தினமும் செபிக்க வேண்டும். அது அவரவர் குரு மரபு ஆகும். சாதாரண மாக ''நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்பது தூல பஞ்சாக் கரமாகும். ''சிவாய நம எனப் பெற்றேன்'' என்று அருளாளர்கள் அருளியது சூக்கும பஞ்சாக்கரமாகும். இம் மந்திரத்தை உருவேற்றத் திருவேறும் என்பது குறிப்பிடத்தக்கது.

புண்ணிய கருமம்

1. ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம்,
உபசாரம், உறவு, சீலம்
வழுக்கி லாத்தவம், தானங்கள், வந்தித்தல்,
வணங்கல், வாய்மை
அழுக்கிலாத் துறவு, அடக்கம்,
அறிவொடு அர்ச்சித் தலாதி
இழுக்கிலா அறங்களானால்
இரங்குவான் பணியறங்கள் (அருணந்திசிவம்)

தெய்வ வழிபாடு

2. மனமது நினைய வாக்கு வழுத்த
மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங்கு
இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழுஞ்
செயலற மானால் யார்க்கும்
முனமொரு தெய்வ மெங்குஞ்
செயற்குமுன் நிலையாமன்றே. (அருணந்திசிவம்)

சிவனடியார் வணக்கம்

3. ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்குமன்பில்லார்
பேசுவதென் அறிவில்லாப் பிணங்களை நாம் இணங்கில்
பிறப்பினிலும் இறப்பினிலும்பிணங் கிடுவர் விடுநீ
ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு
அவர் கருமமுன் கருமமாகச் செய்து
கூசி மொழிந் தருண் ஞானக் குறியினின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.
(அருணந்திசிவம்)

சாரம் கொண்ட சைவ சித்தாந்தம்

4. முற்படு மாயை முதற்கரை நாட்டில்
பற்பல புவனப் பகுதி பற்றி
ஈரிரு கண்ணாற் றெழுதரம் வகுத்த
ஆறேழ் இரட்டி நூறா யிரத்த
செயற்படு செய்களின் உயிர்ப்பயிர் ஏற்றி
ஊழ்எனப் பட்ட தாழ்புனல் படுகரிற்
தெய்விகம் முதலாச் செப்பமும் மதகும்
ஒவ்வொரு மதகா யுடனுடன் திறந்து
தாகம் என்னும் தனிப்பெருங் காலிற்
போகம் என்னும் புதுப்புனல் கொணர்ந்து
பாயும்ஐம் பொறியாம் வாய்மடை திறந்து
பருவம் பார்த்து வரன்முறை தேக்கலும்
இத்துடன் அகிதம் எனும்இரண் டூற்றிற்
புதுப்புனல் பெருகிப் புறம்பலைத் தோட
வார்புனல் அதனை மந்திரம் முதலா
ஓராறு வகைப்படும் ஏரிக ணிரப்பி
விளைவன விளைய விளைந்தன அறுத்தாங்
கொருகளம் செய்யும் உழவன் ஆகி
மாநிலம் புரக்கும் மாசி லாமணி
ஞானசம் பந்த ஞான தேசிக
நல்லருட் டிறத்தா னம்பி நீயே
பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண் டுய்கெனக்
குடிலை என்னும் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதம் என்னும் பாதவம் வளர்த்தனை
பாதவம் அதனிற் படுபயன் பலவே-அவற்றுள்
இலைகொண்டு வந்தனர் பலரே இலைஓரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிர்ஓரீஇ
அரும்பொடு மலர்பிஞ்சு அருங்காய் என்றுஇவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரம் கொண்ட சைவசித் தாந்தத்
தேன்அமு தருந்தினர் சிலரே யானவர்

நன்னிலை பெறுதற்கு அன்னியன் ஆயினும்
அன்னவர் கமலப் பொன்னடி விளக்கி அத்
தீம்புனல் அமுதம் ஆர்ந்தனன் அதனால்
வேம்புஎனக் கொண்டனன் விண்ணவர் அமுதே.

(குமரகுருபர சுவாமிகள்)

11. சிவஞானபோதம்-தெளிவுரை

மங்கல வாழ்த்து

கல்லால் நிழல் மலைவு(வி)
இல்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

உரை :- ஆதியில் அருள்வடிவாகிய கல்லாலமர நிழலின்கண் எழுந்தருளியிருந்து, நான்கு முனிவர்க்கு மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர், மேன்மேலருள் செய்தற் பொருட்டு, சுயம்பு மூர்த்தியாகிய பிள்ளையாரது அறிவாற்றல், செயலாற்றல் என்னும் இரண்டு திருவடிகளையும் மெய்யன்பர் தலைமேற் கொள்வர்.

அவையடக்கம்

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை யெமையிகழார்—தம்மை
யுணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

உரை :- (உடைமைப் பொருளாகிய) தம்மியல்பினை உணர்ந்து தம்மை உடையானாகிய தலைவனை உணர்ந்தவர்கள், தமக்கு உடைமையாக எம்மை உடையவர்களாதலின் எம்மை அன்பாற் பாராட்டுவரேயன்றி இகழமாட்டார். தம்மை உணராதவர்கள் தலைவனையும் உணராதவர்களே. அவர்கள் ஒருங்கு சேர்ந்து தம்முள் ஒற்றுமைப் படமாட்டாராகலான், அவர்களது புறங்கூற்று மொழியை யாம் பொருளாகக் கொள்ளோம்.

சூத்திரம் 1 :

அவன் அவள் அது எனும் அவை, மூவினைமையின்
தோற்றிய திதியே, ஒடுங்கி மலத்து உளதாம்,
அந்தம் ஆதி; என்மனார் புலவர்,

இவ்வுலகம் பல பொருள்கள் சேர்ந்த ஒரு சடப் பொருள். அவன், அவள், அது என்று பிரிக்கப்படும் பகுப்பை உடையது. தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் எனப்படும் மூன்று நிலைகளுக்கு உட்படும் இவ் வுலகம் சடப் பொருளாதலால், இதை இத்தகைய நிலைகளுக்கு உட்படுத்துவது இறைவனே ஆகும். உயிர்களிடத்தில் உள்ள ஆணவ மலத்தை நீக்கும் பொருட்டே இறைவன், இவ் வுலகத்தைத் தோற்றுவித்தும் நிலைபெறச் செய்தும் ஒடுக்கியும் ஆகிய முத்தொழிலைச் செய்கிறான். இவ்வாறு உலகைத் தொழிற்படுத்தும் இறைவன் சிவபெருமானே. இதுவே அறிஞர் முடிவு.

சூத்திரம் 2 ;

அவையே தானே ஆய், இருவினையின்
போக்கு வரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

உயிர்கள், தத்தம் நல்வினை தீவினை ஆகிய இருவினைகளின் காரணமாகவே, இறந்தும் பிறந்தும் உள்ளன. உயிர்களுக்கு இறத்தலையும் பிறத்தலையும் இறைவன் தன் ஆற்றல் எனப்படும் 'சக்தி'யின் வாயிலாகச் செய்கிறான். இறைவனது ஆற்றல் அவனை விட்டு என்றும் பிரிவதில்லை. (இறைவனுக்கும் உயிர் களுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது என்பதை இச் சூத்திரம் தெளிவு படுத்துகின்றது) உயிர்களும், உலகங்களும் என்றும் நிலை பெறும் பொருட்டு, இறைவ்ன் அவற்றோடு ஒன்றாய் இருக் கிறான். உயிர்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டும் உலகங்களை இயக்கும் பொருட்டும் அவற்றினின்று வேறாய் இருக்கிறான் உயிர்கள் வினை ஆற்றும் பொருட்டும் உலகங்கள் இயங்கும் பொருட்டும் அவற்றுடன் உடனாய் இருக்கிறான். இறைவன் இம் மூவகை நிலைகளிலும் அது அதுவாய் நிற்பதால் இறைவனின் முழு வியாபகம் (Absoluteness) தெளியலாயிற்று.

சூத்திரம் 3 :

உளது இலது என்றலின், எனது உடல் என்றலின்
ஐம்புலன், ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டி வினை இன்மையின், உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

உயிர் என்பது ஒரு தனிப் பொருள். இதை மெய்ப்படுத்துவது இச் சூத்திரம். உயிர் என்ற தனிப் பொருள் ஒன்று இல்லை என்ப தால், உயிர் உண்டு என்பது பெறப்படும். 'என் உடல்' என்று கூறுவதால், உடல் உயிரன்று. உடல் வேறு உயிர் வேறு என்ப

தால், உடலில் உள்ள ஐம்பொருள்களால் உணரப்படும் ஐந்து புலன்கள் உயிர் ஆகா. உறக்கத்தின் போது உணவு கொள்ளுதலோ வேறு செயல்கள் புரிவதோ இல்லை. எனவே உறங்கும்போது உள்ள பிராண வாயு உயிர் அன்று. இறைவன் எல்லாம் அறிந்த வன்: உயிர் அறிவித்தால் அன்றி அறியாத இயல்பு உடையது. எனவே கடவுள் உயிரன்று. ஆக, மாயையிலிருந்து வந்த இந்த உடலில் உள்ள உயிர் ஒரு தனிப்பொருள்.

சூத்திரம் 4 :

அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று; அவை
சந்தித்தது ஆன்மா. சகசமலத்து உணராது;
அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று அஞ்சு அவத்தைத்தே.

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய இவற்றில் ஒன்று அன்று உயிர். உயிரின் அறிவை மறைப்பது ஆணவமலமே. உயிர் அந்தக்கரணங்களுடன் கூடியே அறியும் இயல்பு உடையது. அரசனுக்கு, அமைச்சர்கள் அமைந்து இருப்பதுபோல், அந்தக் கரணங்கள் உயிர்க்குத் துணையாக நின்று உதவுகின்றன. உயிர் ஐந்து நிலைகளில் நின்று அறியும்; அவை நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்பு அடக்கம் எனப்படும். எனவே, உயிர்கள் தாமே எதையும் அறியும் இயல்புடையன அல்ல.

சூத்திரம் 5 :

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்து அறிந்து அறியா; ஆங்கு அவை போலத்
தாம்தம் உணர்வின் தமி அருள்
காந்தம் கண்ட பசாசத்து அவையே.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து அறி கருவிகள், தாமே எதையும் அறியும் இயல்புடையன அல்ல; அவை தம்மை அறியா, தம்மைச் செலுத்தும் உயிரையும் அறியா. அவை உயிரி னாலேயே செலுத்தப்படுகின்றன. அவ்வாறே உயிர்களும் தம்மைத் தாமே அறியா; தம்மைச் செலுத்தும் இறைவனையும் அறியா. உயிர்கள் செயல்படுவது எதுபோல எனின், காந்தத்தின் முன்பு செயல்படும் இரும்பைப் போன்றது அது. இரும்பின் செயற் பாடுகளால் காந்தம் எந்தவித மாற்றமும் அடைவதில்லை. அவ்வாறே உயிர்களின் பலவகைச் செயற்பாடுகளால் இறைவன் எத்தகைய மாற்றமும் பெறுவதில்லை.

சூத்திரம் 6 :

உணர் உரு அசத்துஎனின், உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்து ஆம்; என
இரண்டு வகையின் இசைக்கும் மன் உலகே.

சுட்டி அறியப்படும் பொருள் எதுவாயினும் அது நிலையற்ற பொருள் ஆகும். ஒரு வகையிலும் அறியப்படாத பொருள், உள் பொருள் ஆகாது; அது இல்பொருளே ஆகும். ஆக, இறைவன் எப்படி அறியப்படுவன்? இறைவன் சுட்டி அறியப்படுபவனும் அல்லன்; எந்த வகையிலும் அறியப்படாதவனும் அல்லன், இறைவன் தன் ஆற்றலால், உயிர்களுக்குத் தன்னை அறியும்படிச் செய்பவன். அவனது ஆற்றலின் உதவியின்றி உயிர்கள் அவனை அறிய இயலாது- 'சிவம்' என்ற சொல்லைக் கொண்டு அவனை அறிய முடியாது; எந்த மாறுபாடும் அற்றவன் என்ற பொருளைத் தரும் 'சத்து' என்னும் சொல் அவனை அறிய உதவும். இவ்வாறு இரண்டு வகையில் கூறப்படுவதால், இறைவன் 'சிவசத்து' எனப் படுகிறான்.

சூத்திரம் 7 :

யாவையும் சூனியம் சத்து எதிர் ஆகலின்
சத்தே அறியாது, அசத்து இலது; அறியாது,
இருதிறன் அறிவு உளது; இரண்டு அலா ஆன்மா.

இறைவன், சத்து எனப்படுகிறான். அவன் அனைத்துப் பொருள்களையும் தன்னுள் அடக்கிப் பரம் பொருளாக நிற்கிறான். எனவே, எந்தப் பொருளும் அவனால் சுட்டி அறியப்பட வேண்டிய அவசியம் இல்லை.

அறிவற்ற சடப் பொருள் எதையும் அறிவதில்லை. எதையும் அறியும் அறிவு சடப்பொருளுக்கு இல்லை.

ஆனால், உயிர் அறிவற்ற சடப் பொருளையும் அறியும் இயல்புடையது. பேரறிவுப் பொருளாகிய இறைவனையும் அறியும் இயல்பு உடையது. சார்ந்த பொருளின் தன்மை உயிருக்கு ஏற்படுவதால், எந்தப் பொருளைச் சார்ந்து உயிர் நிற்கிறதோ, அந்த அந்தப் பொருள்களை உயிர் அறியும். இவ்விருவகை அறியும் இயல்பை உடையது உயிர் என்பதே இச் சூத்திரப் பொருள் ஆகும்.

சூத்திரம் 8 :

'ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து' எனத்
தம்முதல், குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு,
அன்னியம் இன்மையின், அரன்கழல் செலுமே.

வேடர்களுடன் வளர்ந்த தன் மகனை அரசன் கண்டு, அவர்களுடன் இருந்து இருந்து நீ மிகவும் அயர்வு அடைந்து விட்டாய். எனவே உனக்கு உரிய அரசு இருக்கைக்கு வா, என்று அழைத்ததும், அந்த அரச குமரன், வேடர்களை விட்டு நீங்கித் தனக்கே உரிமை உடைய அரசு இருக்கையைப் பெறுகிறான். இந்தக் கதையில் வரும் வேடர்கள், நமது ஐம்புலன்கள்; அரச குமரன் உயிர்; அரசன், இறைவன், பல்வேறு பிறப்புக்களில் பிறந்து பிறந்து இனிப் பிறப்பே வேண்டாம் என்று அயர்வுற்று இருக்கும் உயிர்களுக்கு, இறைவன் குரு வடிவில் வந்து, உண்மையை உணர்த்தி அருள்வான். அவன் அருளால், 'இறைவன் தன் தந்தை' என்ற உணர்வோடு வேறுபாடு அற்ற தன்மையில் இறைவனின் திருவடிப்பேற்றை உயிர்கள் பெறும்.

சூத்திரம் 9 :

ஊனக்கண் பாசம் உணராப், பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி,
உராத்துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண்ணிழல் ஆம்பதி; விதிஎண்ணும் அஞ்சு எழுத்தே.

உலகப் பொருள்களில் அழுந்திக் கிடக்கும் உயிர், பாச ஞானம் உடையது; பாச ஞானத்தின் அனுபவத்தில் அழுந்திக் கிடக்கும் உயிர், பசு, ஞானம் உடையது. இவ்விரு ஞானங்களும் தமக்கு உரியன அல்ல என்று அவற்றை விட்டு நீங்கும் உயிர், தனக்கே உரிய பதியை (இறைவனை) நினைந்து நினைந்து உருகும்; அவ்வாறு உருகும் உயிர்கட்கு இவ் வுலகம் கானல் நீராகத் தோன்றும்; தோன்றவே, நிலையற்றது எனக் கருதி அதை விட்டு முழுக்க முழுக்க நீங்க முயலும். முயலவே பாச ஞானமும் பசுஞானமும் விரைந்து மறையும். அந் நிலையில் இறைவன் அவ்வுயிர் முன்பு வெளிப்படுவான். இறைவனின் ஞான வடிவைக் காணும் தகுதியை அவ்வுயிர் பெறும். அக் காட்சியில் உறைத்து நிற்கும் பொருட்டு, உயிர் இடைவிடாமல், திரு ஐந்தெழுத்தை எண்ணிய வண்ணம் இருக்கவேண்டும்.

சூத்திரம் 10 :

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க,
மலம் மாயை தன்னொடு வல்வினை இன்றே.

சிவஞானம் கைவரப் பெற்ற உயிர், சிவன் வேறு, தான் வேறு என்று விளங்கப் பெறாமல் சிவமேயாய் நிற்கவேண்டும். இவ்வாறு நிற்பது, இறைவன் உயிர் வேறுதான், வேறு

என்று வேறுபாடு அற்ற நிலையில் நிற்பதைப் போன்றது. அவ்வாறு சிவத்தோடு ஒன்றித்து நிற்பதோடு சிவப் பணியும் செய்ய வேண்டும். சிவப் பணியில் நிற்கும் உயிர்கள் பணிவுடையனவாகும். எனவே ஆணவமலம் அத்தகைய உயிர்களைத் தாக்காது; தன் முனைப்பும் அடங்கும். அதனால், தன் உடலால் செய்யும் செயல்கள் சிவச்செயலாக மாறுகின்றன. இது மாயா மல நீக்கத்தைச் செய்கிறது. இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன்; எனவே சிவச்செயலாக மாறும் உயிரின் செயல்பாடுகளிலும் விருப்பு வெறுப்பு ஏற்படாது. அதனால் கன்ம மலமும் உயிரைத் தாக்குவதில்லை. மும்மல நீக்கமும் ஏற்படுகிறது.

சூத்திரம் 11 :

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்,
அயரா அன்பின் அரன் கழல் செலுமே.

எந்த ஒரு பொருளையும் காண்பதற்குக் கண்ணுக்கு உயிர் உதவி செய்து ஆக வேண்டும். அவ்வாறே, எந்த ஒரு பொருளையும் அறிவதற்கு உயிருக்குஇறைவன் உதவி செய்து ஆகவேண்டும்.

உயிர், கண்ணுக்குப் பொருளைக் காட்டுவதோடு, தானும் காண்கிறது. அவ்வாறே இறைவன் உயிருக்கு அறிவுறுத்துவதோடு, தானும் உயிருடன் சேர்ந்து அறியும் உதவியைச் செய்கிறான். இதனையே இறைவனின் 'காணும் உபகாரம்' என்பர்.

உயிர்க்கு அறிவித்து உதவும் இறைவனின் உதவியைக் 'காட்டும் உபகாரம்' என்பர். இறைவனின் இவ்விரு உதவிகளையும் மறவாமல், நன்றி உணர்வோடு, உயிர் இறைவனிடம் அன்பு செலுத்த வேண்டும். அத்தகைய அன்பில் உறைத்து நிற்கும் உயிர், வீடுபேறு அடையும்.

சூத்திரம் 12 :

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர்வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.

திருவடிப் பேற்றைப் பெறும் தகுதியை உடைய சிவன் முத்தர்கள் சிவ ஆலயத்தையும் சிவனடியார்கள் வேடத்தையும் 'சிவம்' எனக் கொண்டு வழிபாடு செய்வர். வாசனா மலம் அவர்களைத் தாக்காமல் இருக்கும் பொருட்டு சிவனடியார்களுடன் உடன் உறையும் விருப்பை மேற்கொள்வர். அவர்கள் எப்போதும் அடியார் குழாத்துடனேயே இருப்பர்.

III. பொதுப் பகுதி

1. திருக்கோயில் அமைப்பும் தத்துவமும்

சைவ சமய அன்பர்களுக்கு ஆலய வழிபாடு இன்றியமை யாதது. திருக்கோயில் அமைப்பு முறை நம் உடலமைப்புப் போன்றதாகும். திருவாயில் வாய் போன்றது. ஆகவே திருவாசல் வழியாகத் திருக்கோயிலினுள் மிகவும் பயபக்தியுடன் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும்போது வெளி நினைவு களுடன் செல்லக் கூடாது. இறைவனைப் பற்றிய நினைவாகவே செல்ல வேண்டும். திருக்கோயிலினுள் சென்றதும் முதலில் பார்ப்பது பலிபீடமாகும். அடுத்து கொடி மரம் இருக்க வேண்டும். பெருமானைத் தரிசிக்க உட்புகுமுன் துவாரபாலகரை வணங்கிப் பின் நந்தியெம் பெருமான் விடைபெற்றே செல்ல வேண்டுமாதலின் நந்தியை வணங்கி உட்புகவேண்டும்.

திருக்கோயில் முகப்பில் வலப்புறத்தில் விநாயகரும் இடப் புறத்தில் முருகரும் அமைந்திருப்பது மரபு. சில தலங்களில் அவ்வத் தலச் சிறப்புக்கேற்றவாறு இடப்புற அமைப்பு மாறு பட்டிருந்தாலும் இருக்கும், வலப்புறத்தில் விநாயகர் அவசியம் இருப்பார். எச்செயலைச் செய்ய முற்படினும் விநாயகர் வணக்கம் இன்றியமையாதது என்பதை வற்புறுத்தவே முதலில் விநாயகரை நியமித்துள்ளனர். அவரை வணங்கியபின் திருமூலட்டானம் செல்லவேண்டும். அதனையே கருவறை, மூலத் தானம் என்றெல்லாம் வழங்குவர். அங்குதான் சிவலிங்கத் திருமேனி இருக்கும். அவரே முழுமுதற் கடவுள். அவரை வழிபட்டு பன்னிரு திருமுறையோ பஞ்ச புராணமோ பாடி உருக வேண்டும். பின் இறைவனை வணங்கித் திருநீறு பெற்று நிறையப் பூசி மகிழ வேண்டும். பின் வலம் வரவேண்டும். தெற்குப் பாகத்தில் தென்முகக் கடவுளை வழிபட வேண்டும். தென்மேற்கு மூலையில் விநாயகர் இருப்பார், அவரை வணங்கிய பின் அதற்கடுத்தாற்போல் பெரும்பாலும் பல கோயில்களில் எழுந்தருளும் மூர்த்திகளை வைத்திருப்பர். அவற்றை வணங்கிய பின் மூலத்தானத்திற்கு நேர் பின்புறம் முருகர், திருமால் முதலிய மூர்த்திகளில் யாராவது இடம் பெறுவர். பின்புறம் திருமால் இருந்தால் வடமேற்கு மூலையில் முருகர் இருப்பார். சில கோயில்களில் பின்புறம் முருகரும் வடமேற்கு மூலையில்

கஜலக்ஷ்மியும் இடம் பெறுவர். நடராசா உருவம் ஆடிய நிலையில் தெற்கு நோக்கி ஒவ்வொரு திருக்கோயிலிலும் காணப் பெறும். அங்கு அச்சந்நதி உண்டு. அத்திரு உருவ அமைப்பு சைவ சமயத் தத்துவ அமைப்புக்களைத் தாங்கி நிற்பது. நடராச உருவ அமைப்புகளின் சிறப்பை ''உண்மை விளக்கம்'' போன்றுள்ள சாத்திர நூல்களில் காணலாம்

அம்மன் திருக்கோயில் பெரும்பாலும் தெற்கு நோக்கியே இருக்கும். சில கோயில்களில் மூலத்தானத்தை அடுத்து இடப் பக்கமாகத் தனிக் கோயிலாகக் காட்சி அளிக்கும். அப்பால் வடக்கே துர்க்கையை வழிபட்டு சண்டிகேசரை வணங்கவேண்டும். சண்டிகேசரை வணங்கும்போது கையை மெதுவாகத் தட்ட வேண்டுமே யொழிய உரக்கத் தட்டக்கூடாது. அவர் நிட்டையி லிருப்பவராதலின் தன் வரவைக் குறித்துக் கொள்வதற்காக மூன்று முறை கைகொட்டித் தட்ட வேண்டும் என்று ஆன்றோர் கூறுவர். நூல் போடுதல் முதலிய செயல்கள் யாவும் சண்டிகேசர் சந்நதியில் செய்யக் கூடாது. அப்பால் வயிரவர் சந்நதியிருந்தால் அவரை வணங்கி விடைபெற்றுச் செல்ல வேண்டும். வயிரவர் திருக்கோயில் காவல் தெய்வமாகும்.

இடப தேவருடைய கொம்பின் நடுவாகச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து நந்தியெம் பெருமான் பின் பலிபீடத் திற்கு அப்பால் அட்டாங்க வணக்கம் ஆணும், பஞ்சாங்க வணக்கம் பெண்ணும் செய்ய வேண்டும். அப்பால் அங்கேயே அமர்ந்து ஐந்து மணித்துளிக்குக் குறையாமல் ஐந்தெழுத்து மந்திரத்தை மனத்துக்குள் செபிக்க வேண்டும். பின்னரே வெளி யில் செல்ல வேண்டும். திருக்கோயிலுக்குள் சென்றதிலிருந்து வெளிவரும்வரை இறைவனைத் தவிர வேறு யாரையும் கைகூப்பக் கூடாது. கீழே விழுந்து நந்தியின் பின் பலிபீடத்திற்கு அப்பால் தவிர வேறு எங்கும் கீழே விழுந்து வழிபடக் கூடாது. இறைவன் சம்பந்தமற்ற வேறு பேச்சுக்களைப் பேசக் கூடாது. இவ்வாறு திருக்கோயிலை வழிபட்டு வரவேண்டும். திருக்கோயில் கோபுரம் தூலலிங்கம் எனப்படும். ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்பது ஆன்றோர் அமுதவாக்கு. ஆதலின் கண்ணுக்குத் தெரிந்ததுமே கோபுரத்தை நன்கு வணங்க வேண்டும்.

இன்னும் அறுபத்து மூவர், நால்வர் சந்நதி முதலியவை பெரிய கோயில்களில் இடம் பெறும். இவ்வுருவங்களுக்கெல்லாம்

பரிவார தேவதைகள் எனப் பெயர் கூறுவர். இறைவன் ஒருவனே யாயினும் அவன் அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு பல்வேறு உருவங்களில் மக்களை வசியப்படுத்தி ஆட்கொள்கின்றான். ஆதலின் எவ்வுருவை வழிபடினும் அவ்வழிபாட்டின் பயன் ஒன்றே என்பதில் வேறுபாடில்லை.

இறைவன் ஊர் பேர் அற்றவன். குணங்குறியும் உருவமும் அற்றவன். ஆயின் ஆன்மாக்களிடம் பூண்ட அன்பினால் திருவுரு வங்களில் உருவாகிக் காட்சி அளித்தருளுகின்றான்.

சிவாகம விதிப்படி கோயில் அமைக்கப்பட்டு மகா கும்பாபி டேகத்தினால் தெய்வப் பிரதிட்டை செய்யப்பட்டு தினந்தோறும் நைமித்தியக் கிரியைகள் செய்யப்பட்டு வருகின்ற ஆலயங்களில் வேதபாடம் செய்து வைக்கப்பட்டுள்ள யந்திரங்களெல்லாம் அருட் கருவிகளாம் (ஆலய திருவுருவங்களுக்கு அடியில் வைக்கப் பட்டிருப்பது). ஆலயங்களில் இந்த யந்திரமே உயிர் நாடியாக உள்ளது. அதுவே பூசைக்கு இன்றியமையாதது. அதன் மேலுள்ள திருவுருவம் (விக்கிரகம்) அருவப் பொருளை அறிய மாட்டாத மனத்தின் கவர்ச்சிக்காகவும், மக்கள் மனத்தை ஒரு முனைப் படுத்துவதற்காகவுமே உதவுவது. அன்றியும் இந்த யந்திரங்கள் அறிகுறியாகக் காட்டும் உண்மையும் ஒன்றுள்ளது. யந்திரம் முதலில் வரையப்படும்போது அது ஒரு உலோகத் துண்டாய்—வெறும் சடப் பொருளாகவே இருக்கும். பின் மந்திரம், முத்திரை, பாவனைகளாலும், உரிய கிரியைகளாலும், அது பாடம் பண்ணப்படும்போது, இரும்புத் துண்டு காந்தமாவது போல, அச்சடப் பொருள் சிறிது சிறிதாக அருட் கருவியாதற் குரிய பக்குவம் பெற்றுக்கொண்டு வரும். இது சித்பிரகாச ஆவாகனம் எனப்படும். முடிவில் இத்தகட்டில் பூரண உருவேறி யந்திரத்தாபனமும், பிராணப் பிரதிட்டையும் செய்யப்படும் போது, அது முழுவதும் இறைவனது அருட்கருவியாக மாறிக் கோடி சூரியப் பிரகாசம் பொருந்திய அநுக்கிரக சக்தியை நாற் புறமும இரவும், பகலும், இடைவிடாது வீசிக்கொண்டே இருக்கும் என ஞானநூல் வல்லோர் கூறுவர்.

ஆலயங்களில் நடைபெறும் நித்திய ஆராதனைகளால் உண்டாகும பயன்களில் ஒன்று, அங்ஙனம், செலவாகும் சக்திக்கு ஈடுகொடுத்து அருளாற்றலை நிறைவு செய்தலாகும். ஆராதனை இல்லாத யந்திரங்கள் நாளாவட்டத்தில் சக்தி இழந்து விடும். இதனால் மூர்த்திகரமும் இறங்கிவிடும் என்பது தெளிவாகும்.

ஆகம விதிகளின்படி அபிடேகங்கள் நடைபெறும் கோயில் களில் அங்கு பிரதிட்டை கும்பாபிடேகங்களின் போது பிம்பத் திலும், அதன் யந்திரத்திலும் சேமித்து வைக்கப்பட்டுள்ள தெய்வீக சக்திகளும் வசீகர அருள் அலைகளும், திருமஞ்சனத் திரவியங்களில் தோய்ந்துள்ள சக்திகளால் வீரியம் பெறுகின்றன.

சிவ மூர்த்தங்கள்

ஆகம புராணங்களில் கூறப்படுவது இருபத்தைந்து சிவ மூர்த்தங்கள். இவைகளுள் சிறப்பான மூர்த்தங்கள் வருமாறு :

நடராசர் : படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் ஆகிய ஐந்து தொழில்களையுஞ் செய்யுங்கடவுள் அம்பல வாணர் திரு உருவமாகும். இத்திரு உருவ தத்துவ விளக்கத்தை ''உண்மை விளக்கம்'' எனும் சாத்திர நூலில் காணலாம்.

உமாதேவி : சிவபெருமானுடைய அருட்சக்தி என்று கூறப் படும் ஐந்தொழில் நிகழ்ச்சிகளுக்குத் துணையாக உள்ள சிவசக்தி திருஉருவம். உமையம்மை, அங்கயற்கண்ணி, மீனாட்சி காமாட்சி, விசாலாட்சி, இராசராசேசுவரி, புவனேசுவரி முதலிய பெயர்களுடன் காட்சி அளிப்பவள். இத்தகைய அம்மை வடிவங் களை வழிபடும் அன்பர்களுக்கெல்லாம் அருள் கொடுப்பவரும் உமாமகேசுவரராகிய சிவபெருமானே ஆவர். ''உடையாள் நடுவுள் நீயிருத்தி'' என்ற திருவாசக அடியை ஆராயின் இதன் உண்மை தெளிவாகும்.

சந்திரசேகரர் : உமாதேவியாரை இடப்பாகத்தே கொண்ட போக வடிவம்; சடையில் ஒற்றைப் பிறை விளங்கும்.

சோமாஸ்கந்தர் : சர்வ லோகங்களையும் தேராயமைத்து ஆரோகணித்து முப்புரங்களையும் எரிக்கப் புறப்பட்ட கோலம் தேர்த் திருவிழாவுக்கு இத்திருவுருவ மூர்த்தியை எழுந்தருளச் செய் கின்றனர்.

தட்சணா மூர்த்தி : குரு வடிவம். சனகர், சனந்தனர், சனாதனர் சனற்குமாரர் எனும் பிரம புத்திரர்களாகிய சீடர்களுக் கும், ஏனைய பக்குவ ஆன்மாக்களுக்கும் கல்லால மரத்தின் கீழ் ஞானகுருவாய் அமர்ந்து ஞானோபதேசம் செய்யும் திருஉருவம்.

பிட்சாடனர் : ஆன்மாக்கள் செய்யும் செப, தப அருட்டா னங்களை ஏற்கும் திருவடிவம்.

பொது : திருக்கோயிலில் விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்ரமணியர் என்னும் நான்கு சிவகுமாரர்களின் திரு உருவங்கள் உள. இந்நால்வரும் அடியார்கள் ஈடேறும் பொருட்டு இறைவன் கொண்ட கோலங்களாகும். முன்னர் கூறப்பட்ட இருபத்தைந்து மகேசுவர வடிவங்களும், சிவ குமாரர்கள் நால்வரும் இறைவன் சுத்த மாயா தத்துவத்திற் கொண்ட வடிவங்களே. இறைவன் ஒருவரே அடியார் வேண்டுகோளுக்கேற்பப் பல கோலங்களோடு நின்று அருள் செய்பவர். தோற்றம் வேறுபடினும் உள் நிற்பது ஒன்றே.

விநாயகர் : ஓங்காரத்தின் (பிரணவத்தின்) உண்மைப் பொருளை அறிவிக்கும் சிவத்தின் வடிவமே பிள்ளையார். எண்ணிய பொருளெல்லாம் எளிதில் கை கூட, எக்கருமமும் இடையூறு இன்றி இனிது முடிதற்பொருட்டு விநாயகரை வணங்க வேண்டும்.

வைரவக் கடவுள் : சங்கார ருத்திரர் எனப்படுவர். சகல தத்துவ சம்பந்தங்களையும் சங்கரித்து ஆன்மாக்களை ஈடேற்றுங் கோலமே இவரது வடிவம். சிவத்தினின்றும் தோன்றிய காரணத்தால் இவர் சிவகுமாரர் எனப்படுவர். ஆயினும் சிவத்தின் வேறாகாத சக்தி வடிவமே அவர் ஆவர். இவரது வாகனம் வேதவடிவாகிய நாய் ஆகும். அவரை வணங்கும்போது "எங்களுடைய அகந்தையை நீக்கிக் காத்தருளும்" என்று வேண்டுதல் செய்கிறோம்.

முருகன் : "தமிழ்க் கடவுள், குறிஞ்சிக் கிழவன், மலைக் கிழவோன், அழகுத் தெய்வம், என்றும் இளையோன்" எனப் புகழப்படுபவன், கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டு உருவெடுத்த முருகக் கடவுள். முருகனின் தேவியர் தெய்வானை, வள்ளி எனப்படுவர். தெய்வானை கிரியா சக்தியையும், வள்ளி இச்சா சக்தியையும் குறிப்பன. மயில் ஆகிய வாகனம் ஆணவத்தையும், கொடியாகிய கோழி சிவ ஞானத்தையும் குறிப்பன.

சூரியன் இடபராசியில் வரும் வைகாசி விசாக நட்சத்திர நாள் முருகனுக்கு உகந்த நாள். முருகப் பெருமானைச் சைவ சமயத்தவர்கள் சற்குரு பாவனையில் வணங்குவர். முருகனையே வழிபடு தெய்வமாகக் கொள்வோர் "கௌமாரர்" எனப் படுவர்.

பள்ளியறை : காலையில் பள்ளியறைத் திறப்பு—சிவமும் சக்தியும் பிரிந்து தொழிற் படுவதால் உண்டாகும் தோற்றத்தை யும், இரவு பள்ளியறை மூடுதல்—சக்தியானது சிவத்தில் ஒடுங்கும் போது ஏற்படும் லயத்தையும் குறிப்பிடுவன.

கருவறை (கர்ப்பக்கிரகம்): ஆலயத்தின் மையப் பகுதி கருவறை. நம் இதயத்தில் இறைவன் இருப்பதற்குரிய அடையாள மாக இது கருதப்படுகிறது.

பலிபீடம் : இது பாசத்தைக் குறிக்கின்றது. இதை ஸ்ரீபலி நாதர் என்பர். ஆலயத்துள் எட்டு மூலைகளில் எட்டு பலிபீடங்கள் அமைந்திருக்கும். இவை எட்டுத் திக்குப் பாலர்களை உணர்த்து கின்றன. இவைகளுக்கெல்லாம் தலைமைப் பீடமாக உள்ளது நந்தியெம்பெருமானின் பின்பு உள்ள பலிபீடமாகும். நம் வெளி எண்ணங்களை எல்லாம் அப்பலி பீடத்திலேயே விட்டுவிட்டு இறை எண்ணத்தோடு செல்லவே பலிபீடம் அமைக்கப் பெற்றிருக் கிறது.

கொடிமரம் : அசுரர்களை அகற்றவும், சிவகணங்களையும் தேவர்களையும் பாதுகாக்கவும் கொடிமரம் நிறுவப்பட்டிருக் கின்றது. இறைவனின் ஏற்றுக் கொடியை விழாக் காலங்களில் உயர்த்துவதற்காகக் கொடிமரம் உள்ளது.

நந்தியம்பெருமான் : தற்காப்பிற்காக நந்தியெம்பெருமான் திருஉருவம் அமைக்கப் பெற்றிருக்கிறது.

மண்டபங்களின் தத்துவம் :

(1) கர்ப்பக்கிரகம்—மூலாதாரம்
(2) அர்த்தமண்டபம்—சுவாதிட்டானம்
(3) மகாமண்டபம்—மணிபூரகம்
(4) ஸ்நான மண்டபம்—அனாகதம்
(5) அலங்கார மண்டபம்—விசுத்தி
(6) சபா மண்டபம்—ஆக்ஞை

என்பவற்றை உணர்த்துகின்றன.

தலமரம் (ஸ்தலவிருட்சம்) : பண்டை நாளில் ஆகம விதிப்படி கட்டப்பட்ட கோயில்கள் எல்லாம் தீர்த்தவிசேடம், தலவிசேடம் கொண்ட, அற்புதம் நிகழ்ந்த இடத்திலும், அருளாளர் சித்தி பெற்ற இடத்திலும் கட்டப்பட்டன. மகான்கள் தவம்செய்து - இறையருள் பெற்ற இடம், இறைவன் காட்சி தந்த இடமாக

இருக்கும். மகான்கள் மரங்களின் அடியில்தான் தவம், தியானம் செய்தனர். அந்தந்தத் தலத்தில் எவ்வெம் மரத்தின் கீழிருந்து தவம், தியானம் செய்து சித்தி பெற்றார்களோ, அந்த மரங்கள் அந்தந்தத் தலங்களுக்குரிய தலமரங்களாகப் போற்றப்பட்டு வழி படப்படுகின்றன.

திருக்குளம் : தலப்பெருமைக்கேற்ப திருக்குளம் அமையும். உற்சவ காலங்களில் இறைவன் திருஉருவம் தீர்த்தம் ஆடுவ தற்கும், பக்தர்கள் புனித நீராடுவதற்கும் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டில் ஒருமுறை தெப்போற்சவம் நடைபெறும்.

சிவாலயங்களில் செய்யத்தக்கன :

(1) நீராடித் தூய ஆடை உடுத்தித் திருநீறு அணிந்து உருத் திராக்கமும் பூண்டு செல்லவேண்டும்.

(2) மலர், தேங்காய், பழம், கற்பூரம், விளக்குக்கு எண் ணெய் முதலியன எடுத்துச் செல்லவேண்டும்.

(3) கோபுரத்தைக் கண்டவுடன் இருகை கூப்பி வணங்க வேண்டும்.

(4) ஐந்தெழுத்தை மனத்தில் செபித்தவாறே செல்ல வேண்டும்.

(5) தல விநாயகரைத் தரிசித்து, குட்டிக் கொண்டு தோப்புக் கரணம் போட்டுக்கொண்டு உட்செல்ல வேண்டும்.

(5) பலிபீடம். நந்தி ஆகியவற்றை வணங்கிச் செல்லவேண்டும்

(7) உள்ளே மூலமூர்த்தியை வணங்கியபின் சுற்றிலுமுள்ள மூர்த்திகளையும் வணங்க வேண்டும்.

(8) சண்டேசுவரரை, மெதுவாக இருகையால் மும்முறை தட்டி வணங்க வேண்டும்.

(9) திருநீற்றினை இருகைகளாலும் பணிவுடன் பெற்றுக்கொண்டு கீழே சிந்தாது பக்தியுடன் அணிந்துகொள்ள வேண்டும்.

(10) ஆலயப் பிரகாரத்தை மும்முறை வலம் வர வேண்டும்.

(11) அந்தந்த சந்நதி முன், திருஉருவங்களுக்கேற்பத் திருமுறைப் பாடல்களையும், துதிப் பாடல்களையும் வாயாரப் பாடிப் பரவ வேண்டும்.

(12) வெளியே வந்து கொடி மரத்தின் கீழ் வீழ்ந்து வணங்க வேண்டும். (கோயில் உள்ளே எச்சந்நதியிலும் தரையில் வீழ்ந்து வணங்கவே கூடாது)

(13) கொடிமரத்தின் கீழ் சிறிதுநேரம் அமர்ந்து ஐந்தெழுத்து மந்திரத்தைச் செபிக்க வேண்டும்.

(14) பின் அங்கிருந்து புறப்பட்டுச் சிவசிந்தனையோடு செல்ல வேண்டும்.

சிவாலயங்களில் செய்யத் தகாதன ;

(1) தூய்மையின்றிச் செல்லக்கூடாது.

(2) ஆலயத்துள் மிதியடியுடன் செல்லக் கூடாது.

(3) சமய சின்னங்களின்றிச் செல்லக் கூடாது.

(4) வீண் பேச்சு பேசக் கூடாது.

(5) சண்டையிடக் கூடாது.

(6) பக்தர்கள் கூட்டத்தில் இடித்து நெருக்குதல் கூடாது.

(7) எச்சில் துப்பக் கூடாது,

(8) இறைவனுக்குச் சாத்தப்பட்ட மலர், வில்வம், திருநீறு ஆகியவற்றை மிதிக்கக் கூடாது.

(9) கோயில் விக்ரகங்களைத் தொடக் கூடாது.

(10) பலிபீடம், நந்தி இவற்றின் குறுக்கே செல்லக் கூடாது.

(11) சண்டேசுவரர் சந்நதியில் நூல் போடக் கூடாது.

(13) தகாதன அனைத்தும் செய்யக் கூடாது.

2. சிவ தீக்கை

அறிவு மேம்பாட்டிற்கு ஆசானை அடுத்துப் பயிற்சி பெற வேண்டும். இது உலகியலுக்கு மாத்திரமன்று; ஆன்மிக நெறிக்கும் இது மிகவும் வேண்டத்தக்கதொன்றாகும். ஐந்தெழுத்து மந்திரத்தைத் தக்க ஆசான் மூலம் தீக்கை முறையில் பெறுவது சாலச் சிறந்தது.

தீக்கை என்பது சாமானியம், விசேடம். நிர்வாணம் என மூவகைப்படும். குருமுகமாக உபதேசம் பெறுவது சாமானியம் எனப்பெறும். மேலும் ஒரு இலிங்கத் திருமேனியை வழிபட ஆத்மார்த்த வழிபாட்டைக் கற்பித்துப் பஞ்சாக்கரத்தை உப

தேசிப்பது விசேட தீக்கையாகும். ஞானமார்க்கத்திலீடுபடுத்த மாணவனை ஆசிரியர் (குரு) நெறிப்படுத்துவது நிர்வாண தீக்கை யாகும். இன்னும் நயன தீக்கை, பரிச தீக்கை, மானச தீக்கை, சாத்திர தீக்கை, மந்திர தீக்கை, யோக தீக்கை, ஔத்திரி தீக்கை என்றெல்லாம் பலவகையாகக் கூறுவர். குருநாதர் மாணவரின் பக்குவ நிலையறிந்து மேற்கூறிய தீக்கைகளில் ஒரு முறையைப் பின் பற்றி மாணவன் கடைத்தேற ஆவன செய்வார். தீக்கை முறை சமயத் துறையில் உயிர் ஈடேற ஒரு முக்கிய முறையாகும். அதை யாவரும் மேற்கொள்ள வேண்டும்.

3. குருலிங்க சங்கம வழிபாடு

குருவழிபாடு :-மன, மொழி, மெய்களால் வணங்குவதற்குரிய சிவ சொருபமாக இருந்து குருவானவர் சிறந்த இலட்சியமாகவும், ஆன்மீகத் துறையில் சந்தேகங்களைப் போக்கி நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாகவும் விளங்குகின்றார். சிவ தீட்சை அளித்தவரும் கல்வி போதிப்பவரும் குரு ஆவர். குருவினிடத்தில் அடக்கத் துடனும், பக்தியுடனும் இருந்து கவனமாகக் கேட்க வேண்டும். குருவுக்குச் செய்யும் சேவை மிகச் சிறந்த தொண்டாகும். குருவின் உபதேசப்படி ஒழுகுதல் அவர்க்குச் செய்யும் வழிபாடுகளில் முதன்மையானது. அவரவருடைய குருவை உள்ளன்போடு வழி படுவதுடன், சமயகுரவர், சந்தான குரவர் ஆகியோருக்கும் குரு பூசை செய்து வருவது அவசியமாகும். நாயன்மார்களுள் திரு மூலர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், அப்பூதி அடிகள் ஆகியோர் குருவழிபாட்டால் வீடுபேறு அடைந்தோராவர். சந்தானகுரவர் முதலானோரும் குருவழிபாட்டினால் உயர்பதம் பெற்றவர்கள். அவர்கள் தங்கள் குருவின்பால் கொண்டிருந்த பக்தியையும், மதிப்பையும் தங்கள் நூல்களில் வெளிப்படுத்தியிருப் பதைக் காணலாம்.

இலிங்க வழிபாடு ; சிவபெருமானின் அருவுருவத் திருமேனி கொண்டது சிவலிங்கம். ஞானசோதி வடிவானது. பீடம் சக்தி யையும், இலிங்கம் சிவத்தையும் குறிக்கும். சரியையாளர் இறைவனது உருவத் திருமேனிகளைச் சிவனெனக்கொண்டு வழி படுவர், கிரியையாளர் அருவமாகிய பரம்பொருளே இலிங்கம் முதலிய திருவுருக் கொண்டருளினார் எனத் தெளிந்து மந்திரத் தினால், சிவபெருமானைப் பதித்து வழிபடுவர். யோகிகள் தமது உள்ளத்தில் நிலைத்திருக்கும் இறைவனே சிவலிங்கத் திருமேனி யிலிருந்து பூசை கொண்டருளிபவன் எனத் தெளிந்து வழிபடுவர்.

ஞானிகள் அன்பினால் வழிபடுபவர். இவர்களுள் சரியையாளருக்கு வெளிப்படாது நின்றும், கிரியையாளருக்கும் யோகிகளுக்கும் அவர்கள் விரும்பிய வடிவாய்த் தோன்றி நின்றும், ஞானிகளுக்கு அவர்களது அன்பே தாமாகி எப்போதும் வெளிப்பட்டு நின்றும் சிவபெருமான் அருள் செய்வார். நாயன்மாருள் சேரமான் பெருமான், சாக்கிய நாயனார்,கலிக்காமர், பூசலார் முதலானோர் இலிங்க வழிபாடு செய்து வீடுபேறடைந்தவர்கள்.

சிவலிங்கம் - பரார்த்தலிங்கம் அல்லது தாவரலிங்கம் எனவும்; ஆன்மார்த்தலிங்கம் அல்லது இட்டலிங்கம் எனவும் இருவகைப் படும். திருக்கோயில்களில் நிலையாகத் தாபிக்கப்படுவது பரார்த்தலிங்கம். தானே தோன்றியதாயின் சுயம்புலிங்கம் எனப் படும். அவரவர் உபதேசப்படி பூசிக்கும் சிவலிங்கம் ஆன்மார்த்த லிங்கம் எனப்படும். அது சுவர்ணலிங்கம், படிகலிங்கம், இரத்தின லிங்கம், சைவ லிங்கம் என பல்வகைப்படும். ஆன்மார்த்த பூசை ஆயுட்காலம் முழுவதும் செய்தற்குரியது. அங்கவீனம், பிணி முதலியன இல்லாதவர்களாயும், சிவபூசா விதிகளையறிந்து அனுட்டிக்கவல்லவராயும் உள்ளவர்களே முன்னர் கூறிய இலிங்கங்களைப் பிரதிட்டை செய்து வழிபடுவதற்குரியவர்கள். ஏனையோர், பூசித்தவுடன் ஆற்றிலேனும், குளத்திலேனும் விடப் படும் சணிகலிங்க பூசையே செய்தற்குரியவர், சணிக லிங்கம் என்பது மண். அரிசி, அன்னம், ஆற்று மணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்கம், சந்தனம், சர்க்கரை, மா முதலிய வற்றுள் ஒன்றால் சிவலிங்க வடிவாய் அமைத்துப் பூசிக்கப்படுவது.

சங்கம வழிபாடு :—சிவபெருமானிடம் மெய்யன்பு பூண் டொழுகும் சிவனடியார் திருக்கூட்டம் சங்கமம் எனப்படும். சிவனடியார் சிவபெருமானை நினைக்கும்போதும், அவரைப்பற்றிக் கேட்கும்போதும், திருமேனியைக் காணும்போதும், தம்மை மறந்து, தம்நாமம் இழக்கும்நிலை அடைவர். சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்தும் அவரது புகழ் பாடியும், திருவைந் தெழுத்தை ஓதியும் இன்புறுவர். சிவச்சின்னங்களை அணிவர். இத்தகைய சிவனடியார்களை வணங்குவது சங்கம வழிபாடாகும். நாயன்மார்களுள் திருநீலகண்டர், இயற்பகையார், சிறுத் தொண்டர், இளையான்குடி மாறனார் முதலியோர் சிவனடியார் களை வழிபட்டு வீடுபேறு எய்தியவர்களாவர். ''அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய்'' என்று வேண்டுகின்றார் மாணிக்கவாசகர், ''ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்

கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில், அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'' என்கிறார் வாகீசப்பெருமான். திருத்தொண்டத்தொகையில் ஒவ்வொரு நாயன்மாரையும் புகழ்ந்து அவர்களுக்குத் தாம் அடியாரெனக் கூறுவதோடு, அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கெல்லாம் தம்மை அடியாரென வும் கூறிக் கொள்கிறார் சுந்தரர்.

4. சங்க இலக்கியங்களில் சமயக் கோட்பாடுகள்

தொல்காப்பியம்

இறை :—தொல்காப்பியத்தில் சிவபெருமான் எனும் பெயர் நேரிடையாகக் காணப்பெறவில்லை. எனினும் கடவுள் என்ற பெயர் பல இடங்களில் காணப்படுகிறது. கடவுள் என்ற சொல்லே சிவபெருமானைக் குறிக்கும். ''புல்லிலை எருக்கமாயினும் உடையவை கடவுள் பேணேம் என்னா வாங்கு'' என வரும் புறப் பாடலால் இவ்வுண்மை அறியப்படும், இப்பெயர்,

காமப்பகுதி கடவுளும் வரையார் (புறத். 81) 22

கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே (புறத். 85) 26

ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும் (பொருள் 144)-கற்பியல் 4

எனப் பல இடங்களிலும் வருகின்றன. இவையன்றித் தெய்வம் எனும் சொல்லும் பல இடங்களில் வருகின்றன. ''பால்வரை தெய்வம், தெய்வம் அஞ்சல்'' என்பன காண்க. இவ்வாறு கூறப் பெறும் இறை இலக்கணத்தையும்

வினையின் நீங்கி விளங்கிய அறிவன்
முனைவன் மரபியல் 96.

என வரும் தொடர் விளக்கி நிற்கின்றது. இதனால் இறைவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கியோன் என்பதும், முற்றுணர்வு உடையவன் என்பதும் தெரிகின்றன.

வினை

ஒன்றே வேறே என்று இரு பால்வயின்
(தொல் 90) - களவியல் 2

பொறியின் யாத்த புணர்ச்சி (பொருள் 109)
வினையே பூதம் தொல் : களவியல் : 21 : 17
வினையின் நீங்கி தொல் ; சொல் ; கிளவி : 57

உயிர்

தொன்மை ; தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும்
(பொருள் : 75) - புறத் : 17

பல என்பது :

(1) எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது-பொருளியல் 27

(2) ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாக உயிர்களை வகுத்துள்ளமை
மரபியல் : 27-32

திருக்குறள்

இறை

திருக்குறளிலும் சிவபெருமான் என நேரிடையான சொல்லாட்சி இல்லை. எனினும் சிறப்பென்னும் செம்பொருள் எனும் தொடர் அப்பெருமானைக் குறிப்பதாகக் கருதலாம்.

இறையியல்பு

வாலறிவன்	கடவுள் வாழ்த்து	2
மலர்மிசை ஏகினான்	,,	3
வேண்டுதல் வேண்டாமை இலான்	,,	4
பொறிவாயில் ஐந்தவித்தான்	,,	6
தனக்குவமை இல்லாதான்	,,	7
அறவாழி அந்தணன்	,,	8
எண்குணத்தான்	,,	9
இறைவன்	,,	10

இப்பெயர்கள் இறையியல்பை மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் குறிப்பிடுகின்றன, உயிர்கள் இறைவனைச் சார்ந்து வீடுபேறு அடைவதற்குரிய உரிமை உடையன. இதனை,

சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய் - என்பதனால் அறியலாம்.
மெய்யுணர்தல் 356

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. துறவு : 350

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி மெய்யுணர்தல் 356

"புக்கில் அமைந்தின்று கொல்லோ" - என்பனவற்றான் பாச நீக்கமும் சிவப்பேறுமே உயிர்கள் பெறற்குரியன என்பதைத் தெரிவிப்பனவாம், நிலையாமை 340

வினை

இருள்சேர் இருவினை கடவுள் வாழ்த்து 5

நன்றாங்கால் நல்லவாக் காண்பவன் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன் ஊழ் 379

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும். தீவினையச்சம் 207

ஆணவம்

' நில்லா தவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவு''
நிலையாமை 331

''யான் எனது என்னும் செருக்கறுப்பான்''

கன்மம்

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய் செய்யார்
நோய்இன்மை வேண்டு பவர் (இன்னாசெய்யாமை 320)

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (ஊழ் 377)

மாயை

பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள்
(மெய்யுணர்தல் 351)

''மயங்கி வலைப்பட்டார் மற்றை யவர்''. (துறவு 348)

உயிர்

உயிர் என்றும் நிலைத்திருப்பது
மன்னுயிர் - எனப் பல இடங்களில் வருகின்றன
துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து

இறந்தாரை எண்ணிக்கொண் டற்று - இதனால் உயிர்கள் பலவாதல் பெறப்படும். (நீத்தார் பெருமை 22)

உயிர் என்றும் அழியாதது

பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர் (பொழுது கண்டிரங்கல் 1230)

பிற இலக்கியங்கள்

சிவ பெருமான் : இப் பெயர் சங்க இலக்கியங்களில் குறிக்கப் படவில்லை. எனினும இப் பெருமானுக்குரிய முதன்மை. வடிவு, நலன், ஆற்றல் முதலிய அனைத்தும் குறிக்கப்பெற்றுள்ளன.

முதன்மை

'நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலா'
(சிலம்பு : ஊர் : 29)

'மழுவாள் நெடியோன் முதலாக'

(மதுரைக்காஞ்சி; 455)

பிறப்பிலன்

'பிறவா யாக்கைப் பெரியோன்'

(சில: இந்திர; 169)

முக்கண் உடைமை

பிறை நுதல் முக்கண்ணான் (முல்லைக்கலி)—4 ; 11-12

முக்கட் செல்வர்-புறம் ; 6

பிறை அணிந்தமை

குழவித் திங்கள் இமயவர் ஏத்த

(சிலம்பு; மனையறம்படுத்த காதை ; 38)

சடையும் கங்கையும்

'விரிசடை பொறை ஊழ்த்து விழுநிகர் மலர் ஏய்ப்பத்
தண்ணிறந் தாங்கிய தனிநிலைச் சதாரி (பரிபாடல்) 9

'நன்றாய்ந்த நீள் நிமிர் சடை
முது முதல்வன். (புறம்; 166)

மணிமிடறு

'நீல மணிமிடற்று ஒருவன்' (புறம்) 91 ; 6

'மணிமிடற்றண்ணல்' (பரி ; 9 : 5-7)

காத்தும் படைத்தும் கரந்தும் செயற்படுத்துதல்:

தொல்லூழி தடுமாறி தொகல் வேண்டும் பருவத்தால்
பல்வயின் உயிரெல்லாம் படைத்தான்கண்
பெயர்ப்பான்போல் (கலித்தொகை) நெய்தல்; 2

சிவபெருமானே அழித்தற் கடவுள்:

கொலைவன் சூடியகுழவித் திங்கள்

(கலித்தொகை) முல்லை ; 3-15

உமையொரு கூறன்

உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்

(திருமுருகு) ; 153

பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்

(பரிபாடல்) 5 : 27

ஆனேறு ஊர்தியும் கொடியும் ஆதல்

'ஆனேறு ஊர்ந்தோன் அருளில் தோன்றிய'' (சிலம்பு)

'ஆனேற்றுக் கொடியோன்' (கலித்தொகை) பாலை ; 25

நஞ்சு உண்டது

காரி உண்டிக் கடவுள் (மலைபடுகடாம்) 81-82

முப்புரம் எரித்தது

ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றி (புற) 55 ; 1-5

மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன் (திருமுருகு) 152

நாகம் நாணா மலைவில்லாக மூவகை ஆரெயில் ஓர்
அழல் அம்பின் முனிய (பரி) 5 ; 24-25

ஆலின் கீழ் அறமுரைத்தது

ஆலமுற்றம் கவின் பெறத் தைஇய (அகம் 181)
ஆலமர் செல்வர்க்கு (சிறுபாணாற்றுப்படை) 95
ஆலமர் செல்வன் மகன் விழாக் கால்கோள்
(மணிமேகலை) மலர்வனம் புக்க காதை 144

இராவணன் கயிலையை எடுத்தது

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை இருந்தனனாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்புலி தடக்கையின் கீழ்ப்புகுந்து—அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல (குறிஞ்சிக்கலி) 2

உயிர் நிலைபேறு உடையது

மன்னுயிர் காக்கும் இம்மன்னனும் (கலி 141)

மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும்.
(பெரும்பாணாற்றுப் படை) 30

உயிரின் பழமை

நின்னொடு தொன்று மூத்த உயிரினும் (புறம் 24)

மறுபிறப்பு உண்மை

'இம்மை மாறி மறுமை யாயினும்' (குறுந்தொகை 49)
'சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்
பிறப்பு பிறிதாகு வதாயின்
மறப்பேன் கொல் என்நெஞ்சத் தவரே (நற் 397)
இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றே (குறள்)
புலவி நுணுக்கம் ; 1315

இம்மை மறுமை

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மருவின்றி எய்தும் (அகம் 66)

விளை

'இருமை வினையும் மீள' (பரிபாடல்) திரு ; 13

'புலிவழங்கு அத்தம் சென்ற காதலர் நல்வினை' (நற்) 107

'ஆறு எதிர்ப்படுதலும் நோற்றதன் பயனே' (பொருநராற்றுப்படை) 59

'செல்வமன்று தன் செய்வினைப் பயனே' (நற் 210)

'கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கின். பெயர்பு பெயர்பு உறையும்
அன்ன பொருள் (கலி 21)
செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை
உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும் (புறம் 38)
செய்வினை மருங்கின் எய்தல் உண்டலின் (புறம் 214)

5. பதினெண் புராணங்கள்

புராணங்கள் மொத்தம் பதினெட்டு, அவை ஐந்து வகைகள் வருமாறு :

1. சிவ புராணங்கள் பத்து :
   (1) சைவபுராணம் (2) காந்தபுராணம்
   (3) இலிங்கபுராணம் (4) கூர்மபுராணம்
   (5) வாமனபுராணம் (6) வராகபுராணம்
   (7) பௌஷிய புராணம் (8) மச்சபுராணம்
   (9) மார்க்கண்டேயபுராணம் (10) பிரமாண்டபுராணம்

2. விஷ்ணு புராணங்கள் நான்கு :
   (1) நாரதீய புராணம் (2) பாகவத புராணம்
   (3) காருடபுராணம் (4) வைணவ புராணம்

3. பிரம புராணங்கள் இரண்டு :
   (1) பிரம புராணம் (2) பதும புராணம்

4. சூரியபுராணம் ஒன்று அது பிரம கைவர்த்த புராணம் என்பதாம்,

5. அக்னி புராணம் ஒன்று. அது ஆக்கினேய புராணம் என்பதாம்.

6. மூன்று சிறந்த சைவப் புராணங்கள்

1. கந்த புராணம்

சிவ புராணங்கள் பத்துள் காந்தபுராணம் என்பதும் ஒன்று. அதனைத் தமிழில் அழகாய்ப் பாடியவர் காஞ்சிபுரத்தில் குமரக்

கோட்டத்தில் முருகப் பெருமானைத் தினந்தோறும் பூசிக்கும் பேற்றினைப் பெற்ற கச்சியப்ப சிவாச்சாரியார் ஆவர். இப் புராணம் முருகப்பெருமானின் அருட்சக்தியை விரிவாகக் கூறும். இது கவிதைச் சுவைமிக்கது. சாத்திரக் கருத்துக்கள் செறிந்தது. பயில்தொறும் நூல் நயம் பயப்பது. இறை உணர்வை வளர்ப்பது.

(1) உற்பத்தி காண்டம் (2) அசுரகாண்டம்
(3) மகேந்திரகாண்டம் (4) யுத்தகாண்டம்
(5) தேவகாண்டம் (6) தக்ஷகாண்டம்

என ஆறு காண்டங்களை உடையது.

141 படலங்களை உடையது. மொத்தம் பாடல்கள் 10,345 ஆகும். தினசரிப் பாராயணத்துக்குகந்த நூல். தமிழில் கந்த புராணம் எனப் பெயர் வழங்குகிறது.

(2) பெரிய புராணம்

இதனைத் திருத் தொண்டர் புராணம் எனவும் வழங்குவர். பன்னிரு திருமுறைகளுள் பன்னிரண்டாந் திருமுறையாகவும் இதனைப் போற்றிவைத்துள்ளனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத் தொண்டத் தொகையை அடியொற்றித் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள் திருத் தொண்டர் திரு வந்தாதி பாடினார். முன்னது தொகை. இது வகை. இதனை அடியொற்றிச் சேக்கிழார் சுவாமிகள் செய்த விரிநூலே பெரிய புராணம் ஆகும். அடியார்களின் பெருமையையும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்த சைவ சமய நிலையையும் இந் நூலிலிருந்து தெற்றென உணரலாம். இலக்கிய நயத்துடன் பத்திச் சுவை மிக்கது. இது திருமலைச் சருக்கம் முதல் வெள்ளா னைச் சருக்கம் ஈறாகப் பதின்மூன்று சருக்கங்களைக் கொண்டது. மொத்தம் பாடல்கள் 4286.

3. திருவிளையாடற் புராணம்

இப் புராணத்தைப் பாடியவர் திருமறைக் காட்டில் தோன்றிய பரஞ்சோதி முனிவர் ஆவர். இவர் பதினாறாம் நூற்றாண்டினிறுதி பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் ஆவர். மதுரை ஆலவாய்ச் சொக்கரின் 64 திருவிளை யாடல்களையும் சைவ நலம் சிறக்க இனிய பாக்களாகப் பாடியவர். இப் புராணம் செந்தமிழ் இன்பம் பெருகுவதாய், சொல்நயம் பொருள்நயம், கவிநயம் மிக்குடையதாய் விளங்குவது. பக்திச் சுவையை ஊட்டுவது. இது மதுரைக் காண்டம், கூடற்

காண்டம், திருவாலவாய்க் காண்டம் என முப்பெரும் பிரிவுகளை யுடையது. 64 திருவிளையாடல்களிலும் மொத்தம் 3,363 பாடல்கள் உள்ளன.

64 திருவிளையாடல்களின் குறிப்பைக் கீழே காணலாம்.

(அ) மதுரைக் காண்டம் :

1. இந்திரன் பழி தீர்த்த படலம்.
2. வெள்ளையானைச் சாபம் தீர்த்த படலம்.
3. திருநகரங் கண்ட படலம்.
4. தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்.
5. தடாதகைப் பிராட்டியார் திருமணப் படலம்.
6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்.
7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்.
8. அன்னக் குழியும் வைகையும் அழைத்த படலம்.
9. ஏழுகடல் அழைத்த படலம்.
10. மலயத்துவசனை அழைத்த படலம்.
11. உக்கிரகுமார பாண்டியன் திருவவதாரப் படலம்
12. உக்கிர பாண்டியனுக்கு வேல், வளை, செண்டு கொடுத்த படலம்.
13. கடல் சுவற வேல்விட்ட படலம்,
14. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்.
15. மேருவைச் செண்டால் அடித்த படலம்.
16. வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்த படலம்.
17, மாணிக்கம் விற்ற படலம்.
18. வருணன் விட்ட கடலை வற்றச்செய்த படலம்.

(ஆ) கூடற்காண்டம் :

19. நான்மாடக் கூடலான படலம்.
20. எல்லாம்வல்ல சித்தரான படலம்.
21. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்.
22. யானை எய்த படலம்.
23. விருத்த குமார பாலரான படலம்.
24. கால்மாறியாடின படலம்.
25. பழியஞ்சின படலம்.
26. மாபாதகம் தீர்த்த படலம்.
27. அங்கம் வெட்டின படலம்,
28. நாக மெய்த படலம்-
29. மாயப் பசுவை வதைத்த படலம்.

30. மெய்க் காட்டிட்ட படலம்.
31. உலவாக்கிழி அருளிய படலம்.
32. வளையல் விற்ற படலம்.
33. அட்டமா சித்தி உபதேசித்த படலம்.
34. விடை யிலச்சினையிட்ட படலம்.
35. தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம்.
36. இரசவாதஞ் செய்த படலம்.
37. சோழனை மடுவில் வீட்டிய படலம்.
38. உலவாக் கோட்டை அருளிய படலம்.
39. மாமனாக வந்து வழக்குரைத்த படலம்.
40. வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்.
41. விறகு விற்ற படலம்.
42. திருமுகம் கொடுத்த படலம்.
43. பலகை இட்ட படலம்.
44. இசை வாது வென்ற படலம்.
45. பன்றிக்குட்டிகளுக்கு முலைகொடுத்த படலம்.
46. பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்.
47. கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்.
48. நாரைக்கு முத்தி கொடுத்த படலம்.

(இ) திருவாலவாய்க் காண்டம் :

49. திருவாலவாயான படலம்.
50. சுந்தரப் பேரம்பெய்த படலம்.
51. சங்கப் பலகை கொடுத்த படலம்.
52. தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம்.
53. கீரனைக் கரை யேற்றிய படலம்.
54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்.
55. சங்கத்தார் கலகந் தீர்த்த படலம்.
56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்.
57. வலை வீசின படலம்.
58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்.
59. நரி பரியாக்கிய படலம்.
60. பரி நரியாக்கிய படலம்.
61. மண் சுமந்த படலம்.
62. பாண்டியன் சுரந்தீர்த்த படலம்.
63. சமணரைக் கழுவேற்றிய படலம்.
64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்.

7. கோயில்களில் அலங்காரம் தீபாராதனையின்போது காட்டப்படும் பல்வகை தீபங்களின் பெயர்கள்

(1) தூபம் ; (2) ஐந்தடுக்குள்ள அலங்கார தீபம் ; (3) மூன்றடுக்குள்ள அலங்கார தீபம்; (4) நாக தீபம்; (5) ரிஷப தீபம்; (6) புருஷ தீபம்; (7) நக்ஷத்திர தீபம்; (8) யானை தீபம் (9) அன்ன தீபம்; (10) குதிரை தீபம்; (11) மயில் தீபம்; (12) ஐந்து தட்டுடன் கூடிய பூர்ண கும்ப தீபம்; (13) கோழி தீபம்; (14) சிங்க தீபம்; (15) கற்பூர ஆரத்தி; (16) மேரு தீபம்; (17) ஏழுகிளை கற்பூர ஆரத்தி; (18) உபசாரங்கள் ; குடை, கொடி,விசிறி, கண்ணாடி, சுருட்டி, அப்தாகிரி, சாமரம், அர்க்கிய பாத்திரம் முதவியன.

8. கற்பூர ஆரத்தி செய்வதன் தத்துவம்

கற்பூரம் வெண்மையானது. அது சுத்த தத்துவ குணமுள்ள ஆன்மாவைக் குறிக்கும். கற்பூரத்தை ஏற்றியவுடன் அது தீபம் போல எரிவது ஞானாக்கினியால் மலம் நீங்கப்பெற்ற ஆன்மா வானது சிவ கரணம் பெற்று நிற்பதைக் காட்டும். கற்பூரம் இறுதியில் ஒன்றுமின்றிக் கரைந்து போவதுபோல ஆன்மாவானது சரீரங்களெல்லாம் நீங்கி இறைவனோடு ஒன்றுபடும். இதைக் காட்டுவதே கற்பூர தீபாராதனையின் தத்துவம்.

9. தேங்காய் உடைப்பதன் தத்துவம்

தேங்காயின் புற ஓடு மாயை எனவும், உள்ளே உள்ள வெண்ணிறப் பகுதி இறைவன் எனவும். இளநீர் இறைவனின் பரமானந்த அமிர்தம் (அருள் சக்தி) எனவும் கூறுவர், மாயையை அகற்றி (பிளந்து) உயிர் இறையருளை நுகரச்செய்யும் செயலைக் காட்டுவதே தேங்காய் உடைப்பதன் பொருளாகும்.

10. வணக்கத்தின் வகைகள்

1. ஏகாங்க நமஸ்காரம் : தலை மட்டும் குனிந்து வணங்குதல்

2. திரியங்க நமஸ்காரம்: தலை மேல் இருகரம் கூப்பி வணங்குதல்.

3. பஞ்சாங்க நமஸ்காரம் : கையிரண்டு, முழந்தாள் இரண்டு, சிரம் ஆக ஐந்தும் நிலம் பொருந்த வணங்குதல்.

4, ஷடாங்கம் : தலை, இருகை, மார்பு, முழந்தாள் இரண்டு பூமியில் பட வணங்குதல்.

5. அஷ்டாங்க நமஸ்காரம் : தலை, கையிரண்டு, இரு செவிகள், இரு முழந்தாள், மார்பு இவை பூமியில் படும்படி வணங்குதல்.

11. ஆசனங்களின் பெயர்கள்

(1) பத்மாசனம், (2) சித்தாசனம், (3) சுவஸ்திகாசனம், (4) சுகாசனம், (5) சிரசாசனம், (6) சர்வாங்க ஆசனம், (7) மத்சாசனம். (8) புஜங்காசனம், (9) தனுர் ஆசனம், (10) மயூராசனம். (11) திரிகோணாசனம், (12) சவாசனம், (13) அர்த்த மத்ஸ்யேந்திராசனம், (14) ஹாலாசனம், (15) சலபாசனம், (16) பஸ்சிமோத்தானாசனம், (17) யோகமுத்திரா, (18) பாதஹஸ்தாசனம், (19) உட்டியாணா. (20) நௌலி முதலியன.

12. நடராஜ அபிஷேகம்

1. சித்திரை-திருவோணம்—உச்சிக்காலம்.

2. ஆனி-உத்திரம்—பிரதோஷ காலம் (திருவந்திக்காப்பு—முதல் காலம்),

3. ஆவணி-சுக்கிலபட்ச சதுர்த்தசி திதி—சாயரட்சை 2ம் காலம் சமகாலம்.

4. புரட்டாசி-சுக்கிலபட்ச சதுர்த்தசி திதி—அர்த்த சாமம்.

5. மார்கழி-திருவாதிரை—உஷக் காலம் (விடியல்).

6. மாசி-சுக்கிலபட்ச சதுர்த்தசி—காலசந்தி,

சித்திரையில் ஓணமுதல் சீரானி உத்திரமாம்
சத்ததனு ஆதிரையும் சார்வாகும்—பத்திமன்னும்
மாசியரி கன்னி மருவு சதுர்த்தசி
ஈசர்அபி டேகதின மாம்.

13. ஏழு வகை இசைகள்

(1) குரல், (2) துத்தம், (3) கைக்கிளை, (4) உழை. (5) இளி, (6) விளரி, (7) தாரம்.

14. ஏழு வகைத் தாளங்கள்

(1) துருவம் (2) மட்டியம், (3) ரூபகம், (4) சம்பை, (5) திரிபுடை, (6) ஹடதாளம், (7) ஏகதாளம்.

15. ஐவகை இசைக் கருவிகள்

(1) தோற் கருவி, (2) துளைக் கருவி, (3) நரம்புக்கருவி, (4) கஞ்சக் கருவி, (5) கண்டக் கருவி.

16. தேவாரப் பண்களுக்குத் தற்போது வழங்கப்படும் பெயர்கள்

	தேவாரப் பண்	தற்போது வழங்கப்படும் பெயர்கள்
1.	செவ்வழி	யதுகுல காம்போதி
2.	தக்கராகம்	காம்போதி
3.	புற நீர்மை	பூபாளம்
4.	பஞ்சமம்	ஆகிரி
5.	நட்டப்பாடை	நாட்டை
6.	ஆந்தாளிக் குறிஞ்சி	சாமா
7.	காந்தாரம்	நவரோஸ்
8.	பழம்பஞ்சுரம்	சங்கராபரணம்
9.	மேகராகக் குறிஞ்சி	நீலாம்பரி
10.	கொல்லிக்கௌவாணம்	நவரோஸ்
11.	பழந்தக்கராகம்	ஆரபி
12.	குறிஞ்சி	குறிஞ்சி
13.	நட்டராகம்	பந்துவராளி
14.	வியாழக் குறிஞ்சி	சௌராஷ்டிரம்
15.	செந்துருத்தி	மத்யமாவதி
16.	தக்கேசி	காம்போதி
17.	கொல்லி	நவரோஸ்
18.	இந்தளம்	நாதநாமக்கிரியை
19.	காந்தாரபஞ்சமம்	கேதாரகௌளம்
20.	கௌசிகம்	பைரவி
21.	பியந்தைக் காந்தாரம்	நவரோஸ்
22.	சீகாமரம்	நாதநாமக்கிரியை
23.	சாதாரி	பந்துவராளி
24.	திருக்குறுந்தொகை	மாயாமாளவகௌளம்
25.	திருத்தாண்டகம்	ஹரிகாம்போதி
26.	திருநேரிசை	அரிகாம்போதி
27.	திருவிருத்தம்	பைரவி
28.	திருவிசைப்பா	ஆனந்தபைரவி

17. பதினெண் சித்தர்கள்

	சித்தர்கள்	சமாதிநிலை தலங்கள்
1.	நந்திசர்	காசி
2.	போகர்	பழநி
3.	திருமூலர்	சிதம்பரம்
4.	பதஞ்சலி	சேது
5.	தன்வந்திரி	வைத்தீஸ்வரன்கோயில்
6.	கரூர் சித்தர்	கரூர்
7.	சுந்தரானந்தர்	மதுரை
8.	மச்ச முனிவர்	திருப்பரங்குன்றம்
9.	இராம தேவர்	அழகர் கோயில்
10.	சட்டமுனிவர்	திருவரங்கம் (ஸ்ரீரங்கம்)
11.	கமலமுனிவர்	திருவாரூர்
12.	வான்மீகர்	எட்டிகுடி
13.	குதம்பைச் சித்தர்	மயிலாடுதுறை
14.	பாம்பாட்டிச் சித்தர்	முதுகுன்றம் (விருத்தாசலம்)
15.	இடைக்காட்டுச் சித்தர்	திருவண்ணாமலை
16.	கோரக்கர்	பேரூர்
17.	கொங்கணவர்	திருப்பதி
18.	கும்ப முனிவர்	திருவனந்தபுரம்

18. ஏழு ரிஷிகள் (சப்த ரிஷிகள்)

(1) கௌதமர், (2) பரத்வாஜர், (3) விசுவாமித்திரர், (4) ஜமதக்கினி, (5) வசிஷ்டர், (6) காசிபர், (7) அத்திரி.

19. ஐங்குரவர்கள்

(1) தந்தை, (2) தமையன், (3) ஆசான், (4) குரு, (5) அரசன்.

20. ஒன்பது தீர்த்தங்கள்

(1) கங்கை, (2) யமுனை, (3) கோதாவரி, (4) நர்மதை, (5) சரஸ்வதி, (6) காவிரி, (7) குமரி, (8) பாலாறு, (9) சரயு.

21. பதினாறு பேறுகள்

(1) புகழ், (2) கல்வி, (3) வலிமை, (4) வெற்றி, (5) நன் மக்கள், (6) பொன்: (7) நெல், (8) நல்லூழ், (9) நுகர்ச்சி, (10) அறிவு, (11) அழகு, (12) நோயின்மை, (13) வாழ்நாள், (14) பெருமை, (15) இளமை. (16) துணிவு.

22. அட்டமா (எண்வகை) சித்திகள்

1. அணிமா — மக்கள் மத்தியில இருந்து கொண்டே அவர் தம் கண்களுக்குப் புலப்படாமை.

2. மகிமா — எல்லா இடங்களிலும் ஒரே காலத்தில் காணப் படல்.

3. லகிமா — உடலை மிகவும் லேசாக்கிக் கொள்ளுதல்.

4. கரிமா — உடலை மிகவும் கனமாக்கிக் கொள்ளுதல்.

5. பிராப்தி — நினைத்த மாத்திரையில் எவர் உதவியுமின்றி எங்கும் செல்லுதல்.

6. பிராகாமியம் — விரும்பிய இன்பம் துய்த்தல்.

7. வசித்வம் — எல்லா உலகங்களையும் தன் வசப் படுத்துதல்.

8. ஈசத்வம் — எல்லாவற்றையும் தன் கட்டளைக்கு கட்டுப் படுத்துதல்.

23. ஒன்பான் சுவை (நவரசங்கள்)

(1) இன்பம் (சிங்காரம்), (2) நகைச்சுவை, (3) கருணை, (4) கோபம், (5) வீரம், (6) பயம், (7) அருவருப்பு, (8) அற்புதம் (9) சாந்தம்.

24. அறுசுவை

(1) இனிப்பு, (2) புளிப்பு, (3) உவர்ப்பு, (4) துவர்ப்பு. (5) கார்ப்பு, (6) கைப்பு.

25. சைவ விரதங்கள்

மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு, உணவை விடுத்தேனுஞ், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும், கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும். ஆன்மா ஈடேற எண்ணிச் செய்யும் சாதனை ஆகும். விரதம் "நோன்பு" என்றுங் கூறப்படும். ஆன்றோர் அருளிச் செய்த புண்ணியம் ஏழினுள் ஒன்று விரதம் அநுட்டித்தல். விரதம் அநுட்டிப்பதனால் மனம், புத்தி முதலிய உட்கருவிகள் தூய்மை அடையும். இதனால் ஞானம் கைக்கூடும்.

சிவ விரதங்கள்

சோமவார விரதம் : கார்த்திகை மாதம் சோம வாரங்களில் அநுட்டிக்கப்படுவது. இதில் உபவாசம் உத்தமம். இது கூடாதவர் இரவில் மட்டுப் ஒருபொழுது உண்ணலாம். பன்னிரண்டு மாதங்களிலும் அநுட்டிக்க இயலாதவர் கார்த்திகை மாதத்தின் சோம வாரங்களில் அநுட்டிக்கக் கடவர்.

திருவாதிரை விரதம் : மார்சழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்திலே சபாநாயகரைக் குறித்து அநுட்டிக்கும் விரதம்.

இவ்விரதம் சிதம்பரத்திலே இருந்து அநுட்டிப்பது சிறந்தது.

உமாமகேசுவர விரதம் : கார்த்திகைத் திங்கள் பௌர்ணமியில் உமாமகேசுவர மூர்த்தியைக் குறித்து அநுட்டிப்பதாம்.

சிவராத்திரி விரதம் : மாசி மாதத்துக் கிருஷ்ண பட்சம் சதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக் குறித்து அநுட்டிப்பது. இதில் உபவாசஞ் செய்து நான்கு யாமமும் நித்திரையின்றிச் சிவபூசை செய்தல் வேண்டும். நித்திரையின்றி பஞ்சாட்சரத்தைச் செபித்துக் கொண்டு, சிவபுராண சிரவணமும் செய்து நான்கு யாமமும் சிவாலய தரிசனம் பண்ண வேண்டும்.

கேதார விரதம் : புரட்டாசித் திங்களில் சுக்கிலபட்ச அட்டமி முதல் இருபத்தொரு நாள்கள் கேதார நாதரைக் குறித்து அநுட்டிப்பது,

கலியாண சுந்தர விரதம் : பங்குனித் திங்கள் உத்திர நட்சத்திரத்தில் கலியாண சுந்தர மூர்த்தியைக் குறித்து அநுட்டிப்பது.

சூல விரதம் : தைமாத அமாவாசையில், இச்சாஞானக் கிரியா சக்தி வடிவாகிய சூலாயுதத்தைத் தரித்த சிவபெருமானை குறித்து அநுட்டிப்பது.

இடப விரதம் : வைகாசி மாதம் சுக்கில பட்ச அட்டமியிலே இடபவாகனாரூடராகிய சிவபெருமானைக் குறித்து அநுட்டிப்பது.

பிரதோஷ விரதம் : சுக்கில பட்சம், கிருஷ்ணபட்சம் என்னும் இரண்டு பட்சத்தும் வருகின்ற திரயோதசி திதியிலே, சூரிய அஸ்தமனத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும், பின் மூன்றே முக்கால் நாழிகையும் உள்ளகாலம் பிரதோஷ காலம். சிவபெருமானைக் குறித்து அநுட்டிப்பது. பகலிலே உணவு உட்கொள்ளாது பிரதோஷகாலம் தொடங்க ஒரு நாழிகைக்கு

முன்னரே நீராடி, சிவபூசை செய்து, திருக்கோயில் சென்று சிவதரிசனம் செய்து கொண்டு பிரதோஷ காலங் கழிந்த பின் சிவனடியாரோடு உணவு உட்கொள்ள வேண்டும். பிரதோஷ காலத்தில் உணவு உண்டல், உறங்கல், நீராடல் முதலியன செய்யக்கூடாது. பிரதோஷ காலத்தில் நியமமாக மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்துவரின் கடன், வறுமை, நோய், பயம், மரண வேதனை, பாவம் முதலியன நீங்கும்.

துன்புறும் மக்கள் இன்பம் அடையும் பொருட்டு உமாதேவி யார் காண ஒரு சாம நேரம் (ஏழரை நாழிகை) சிவபெருமான் திருநிருத்தம் செய்தருளினார். அந்தக் காலமே பிரதோஷகால மெனச் சிவாகமங்களில் சொல்லப்படுகிறது. அன்று சிவாலயங் களில் சிவலிங்க மூர்த்திக்கும் நந்தியெம் பெருமானுக்கும் ஒரே காலத்தில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பிரதோஷ நாயகர் இடப வாகனத்தில் எழுந்தருளுவார். அக்காலத்தில் சிவன் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவோர்கள் எல்லா நலன்களையும் அடைவார்கள்.

பிரதோஷம் என்பது முற்பிறப்பில் செய்த குற்றம் நீக்கம். சனிக்கிழமை வரும் பிரதோஷம் சனிமகா பிரதோஷம் சிறப்பு வாய்ந்தது.

தேவி விரதம்

சுக்கிரவார விரதம் : சித்திரை மாதம் சுக்கிரவாரந் தோறும் பார்வதி தேவியாரைக் குறித்து அநுட்டிப்பது.

ஐப்பசி உத்திர விரதம் : ஐப்பசி உத்திரம் நட்சத்திரத்தில் அநுட்டிப்பது.

நவராத்திரி விரதம் : புரட்டாசி சுக்கில பட்சம் பிரதமை முதல் ஒன்பது நாளும் பார்வதி தேவியாரைக் கும்பத்திலே பூசை செய்து அநுட்டிப்பது.

விநாயகர் விரதம்

சுக்கிரவார விரதம் : வைகாசி சுக்கிர வாரம் தோறும் விநாயகக் கடவுளைக் குறித்து அநுட்டிப்பது.

விநாயக சதுர்த்தி : ஆவணி சுக்கில பட்சம் சதுர்த்தியில் விநாயகரைக் குறித்து அநுட்டிப்பது.

விநாயக ஷட்டி விரதம் : கார்த்திகை மாதம் கிருஷ்ணபட்சம் பிரதமை முதல் இருபத்தொரு நாள் அநுட்டிப்பது.

சுப்பிரமணிய விரதம்

சுக்கிரவார விரதம் : ஐப்பசி மாதம் சுக்கிர வாரந்தோறும் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுட்டிப்பது.

கார்த்திகை விரதம் : கார்த்திகை நட்சத்திரம் தோறும் அநுட்டிப்பது.

கந்தசட்டி விரதம் : ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் பிரதமை முதல் சட்டியீறாக ஆறு நாளும் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுட்டிப்பது: ஆறு நாளும் உபவாசம் செய்வது உத்தமம்.

26. (அ) சைவ நூல்களை அருளிச் செய்த அருளாளர்கள்

(திருமுறையாசிரியர்கள் நீங்க)

1. தமிழ்ப்பாட்டி ஔவையார்
2. குருஞானசம்பந்தர்
3. சிவப்பிரகாச சுவாமிகள்
4. குமரகுருபர சுவாமிகள்
5. தாயுமான சுவாமிகள்
6. கச்சியப்ப சிவாச்சாரியார்
7. கச்சியப்ப முனிவர்
8. பரஞ்சோதி முனிவர்
9. மாதவச் சிவஞான சுவாமிகள்
10. சாந்தலிங்க சுவாமிகள்
11. சிதம்பர சுவாமிகள்
12. சிற்றம்பல நாடிகள்
13. வாகீச முனிவர்
14. சம்பந்த முனிவர்
15. அருணகிரி நாதர்
16. தண்டபாணி சுவாமிகள்
17. அருட்பிரகாச வள்ளலார்
18. அபிராமிப் பட்டர்
19. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்
20. பாம்பன் சுவாமிகள்

(அ) சுத்த சைவ பதினெண் ஆதீனங்கள்

1. திருவாவடுதுறை ஆதீனம்
2. காஞ்சிபுரம் ஞானப்பிரகாசராதீனம்

3. தருமபுரம் ஆதீனம்
4. சூரியனார் கோயில் ஆதீனம்
5. ஆகமச் சிவப்பிரகாசராதீனம் (சிதம்பரம்)
6. செங்கோலாதீனம் (பெருங்குளம்-திருநெல்வேலி)
7. திருஞான சம்பந்தராதீனம்-மதுரை
8. திருவண்ணாமலை ஆதீனம்-குன்றக்குடி
9. இராமேச்வராதீனம்
10. நீலப்பாடி ஆதீனம் (தஞ்சாவூர்)
11. தாயுமான சுவாமிகளாதீனம்
12. சாரமாமுனி ஆதீனம் (திருச்சி)
13. சொர்க்கபுர ஆதீனம் (அம்பர் மாகாளம்)
14. வேளாகுறிச்சி ஆதீனம் (திருவாரூர்)
15. வள்ளலார் ஆதீனம் (சீர்காழி)
16. வருணை ஆதீனம் (வேதாரணியம்)
17. நாய்ச்சியார் கோயிலாதீனம் (கும்பகோணம்)
18. நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம் (துழாவூர்)

(அபிதான சிந்தாமணி)

27. (ஆ) தற்போதுள்ள சைவத் திருமடங்கள்

1. திருவாவடுதுறை ஆதீனம்
2. தருமபுர ஆதீனம்
3. திருப்பனந்தாள் காசிமடம்
4. காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம்.
5. குன்றக்குடி (திருவண்ணாமலை) ஆதீனம்
6. மதுரை (திருஞான சம்பந்தர்) ஆதீனம்-
7. கௌமார மடாலயம், கோவை.
8. பொம்மபுரம் ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகள் மடம்
9. மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் மடம்.
10. நல்லாற்றூர் சிவப்பிரகாச தேசிகர் மடம்.
11. பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் மடம்.
12. விருத்தாசலம் குமார தேவர் மடம்.
13. திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் மடம்.
14. திருவண்ணாமலை குகை நவசிவாயர்
குரு நமசிவாயர் மடங்கள்,
15. திருக்கோவிலூர் ஞானியார் மடம்.
16. கும்பகோணம் சாரங்க தேவர் மடம்.

17. திருத்தணிகை கந்தப்பையர் மடம்.
18. சிதம்பரம் மௌன தேசிகர் மடம்.
19. சிதம்பரம் ஈசானிய மடம்.
20. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் மடம்.

28. பல்லாண்டு சைவப்பணி புரிந்த நிறுவனங்கள்

1. சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை.
2. சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி.
3. சிவனடியார் திருக்கூட்டம், சென்னை.
4. பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை, சென்னை.
5. பாகம் பிரியாள் மாதர் கழகம், தூத்துக்குடி.
6. திருவள்ளுவர் கழகம், லால்குடி
7. சைவ சித்தாந்த சபை, பூவாளூர்
8. சைவ சித்தாந்த சபை, திருச்சிராப்பள்ளி.
9. சைவ சித்தாந்த சபை, சங்கரன் கோயில்.
10. மணிவாசகக் மன்றம், அரியலூர்.
11. பன்னிரு திருமுறை மன்றம், மதுரை.
12. திருவள்ளுவர் கழகம், மதுரை,
13. திருவாலவாய்ச் சைவ சித்தந்த சபை, மதுரை.

29. பல்லாண்டு சைவம் வளர்த்த திங்கள் இதழ்கள்

தமிழ் இதழ்கள்

	பெயர்	நடத்தும் நிறுவனம்
1.	சித்தாந்தம்	சைவ சித்தாந்தப் பெருமன்றம். சென்னை
2.	ஞானசம்பந்தம்	தருமை ஆதீனம்
3.	மெய்கண்டார்	திருவாவடுதுறை ஆதீனம்
4.	குமரகுருபரர்	திருப்பனந்தாள் ஆதீனம்
5.	செந்தமிழ்ச்செல்வி	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.
6.	தமிழ்ப் பொழில்	கரந்தைத் தமிழ்ச் சங்கம்.
7.	இராமகிருஷ்ணவிஜயம்	ராமகிருஷ்ண மடம், சென்னை
8.	தர்மசக்கரம்	திருப்பராய்த்துறை தபோவனம்.

ஆங்கில முத்திங்கள் இதழ்

"Saiva Siddhantha" சைவ சித்தாந்தப் பெருமன்றம், சென்னை.

30. பெரு விழாக்கள்

(சைவ அன்பர்கள் வாழ்நாளில் ஒரு முறையேனும் காண வேண்டிய சைவப் பெருவிழாக்கள் வருமாறு)

1. மகாமகம் உற்சவம் (பன்னிரண்டு ஆண்டிற்கொரு முறை), திருக்குடந்தை.
2. சித்திரைத் திருவிழா (மீனாட்சி திருமணம்), மதுரை.
3. திருவாரூர் தேர் விழா.
4. சிதம்பரம் ஆருத்திரா தரிசனம்,
5. திருக்கார்த்திகை தீபம், திருவண்ணாமலை.
6. சப்ததல விழா (திருவையாறு உள்பட ஏழு தலங்கள்).
7. அறுபத்து மூவர் திருவிழா, திருமயிலை, (சென்னை).
8. வைகாசி விசாக விழா, திருச்செந்தூர்.
9. பங்குனி உத்திர விழா, பழநி.
10. படி உற்சவம் விழா, திருத்தணிகை.

31, பக்திப் பாடல்கள்

வேண்டுகோள்

ஈயென்று நான் ஒருவரிடம் நின்று கேளாத
　　இயல்பும், என்னிடம் ஒருவர் ஈது
இடுஎன்றபோது அவர்க்கு இலையென்று சொல்லாமல்
　　இடுகின்ற திறமும், இறையாம்
நீயென்றும் எனைவிடா நிலையும், நான் என்றும் உள்
　　நினைவிடா நெறியும், அயலார்
நிதியொன்றும் நயவாத மனமும், மெய்ந்நிலை
　　என்றும் நெகிழாத திடமும், உலகில்
சீயென்று பேயென்று நாயென்று பிறர்தமைத்
　　தீங்கு சொல்லாத தெளிவும்
திறமொன்று வாய்மையும் தூய்மையும் தந்து, நின்
　　திருவடிக்கு ஆளாக்குவாய்
தாயொன்று சென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
　　தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
　　சண்முகத் தெய்வமணியே,

பண்புடைமை

புண்படா வுடம்பும் புரைபடா மனமும்
 பொய்படா வொழுக்கமும் பொருந்திக்
கண்படா திரவும் பகலு நின் றனையே
 கருத்தில்வைத் தேத்துதற் கிசைந்தேன்
உண்பனே யெனினும் உடுப்பனே யெனினும்
 உலகரை நம்பிலே னெனது
நண்பனே நலஞ்சார் பண்பனே யுனையே
 நம்பினேன் கைவிடே லெனையே

—அருட்பிகாச வள்ளலார்

அன்புடைமை

அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரமுடைத் தக்கன்செய்த மாவேள்வி தீமையாகி
நரரினிற் பாலன்செய்த பாதகம் நன்மையாய்த்தே.

—அருணந்தி சிவம்

அறிவுடைமை

ஞானநூல் தனைஓதல், ஓதுவித்தல்,
நற்பொருளைச் கெட்பித்தல் தான்கேட்டல் நன்றா,
ஈனமில்லாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை.

—உமாபதி சிவம்

சிவகதி

மெய்மையாம் உழவைச் செய்து
 விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப்
 பொறையெனு நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
 தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பா ராகில்
 சிவகதி விளையும் அன்றே.

—அப்பர் பெருமான்

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

—(திருமூலர்)

பஞ்சாட்சரம்

தூலபஞ்சாக்கரம்

நகார மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
எகார முதற் கொண்டொருக்கால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே.

சூக்கும பஞ்சாக்கரம்

சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஓகார முடனே ஒருகாலு ரைக்க
மகார முதல்வன் மதித்து நின்றானே.

—(திருமூலர்)

32. வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

[—திருஞானசம்பந்தர்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

—கச்சியப்ப சிவாச்சாரியார்

சைவ சித்தாந்தப் பெருமன்ற வெளியீடுகள்

(அடக்க விலைப் பதிப்புகள்)

		ரூ.	பை
1.	கூட்டு வழிபாட்டுப் பாமாலை	1	00
2.	பஞ்சபுராணத் திரட்டு	0	70
3.	முப்பொருள் இயல்பு	2	00
4.	சிவாலய வழிபாட்டுப் பாடல் திரட்டு	1	00
5.	முருகன் முந்நூல்	1	50
6.	சமாஜ பவழ விழா மலர்	2	50
7.	சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே	0	50
8.	பெருவிண்ணப்பம்	0	25
9.	கங்கையைச் சடைமேல் வைத்த திருமுறைத் திரட்டு	0	75
10.	சந்தானாச்சாரியார் வரலாறு	0	75
11.	திருமுறைப்பாராயணப் பதிகத்திரட்டு	0	75
12.	திரு.வி.க.வின் சிவஞான பாடிய அணிந்துரை	0	50
13.	போற்றித் திருவகவல்	1	00
14.	அம்மை தோத்திரத் திரட்டு	1	25
15.	முதல் திருமுறை	10	00
16.	முத்து விழா மலர்	10	00
17.	உண்மை விளக்கம் (ஆங்கிலம்)	5	00
18.	திருப்புகழில் சைவசித்தாந்தம்	1	00
19.	சிவபெருமான் திரு மும்மணிக்கோவை உரையுடன்	5	00
20.	திருமுறைத் திருமணம் செய்முறை விளக்கத்துடன்	6	00
21.	சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்	60	00
22.	மழைவேண்டல் பதிகம்	1	25
23.	கால காலர் திருமுறை	1	75
24.	11ஆம் திருமுறை	20	00
25.	நால்வர் அம்மானை	1	00
26.	திருப்பாசூர் பதிகங்கள் (உரையுடன்)	1	00
27.	நமச்சிவாயத் திருப்பதிகங்கள்	1	00
28.	சிவஞானபோதம்—JMN ஆங்கில மொழி பெயர்ப்பு	1	00
29.	திருவலஞ்சுழி மும்மணிக்கோவை உரையுடன்	4	00
30.	சைவ சமய விளக்கம்	1	00

நூல்களை அஞ்சல்வழி பெற விரும்புவோர் நூல் விலையுடன் அஞ்சல் செலவும் சேர்த்து மணி ஆர்டரில் அனுப்பினால் நூல்கள் அனுப்பி வைக்கப்படும் வி.பி.பி. வழி அனுப்ப இயலாது.